விலை : 20.00 Viber : 076 636 3378
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
Valampurii


E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 பங்குனி 03 சனிக்கிழமை (17.03.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 088




# போர்க் குற்றவாளிகளை அரசாங்கம் தண்டிக்காது காப்பாற்றியே விடுவார்கள்

## வடக்கு முதலமைச்சர் விக்னேஸ்வரன் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்) போர்க்குற்றவாளிகளை இலங்கை ஆட்சியாளர்கள் ஒருபோதும் தண்டிக்கமாட்டார்கள். மாறாக காப்பாற்றுவார்கள் என வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார். ஐ.நா மனித உரிமைகள் ஆணையக கூட்டத் தொடர் நடைபெற்று வரும் நிலையில், போரில் பெரிதும் பாதிக்கப்பட்ட வட மாகாண தமிழ் மக்களுடைய பிரதிநிதியான நீங்கள் இலங்கை மீது எப்படியான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என கருதுகிறீர்கள் என ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே முதலமைச்சர் மேற்கண்டவாறு கூறியுள்ளார். (23-ம் பக்கம் பார்க்க...)

## போர்க்குற்றவாளிகளுக்கு தண்டனைக்கு பதிலாக அரசு வெகுமதி அளிக்கிறது

### ஐ.நா மனித உரிமை பேரவையில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவிப்பு



(ஜெனிவா)

இலங்கையின் போர்க்குற்றவாளிகளை தண்டிக்க மறுத்து வரும் தற்போதைய அரசு, அந்த குற்றவாளிகளை பாராட்டியும் வருகின்றது என ஐக்கிய நாடுகள் சபையின் மனிதவுரிமை பேரவையில் சுட்டிக் காட்டியுள்ள தமிழ்த் தேசிய 23☛

## மண்ணெண்ணெய் குடித்த சிறுமி உயிரிழப்பு

### கரணவாயில் சம்பவம்

(கரணவாய்)

மண்ணெண்ணெய் குடித்ததாகத் தெரிவித்து வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட சிறுமி ஒருவர் மரணமடைந்துள்ளதாக வல்வெட்டித்துறை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நாச்சிமார் கோயிலடி கரணவாய் வடக்கைச் சேர்ந்த சிறிதரன் அபிலாஜினி (வயது16) 23☛

## விடுதலையை எதிர்பார்த்திருந்த தமிழ் அரசியல் கைதி கொழும்பில் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

பத்து வருடங்களாக சிறைச்சாலையில் இருந்த தமிழ் அரசியல் கைதி ஒருவர் உடல்நிலை மோசமடைந்த நிலையில் நேற்று முன்தினம் கொழும்பு தேசிய 23☛

## ஐ.நா அலுவலக ஊழியர் பணிப் புறக்கணிப்பால் இலங்கை தொடர்பான விவாதம் ஜெனிவாவில் ரத்து செய்யப்பட்டது

(ஜெனிவா)

ஜெனிவா மனித உரிமை பேரவையில் நேற்று நடைபெறவிருந்த இலங்கை தொடர்பான முக்கிய விவாதம் ரத்து செய்யப்பட்டுள்ளது.

அத்தோடு ஜெனிவா ஐ.நா மனித உரிமைப் பேரவையின் பிரதான அரங்கில் நடைபெற்ற அனைத்து அமர்வுகளும் நேற்று ரத்துச்செய்யப்பட்டுள்ளன. 24☛

## கனடா விபத்தில் வடமராட்சியை சேர்ந்த குடும்பஸ்தர் பலி

(கரணவாய்)

கனடா நாட்டில் இடம்பெற்ற கார் விபத்தில் வடமராட்சி புலோலியைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் பலியாகியுள்ளதாக இங்குள்ள அவருடைய உறவினர்களுக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை நேரப்படி நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை இவ் விபத்து ஏற்பட்டுள்ளது. 23☛

## சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் இலங்கையை நிறுத்த வேண்டும்

### பன்னாட்டு சட்டவாளர் றிச்சாட் ஜே றோஜெர்ஸ் தெரிவிப்பு



(ஜெனிவா)

குற்றங்கள் தண்டிக்கப்படாமல் விடப்பட்டதன் ஆபத்துக்களை இலங்கை தெளிவாக காட்டுகின்றது என தெரிவித்துள்ள பன்னாட்டு சட்டவாளர் றிச்சாட் ஜே றோஜெர்ஸ் இலங்கையை அனைத்துலக குற்றவியல் நீதிமன்றத்துக்கு 23☛

## முல்லைத்தீவு முள்ளியவளை பகுதியில் விடுதலைப் புலிகளால் தயாரிக்கப்பட்ட தமிழன் வகை கைக்குண்டுகள் மீட்பு

(புளிக்கன்குளம்)

முல்லைத்தீவு முள்ளியவளை கொண்டைமடு காட்டுப்பகுதியில் இருந்து ஒரு தொகுதி கைக்குண்டுகளை விசேட அதிரடிப்படையினர் மீட்டுள்ளார்கள். 23☛

## டிப்பருடன் மோட்டார் சைக்கிள் நேருக்கு நேர் மோதி விபத்து

### இருவர் உயிரிழப்பு; சிறுப்பிட்டியில் நேற்றிரவு சம்பவம்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதி சிறுப்பிட்டி பகுதியில் நேற்று இரவு டிப்பர் வாகனத்துடன் மோட்டார் சைக்கிள் நேருக்கு நேர் மோதியதில் இடம்பெற்ற கோர விபத்தில் இளைஞர் ஒருவர் சம்பவ இடத் 24☛

## ஜெனரல் ஜகத் ஜயசூரியவுக்கு எதிராக ஜெனிவாவில் போர்க்குற்ற அறிக்கை

(ஜெனிவா)

யுத்த குற்றவாளிகளுக்கு எதிராக சர்வதேச நீதிமன்ற நடவடிக்கைகள் தொடர்பிலான அனுபவம் மற்றும் புரிந்துரைகள் தொடர்பில் ஜெனிவாவில் வெளியிடப்பட்ட அறிக்கையொன்றில் இலங்கையின் முன்னாள் இராணுவத் தளபதிக்கு எதிராக வெளிநாடுகளில் தொடர்புபட்ட யுத்தக் குற்ற வழக்குகளும் முன்னுதாரணமாக குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு யுத்த குற்றவாளிகள் மற்றும் மனித குலத்திற்கு எதிரான குற்றங்களில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக சர்வதேச நீதிமன்ற நடவடிக்கைகள் தொடர்பில் ஜெனிவாவைத் தளமாகக் 23☛



**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

# சட்டத்தரணி சுகாஸும் ஜெனிவாவுக்கு பயணம்

(யாழ்ப்பாணம்)

ஜெனிவாவில் இடம்பெற்று வரும் ஐக்கிய நாடுகள் மனிதவுரிமை பேரவையின் 37 ஆவது கூட்டத்தொடரில் கலந்துகொண்டு இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் மற்றும் பொறுப்புக் கூறல் தொடர்பான பாதிக்கப்பட்ட மக்களின் கருத்துக்களை சர்வதேச த்தின் மத்தியில் எடுத்துரைப்பதற்காக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் சட்ட ஆலோசகரும் சட்டத்தரணியுமான கே.சுகாஸ் நேற்றைய தினம் ஜெனிவா சென்றுள்ளார்.

இன்றைய தினம் ஜெனிவா சென்றடையும் சட்டத்தரணி சுகாஸ் அங்கு இடம்பெறும் இலங்கை தொடர்பான உப குழு கூட்டங்களில் பங்குபற்றி இலங்கையில் இடம்பெற்ற போர்குற்றங்கள் தொடர்பாக பரப்புரை மேற்கொள்ளவுள்ளார்.

குறிப்பாக இலங்கையின் பொறுப்புக் கூறலானது மற்றும் இனப்படுகொலை தொடர்பாக சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் பாரப்படுத்தப்பட்டு சிறப்பு நீதிமன்ற தீர்ப்பாயம் நியமிக்கப்பட வேண்டும் என்றும் அதே போன்று காணாமல் போனவர்களின் உறவினர்களது கோரிக்கையான, காணாமல் போனவர்கள் அலுவலகத்தை நிராகரித்து சர்வதேச நீதி விசாரணையே அவசியம் ஆகிய கருத்துக்களை அங்கே முன்வைக்கவுள்ளார்.

மனித உரிமைகள் அமைப்புக்களின் கோரிக்கைகளை ஏற்று ஜெனிவா செல்லும் சட்டத்தரணி சுகாஸ் மேற்கண்ட விடயங்களை அங்குள்ள சர்வதேச சமூகத்திடம் வலியுறுத்தவுள்ளார். (ம-4)

# இடி, மின்னல் தாக்கியதில் கிறிஸ்தவ தேவாலயம் ஒன்று தீப்பற்றி எரிந்து சேதமடைந்துள்ளது!

(குருமன்காடு)

வவுனியாவில் இடி, மின்னல் தாக்கியதில் கிறிஸ்தவ தேவாலயம் ஒன்று தீப்பற்றி எரிந்து சேதமடைந்துள்ளது.

வவுனியா-மன்னார் வீதியில் அமைந்துள்ள நாற்சதுர சுவிசேச சபை என்ற கிறிஸ்தவ தேவாலயத்தில் நேற்று மாலை 4.30 மணிக்கு மின்னல் தாக்கம் காரணமாக இடி விழுந்ததால் மின்மானி தீப்பற்றி எரிந்து இவ் அனர்த்தம் ஏற்பட்டது.

அனர்த்தம் இடம்பெற்றவுடன் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த இலங்கை மின்சார சபையினர் மின்சார இணைப்பை துண்டித்திருந்ததுடன் வவுனியா நகரசபை தீயணைப்பு பிரிவினரும் சம்பவ இடத்திற்கு வருகை தந்து தீயை அணைத்திருந்தனர். இதன் காரணமாக பாரிய அனர்த்தம் தவிர்க்கப்பட்டிருந்தது.

இதேவேளை, கடுங்காற்றுடன் வவுனியாவில் மழை பெய்தமையால் காற்றின் காரணமாக கூரை தகரம் ஒன்று பறந்து சென்று உயர் அழுத்த மின்கம்பியில் மோதிய நிலையில் வவுனியாவில் சில மணிநேரம் மின்சாரம் துண்டிக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ம-250)

# தமிழ் மக்களுக்கான பொருளாதாரத்தை முடக்குவதும் இனப்படுகொலையே

## சிறீதரன் எம்.பி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களுடைய சுதேசிய தொழிலுககு இடையூறு ஏற்படுத்தி பொருளாதார ரீதியில் முடக்குவதும் கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலை தான் என தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதனால் பாராளுமன்றத்தில் கொண்டுவரப்பட்ட ஒத்திவைப்பு பிரேரணை மீதான விவாதத்தின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இந்த நாட்டிலே தென்னிலங்கையில் கித்துள் வெல்லம் தயாரிக்கின்றவர்களுக்கு, கித்துள் கள்ளை எடுப்பவர்களுக்கு ஒரு சட்டமும், வட பகுதியிலே தென்னங்கள்ளையும் பனங்கள்ளையும் உற்பத்தி செய்பவர்களுக்கு இன்னொரு சட்டமும் இருக்கக்கூடாது.

அதிலும், வெளிநாட்டு மதுபானங்களை விற்றுத் தமிழர்களை அழிக்கின்ற வகையிலே 64 சாராய கடைகளை யாழ்ப்பாணத்திலே திறந்துவைத்துக்கொண்டு, அவர்களுடைய சுதேசியத் தொழிலை அழிக்கும் நடவடிக்கை என்பது ஒரு வகையான கட்டமைக்கப்பட்ட இன அழிப்புதான் (structural genocide) ஆகவே,

உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் அவர்களால் கொண்டுவரப்பட்டு, உறுப்பினர் சிறிநேசன் அவர்களால் வழிமொழியப்பட்ட இந்தப் பிரேரணை மிகமிக முக்கியமானது. எங்களுடைய மக்களைப் பொறுத்தவரை இது மிக அத்தியாவசியமானது. நிதி இராஜாங்க அமைச்சர் அவர்களே, இதனைத் தயவுசெய்து கவனத்திலெடுத்து இன்றைக்கே ஒரு நல்ல முடிவை அறிவியுங்கள்!

அரசாங்க அதிபர்கள் முடிவு சொல்லக்கூடிய வகையில் அல்லது அந்தந்த மாகாண சபை முடிவெடுக்கக்கூடிய வகையில் உங்களுடைய செய்தியைச் சொல்லுங்கள் என தெரிவித்தார். (ம-4)

# ஆட்சியாளர்கள் மக்களை ஏமாற்றியதே உள்ளூராட்சி தேர்தலின் வெளிப்பாடு

## முன்னாள் ஜனாதிபதி மகிந்த தெரிவிப்பு

(கொழும்பு)

ஆட்சிக்கு வருவதற்கு முன்னர் அரசாங்கம் வழங்கிய வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாமையினால் மக்கள் அதிருப்தியடைந்துள்ளமை உள்ளூராட்சி மன்ற தேர்தலில் வெளிப்படுத்தப்பட்டது என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மஹரகமையில் நேற்று வெள்ளிக்கிழமை காலை நடைபெற்ற நிகழ்வொன்றில் கல ந்துகொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் கூறுகையில்,

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை மிக விரைவில் சமர்ப்பிக்கவுள்ளோம். நல்லாட்சி அரசாங்கம் ஜனநாயக விரோத செயற்பாடுகளையே முன்னெடுத்து வருகிறது. மக்கள் எதிர்பார்க்கும் ஆட்சியை முன்னெடுக்க முடியாது போயுள்ளது.

நாட்டு மக்கள் தற்போது பல்வேறுபட்ட சிக்கல்களை எதிர்கொண்டுள்ளனர். பொருளாதார ரீதியில் பெரும் சவாலை சந்திக்கின்றனர. ஆட்சிக்கு வருவதற்கு முன்னர் பல்வேறு வாக்குறுதிகளை மக்களுக்கு வழங்கினர். எனினும் அவை எதனையும் நிறைவேற்ற முடியாத நிலைக்கு அரசாங்கம் தள்ளப்பட்டுள்ளது.

அதனை மக்கள் தற்போது நன்கு உணர்ந்துகொண்டுள்ளனர். அதனாலேயே கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தகுந்த பதிலை வழங்கியுள்ளனர். அரசாங்கம் நாட்டையும் மக்களையும் கருத்தில்கொண்டு வேலைத்திட்டங்களை முன்வைக்க வேண்டும். அதனைவிடுத்து வேறு வித்மான நிகழ்ச்சி நிரலுக்கு அமைவாக வேலைத்திட்டங்களை முன்வைக்கக்கூடாது.

நல்லாட்சி அரசாங்கமானது தமது குறைபாடுகளை மூடி மறைப்பதற்கு சில உபாயங்களைக் கையாள்கிறது. பிரச்சினையொன்று மேலோங்கி அது அரசாங்கத்திற்கு எதிராக கிளர்ந்தெழுகின்றபோது அதனை மூடி மறைப்பதற்கு வேறு பிரச்சினைகளை தோற்றுவிக்கின்றனர் என கூறினார். (ம)

# கண்டி கலவரத்தை கண்டித்து புலம்பெயர் முஸ்லிம்கள் ஜெனிவாவில் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

கண்டி மாவட்டத்தின் திகன மற்றும் தெல்தெனிய பகுதிகளில் இடம்பெற்ற வன்முறைகளை கண்டித்து புலம்பெயர் முஸ்லிம் மக்கள் எதிர்வரும் 19ஆம் திகதி ஜெனிவா மனித உரிமை பேரவை வளாகம் முன்பாக ஆர்ப்பாட்டம் நடத்தவுள்ளனர்.

வன்முறைகளை கண்டித்தும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியை நிலைநாட்டக்கோரியும் இந்த ஆர்ப்பாட்டம் ஜெனிவா வளாகத்திற்கு முன்பாக முன்னெடுக்கப்படவுள்ளது.

புலம்பெயர் முஸ்லிம் அமைப்புக்கள் ஒன்றிணைந்து இந்த ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்துள்ளன.

இதேவேளை எதிர்வரும் 20ஆம் திகதி திகன வன்முறை சம்பவம் தொடர்பான விசேட உபகுழுகூட்டமொன்று ஜெனிவா வளாகத்தில் நடைபெறவுள்ளது.

இதில் சர்வதேச நாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொள்ளவுள்ளதுடன் பலரும் திகன விவகாரம் தொடர்பில் உரையாற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

## மாணவர் பாராளுமன்ற 1ஆவது அமர்வு இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ்.கைதடி குருசாமி வித்தியாலயத்தின் 2018ஆம் ஆண்டிற்கான மாணவர் பாராளுமன்றத்திற்கான முதலாவது அமர்வு இன்று சனிக்கிழமை முற்பகல் 9.00 மணிக்கு கைதடி வடக்கு கயிற்றசிட்டி கந்தன் திருமண மண்டபத்தில் வித்தியாலய முதல்வர் நடராசா ஜெயரூபன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு மேலதிக அரசாங்க அதிபர் (காணி, மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்) சுப்பிரமணியம்-முரளிதரன் மற்றும் சிறப்பு விருந்தினராக தென்மராட்சிக் கல்வி வலய கல்வி முகாமைத்துவத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் அருமைத்துரை பிறேமதாஸ் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ம)

# ரஷ்யாவுக்கான முன்னாள் தூதுவர் உதயங்க வீரதுங்கவுக்கு திறந்த பிடியாணை பிறப்பிப்பு

(கொழும்பு)

ரஷ்யாவுக்கான முன்னாள் தூதுவர் உதயங்க வீரதுங்கவுக்கு கோட்டை நீதவான் நீதிமன்றத்தினால் மீண்டும் திறந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மேலும், சந்தேகநபரை கைது செய்து நதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறும் கோட்டை நீதவான் நேற்று உத்தரவிட்டுள்ளார்.

இலங்கை விமானப்படைக்கு மிக் விமானம் கொள்வனவு செய்தபோது இடம் பெற்ற நிதி மோசடி தொடர்பில் வாக்குமூலமொன்றை பெற அவர் அழைக்கப்பட்டிருந்தார்.

எனினும், அவர் சமுகமளிக்காததன் காரணமாக அவருக்கெதிராக நீதிமன்றத்தின் ஊடாக இதற்கு முன்னரும் திறந்த பிடியாணை விடுக்கப்பட்டிருந்தது.

அதற்கமைய சர்வதேச பொலிஸார் ஆரம்பத்தில் நீல அறிவிப்பொன்றை மேற்கொண்டு பின்னர் சிவப்பு அறிவிப்பு விடுத்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ம)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

வீடு வாடகைக்கு
வவுனியா நெளுக்குளம் 1ஆம் ஒழுங்கையில் தனியான கேற், முற்றம் (Parking) உடைய 4 படுக்கை அறை, சமையலறை, Hall மற்றும் சகல வசதியுடன் கூடிய மேல்வீடு வாடகைக்கு
0774049286,
0764007554
(3239)

துன்பம் தீர்க்கும் கலியுக தெய்வம் நாகபூசனி அம்மாள்
வெள்ளவத்தை பேர்னாந்து வீதியில் அமைந்துள்ள நாகபூசனி அம்மன் ஆலயத்தில் அருள்வாக்கு கூறும் ஞானகணேஸ்வரி அமமன் அவர்கள் இன்று சனிக்கிழமை தொடக்கம் செவ்வாய்க் கிழமை வரை (17, 18, 19, 20/03/2018 ஆகிய திகதிகளில்) ஞான வைரவர் ஆலயம் கலாசாலை வீதி, 2-ம் ஒழுங்கை, திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணத்தில் அருள்வாக்கு கூறுவார். அடியவர்கள் அனைவரும் வருகை தந்து அருளாசியை பெற்றுக் கொள்ளவும்.
பூசை நேரம் :- முற்பகல் 10.30 - 12.30 மணி வரை
மாலை 5.30 - 6.30 மணி வரை
குறிப்பு :- கலாசார உடையுடன் வருகை தரவும்
(ஞாயிற்றுக்கிழமை அன்னதானம் வழங்கப்படும்)
தொடர்பு: 0212219127, 0778012226
(3249)

மனோதத்துவ வைத்தியம்
மனோதத்துவ நிபுணர் (General Psyohotheraphy)
Dr.P.ஆறுமுகம்
T.P :- 0777 569 205
13.03.2018-22.03.2018 வரை
12 நாட்கள் மட்டுமே இருப்பார்
பதிவுக் கட்டணம் ரூபா 300/=

ஆண்களுக்கு ஏற்படும் விந்து உயிரணுக்குறைபாடுகளுக்கு சிறந்த மூலிகை மருந்தின் மூலம் யாழ்ப்பாணத்தில் பலருக்கு குழந்தை கிடைத்தமைக்கு எம்மிடம் ஆதாரங்கள் உண்டு.
தாம்பத்திய பாதிப்புக்கள் (பிறப்பில் ஆண்மைக்குறைவை தவிர) எந்தமோசமான தாம்பத்திய கோளாறுகளையும் மனோ தத்துவ ரீதியிலும் மிகத்திறமான மூலிகை மருந்துகளாலும் 45 நாட்களில் சுகமாக்கலாம்.
ஆரம்ப மனநோய், நீரிழிவு நோய், ஆஸ்துமா, மாதவிடாய் கோளாறுகள், தலையிடி, முரசு கரைதல் போன்ற நோய்களுக்கு இயற்கை மூலிகை மருந்துகள் மூலம் சிகிச்சை.
இளைஞர்கள் ஞாபகத் திறன் குறைவு கல்வியில் நாட்டம் குன்றி பயம், நடுக்கம், நரம்புத் தளர்ச்சி உண்டாகி ஆளுமை குறைந்து தாழ்வு மனப்பான்மை உண்டாகக் காரணமான இளமையில் ஏற்படும் தவிர்க்க முடியாத தவறுகளை திருத்தி வாழ்வில் வெற்றிபெற
தொடர்பு கொண்டு வரவை உறுதிப்படுத்துங்கள்
இவை அனைத்துக்கும் மனோதத்துவ நிபுணர் Dr.P.ஆறுமுகம் அவர்களைச் சந்தியுங்கள்.
இப்போது நாம் புதிய முகவரியில்
விதுனா லொச்
ஜும்மா பள்ளிவாசல் பின் பக்கம் யாழ்ப்பாணம்.
(அடமை உணவகத்துக்கு அருகில்) தொ.பே: 021 722 3409
(சி-1951)

# இலங்கை இராணுவம் மீது போர்க்குற்றச்சாட்டு

# இறையாண்மையில் தலையிடுகிறது ஐ.நா

## சரத் வீரசேகர பதில் குற்றச்சாட்டு

(ஜெனிவா)

இலங்கையின் இறையாண்மையைப் பாதிக்கும் வகையில் உள்நாட்டு விவகாரங்களில் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள்சபை தலையிடுவதாக, மகிந்த அணியின் தீவிர விசுவாசியும் முன்னாள் பிரதி அமைச்சரும் முன்னாள் கடற்படை அதிகாரியுமான அட்மிரல் சரத் வீரசேகர குற்றம் சாட்டியுள்ளார்.

ஐ.நா.மனித உரிமைகள் சபையின் கூட்டத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குற்றம் சாட்டினார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், "கடந்த 2014ஆம் ஆண்டு இடம்பெற்ற ஐ.நா.மனித உரிமைகள் சபையின் கூட்டத்தில் இலங்கை இராணுவம் போர்க் குற்றத்தில் ஈடுபட்டுள்ளதாக ஐ.நா. ஆணையாளரால் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. இதன்போது அதற்கு எதிரான இரு அறிக்கைகளை நான் சமர்ப்பித்துள்ளேன்".

மேலும், இலங்கையில் 30/1 தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் ஆணையாளர் சயிட் அல் ஹூசைன் தனது வாய்மூல அறிக்கையில் குறிப்பிட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.



ஐ.நா.மனித உரிமைகள் சபையின் 37ஆவது கூட்டத் தொடர் கடந்த மாதம் 26 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றது. இதில் மகிந்த ராஜபக்ஷ ஆதரவு அணி சார்பாக அட்மிரல் சரத் வீரசேகர தலைமையிலான குழு பங்குபற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## ஊழலுக்கு எதிரான நடவடிக்கைகளுக்கு அனைவரும் ஆதரவு வழங்க வேண்டும்

### பிரதியமைச்சர் பரணவிதான வலியுறுத்தல்

(கொழும்பு)

ஊழலுக்கு எதிராக அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு அனைத்து தரப்பினரும் ஆதரவு வழங்க வேண்டும் என பிரதியமைச்சர் கருணாரத்ன பரணவிதான வலியுறுத்தியுள்ளார்.

விசேட நீதிமன்றங்களை அமைப்பதற்கு கூட்டு எதிர் கட்சி எதிர்ப்பு வெளியிடுவதாக கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் சுட்டிக்காட்டினார்.

மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் பொது மக்களின் நிதியை தவறாக கையாண்டு ஊழல் மோசடிகளில் ஈடுபட்டதாக நல்லாட்சி அரசாங்கம் தொடர்ச்சியாக குற்றஞ்சாட்டி வருகின்றது.

எனினும் இந்த குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புபட்டவர்களை சட்டத்தின் முன் நிறுத்துவதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, தலைமையிலான நல்லாட்சி அரசாங்கம் தவறிவருவதாக பொதுமக்களும்அரசாங்கத்தை ஆட்சிபீடமேற்ற உழைத்த தரப்பினரும் விமர்சனங்களை முன்வைத்து வருகின்றனர்.

இந்த நிலையில் ஊழல் மற்றும் மோசடி தொடர்பான வழக்குகளை விசாரிப்பதற்கு விசேட நீதிமன்றம் அமைக்கப்படும்என கடந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் நல்லாட்சி அரசாங்கத்தின் அமைச்சரான ராஜித சேனாரட்ன கூறியிருந்தார்.

எனினும் ஆறு மாதங்கள் கடந்துள்ள போதிலும் அதற்கான எந்தவொரு நடவடிக்கையையும் அரசாங்கம் எடுக்காத நிலையில், நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படும் திருத்தங்களை தடுத்து நிறுத்துவதற்கு கூட்டு எதிரக்ட்சி முயற்சிப்பதாகவும் கருணாரத்ன பரணவிதான குற்றஞ்சாட்டியுள்ளார். முன்மொழியப்பட்டுள்ள உயர் நீதிமன்றமானது, ஊழலுடன் தொடர்புடைய வழக்குகளை விசாரிக்கும் எனவும் பிரதியமைச்சர் சுட்டிக்காட்டினார்.

உயர் நீதிமன்றத்தை ஸ்தாபிப்பது தொடர்பில்சர்வஜன வாக்கெடுப்பை நடத்த வேண்டும் என சிலர் கோருவதாகவும் கருணாரத்ன பரணவிதான கூறியுள்ளார். அதேதரப்பினர் திருடர்களை கைதுசெய்ய வேண்டாம்எனவும்அவர்களை தண்டிக்க வேண்டாம் எனவும் கோருவதாகவும் பிரதியமைச்சர் சுட்டிக்காட்டினார்.

எனினும் ஊழல்வாதிகள் சட்டத்தின் ஊடாக தண்டிக்க வேண்டும் எனவும் பிரதியமைச்சர் கருணாரத்ன பரணவிதான மேலும் வலியுறுத்தியுள்ளார். (இ-7)

## வெளிவிவகார அமைச்சர் மாரப்பன 20ஆம் திகதி ஜெனிவா பயணம்

(கொழும்பு)

ஜெனிவாவில் நடைபெற்று வருகின்ற ஐக்கியநாடுகள் மனித உரிமை பேரவையின் 37ஆவது கூட்டத் தொடரில் எதிர்வரும் 20,21 ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ள இலங்கை தொடர்பான விவாதத்தில் பங்கேற்கும் நோக்கில் வெளிவிவகார அமைச்சர் திலக் மாரப்பன தலைமையிலான அரசாங்கத் தூதுக்குழு ஜெனிவா பயணமாகின்றது.

அதன்படி 21 ஆம்திகதிநடைபெறும் விவாதத்தில் இலங்கையின் சார்பில் வெளிவிவகார அமைச்சர் திலக் மாரப்பன உரையாற்றுகிறார். அவரின் உரையில் நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறல் தொடர்பில் அரசாங்கம் முன்னெடுத்துள்ள வேலைத்திட்டங்கள் குறித்து வெளிவிவகார அமைச்சர் விளக்கமளிக்கவுள் ளார்.

வெளிவிவகார அமைச்சர் திலக் மாரப்பனவுடன் வெளிவிவகார அமைச்சின் உயர் அதிகாரிகளும் சட்டமா அதிபர் திணைக்களத்தின் உயர் அதிகாரிகளும் ஜெனிவாவிற்கு விஜயம் செய்யவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## விசேட மேல் நீதிமன்றம் சம்பந்தமான சட்ட மூலத்துக்கு எதிரான மனு விசாரணைக்கு

(கொழும்பு)

அரசாங்கத்தால் பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள நீதித்துறை விசேட ஏற்பாடுகள் திருத்த சட்ட மூலம் அரசியலமைப்புக்கு முரணானது என்று கூறி தாக்கல் செய்யப்பட்ட மனு உச்ச நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

பிரதம நீதியரசர் பிரியசாத் டெப், புவனேக அலுவிஹார மற்றும் நலின் பெரேரா ஆகிய மூன்று நீதியரசர்கள் முன்னிலையில் அந்த மனு விசாரணைக்கு வந்துள்ளது.

பாரிய ஊழல் மோசடிகள் மற்றும் திருட்டு சம்பவங்கள் சம்பந்தமாக விசாரணை செய்வதற்கு மூன்று நீதிபதிகள் அடங்கிய விஷேட மேல் நீதிமன்றம் ஒன்றை ஸ்தாபிப்பதற்காக நீதித்துறை விஷேட ஏற்பாடுகள் திருத்த சட்டமூலம் கடந்த 06ம் திகதி நீதியமைச்சர் தலதா அத்துகோரலவினால் பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## மகிந்த தலைமையிலான கூட்டு எதிர்க்கட்சியின் மே தினக்கூட்டம் காலியில்

(கொழும்பு)

கூட்டுஎதிர்க்கட்சிஇம்முறை தொழிலாளர் தினக் கூட்டத்தை காலி சமனல மைதானத்தில் நடத்துவதற்குத் தீர்மானித்துள்ளது. முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின்உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் நடைபெற்ற கூட்டத்தின்போதே குறித்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கூட்டு எதிர்க்கட்சி கடந்த வருடம்போல் இம்முறையும் மே தினக்கூட்டத்தை கொழும்பு காலிமுகத்திடலில் நடத்துவதற்கு ஏற்கனவே தீர்மானித்திருந்தது. எனினும் காலிமுகத்திடலில் புல் நடும் பணி நடைபெறவுள்ளமையினால் அங்கு கூட்டம் நடத்துவதற்கு அனுமதிவழங்கப்படவில்லை.

எனவேதான் காலி சமனல மைதானத்தில் மே தினக் கூட்டத்தை நடத்துவதற்கு கூட்டு எதிர்க்கட்சி தீர்மானித்துள்ளது.

அத்துடன் அக்கூட்டத்தில் அதிகளவானோரை ஒன்றுகூட்டி கூட்டத்தை வெற்றிகரமாக்கும் நடவடிக்கையிலும் அக்கட்சி இறங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## கண்டி குழப்பநிலை குறித்து அரசிற்கு இராணுவம் விளக்கம்



(கொழும்பு)

கண்டி மாவட்டத்தில் அண்மையில் இடம்பெற்ற குழப்பநிலை தொடர்பில் இராணுவம் அரசாங்கத்திற்கு விளக்கமளித்துள்ளது.

இராணுவத்தளபதி லெப்டினன் ஜெனரல் மகேஷ் சேனநாயக்க இதனைத் தெரிவித்தார்.

கண்டியில் தற்போது ஏற்பட்டுள்ள சுமுகமான நிலை, குறித்தே இராணுவத்தினால் அரசாங்கத்திற்கு விளக்கமளிக்கப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி தெரிவித்தார்.

இதேவேளை, குற்றப்புலனாய்வு திணைக்களத்தினர் உள்ளிட்ட சில குழுக்கள் கண்டி மாவட்டத்தில் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)


**வாத நோய்களுக்கு சிறப்புச் சிகிச்சை**

**Special Treatment for Rheumatism**

கழுத்துப்பிடிப்பு (Cervical spondylosis), தோள் மூட்டு வாதம் (Frozen shoulder), கீழ்முதுகு வலி (Law back pain), நாரிப்பிடிப்பு (Lumbago), முள்ளெலும்பு இடைத்தட்டு நழுவல் (Nerve root compressed by the Disc Hernia), இடுப்பு, தொடை, பாதம் வரை தாக்கும் தீவிர நரம்பு வலி (Sciatica) மற்றும் மூட்டுகளைப் பாதிக்கும் முடக்கு வாதம் (Rheumatic arthritis), முழந்தாள் மூட்டுத்தேய்மான வாதம் (Destrutcion of knee cartilage; Synovial fluid damage & Ligament loosening), குதிவாதம், நரம்பு, தசை, மூட்டுக்களின் (Neuro-mascular problems), பிரச்சனைகள், பிரசவத்தின் பின்பும், மாதவிலக்கு ஓய்வு காலத்தில் பின்பும் (Post caesarean & menopause) ஏற்படும் தசை - மூட்டு வலிகள் (Mascular & joint pain), சிறுவர் வாதம் (Juvenile arthritis), பாரிசவாதம் (Paralysis), எலும்பு முறிவின்பின் சீரமைப்பு போன்ற நோய்களுக்கு விசேட சித்த-ஆயுள்வேத சிகிச்சைகள் பெறலாம்.

சிகிச்சைகளுக்கு அனுமதி பெற தொலைபேசியில் தொடர்பு கொள்ளவும்.

Dr. R.LAKSHMANA IYER (D A M (cey), D M G (ind)
Regd - (7966,Dep Ayu - 6-3/1/2541)
மங்களபதி சித்த ஆயுள்வேத வைத்தியசாலை
41/5, அரச வீதி (சங்கிலியன் வீதியின் உள்ளே)
நல்லூர் - யாழ்ப்பாணம்,
Tel. 021 205 4066 / 077 872 5251

## இறுதி ஓவரில் மஹமதுல்லா அசத்தல்

# விறு...விறு...வெற்றியுடன் இறுதியில் பங்களாதேஷ் சொந்த மண்ணில் இலங்கை அணி பரிதாபம்

இறுதி 2 பந்துகளுக்கு 6 ஓட்டங்கள் தேவை என்ற நிலையில் உடான வீசிய அப்பந்தை சிக்ஸருக்கு விரட்டிய மஹமதுல்லா பங்களாதேசுக்கு 2 விக்கெட்டுக்களால் முத்தான வெற்றியை பரிசாகக் கொடுத்தார்.

இவ்வெற்றி மூலம் நாளை நடைபெறவுள்ள இறுதியாட்டத்தில் இந்தியாவுடன் மோதும் தகுதியைப் பெற்றது பங்களாதேஷ்.

கொழும்பில் முத்தரப்பு 'ரி20' தொடர் நடக்கிறது. இதன் இறுதிப் போட்டிக்கு இந்திய அணி ஏற்கெனவே முன்னேறிவிட்டது.

இந்நிலையில் இறுதியாட்டத்தில் இந்தியாவை சந்திப்பது யார் என்ற பரபரப்பான கடைசி லீக் போட்டியில் நேற்று இலங்கை - பங்களாதேஷ் அணிகள் மீண்டும் மோதின.

இதில் வெற்றி பெறும் அணி இறுதிப் போட்டிக்கு முன்னேறும் என்ற நிலையில், நாணயச்சுழற்சியில் வென்ற பங்களாதேஷ் அணியின் தலைவர் சகிப் அல் ஹசன், முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தார்.

**பெரேரா அபாரம்**

முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணிக்கு குணதிலக (4) ஏமாற்றினார். முஸ்தபிசுர் 'வேகத்தில்' குசல் மெண்டிஸ் (11), ஷானக (0) வெளியேறினர். உபுல் தரங்க (5), 'ரன்-அவுட்' ஆனார். மெஹடி ஹசன் பந்தில் ஜீவன் மெண்டிஸ் (3) ஆட்டமிழந்தார்.

இதனால் இலங்கை அணி ஒரு கட்டத்தில் 5 முக்கிய விக்கெட்டுக்களை வெறும 41 ஓட்டங்களுக்கு இழந்து தத்தளித்தது.

எனினும் அதன்பின் இணைந்த இலங்கையின் அதிரடி இயந்திரங்களான குசல் பெரேரா (61), திசர பெரேரா (58) பங்களாதேஷ் பந்துவீச்சை புரட்டியெடுத்து அரைச்சதம் கடந்து கைகொடுத்தனர்.

20 ஓவர்கள் நிறைவில் இலங்கை அணி 7 விக்கெட்டுக்களை இழந்து 159 ஓட்டங்கள் எடுத்தது.

உதானா (7), தனஞ்செய (1) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

**தமிம் ஆறுதல்**

சவாலான இலக்கை விரட்டிய பங்களாதேஷ் அணிக்கு லிட்டன் தாஸ் (0) ஏமாற்றினார். சபிர் ரஹ்மான் (13) நிலைக்கவில்லை. முஷ்பிகுர் ரஹிம் (28) ஓரளவு கைகொடுத்தார். பொறுப்பாக ஆடிய தமிம் இக்பால் (50) அரைச்சதமடித்து ஆறுதல் கொடுத்தார். சௌமியா சர்க்கார் (10), அணித் தலைவர் சாகிப் (7) சொற்ப ஓட்டங்களில் வெளியேறினர். மெஹிடி (0) 'ரன்-அவுட்' ஆனார்.

இந்நிலையில் கடைசி ஓவரில் பங்களாதேஷ் அணியின் வெற்றிக்கு 12 ஓட்டங்கள் தேவைப்பட்டன.

உதானா வீசிய அவ் ஓவரின் 2ஆவது பந்தில் முஸ்தபிசுர் ரஹ்மான் (0) 'ரன்-அவுட்' ஆனார்.



அதன்போது பங்களாதேஷ் - இலங்கை அணி வீரர்களுக்கு இடையே வார்த்தை மோதல் ஏற்பட்டது. இதனால் போட்டி சில நிமிடங்கள் தடைப்பட்டன.

அடுத்த 3 பந்துகளில், ஒரு பவுண்டரி, ஒரு சிக்சர் அடித்த மஹமதுல்லா வெற்றியை உறுதி செய்தார்.

பங்களாதேஷ் 19.5 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை (160) 2 விக்கெட்டுக்களால் அடைந்து திரில் வெற்றி பெற்றது.

மகமதுல்லா (43) ஆட்டமிழக்காமல் இருந்தார். இவரே போட்டியின் ஆட்டநாயகனாகவும் தெரிவானார்.

## பந்துவீச்சு சர்ச்சை தொடர்கிறது


# ஐ.பி.எல்., சிக்கலில் நரைன்

ஐ.பி.எல்., தொடர் ஆரம்பமாகவுள்ள நிலையில், மேற்கிந்திய வீரர் நரைன் பந்துவீச்சு புகாரில் சிக்கியுள்ளார்.

மேற்கிந்திய தீவுகளின் சுழற்பந்துவீச்சாளர் சுனில் நரைன் (வயது-29), சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி.,) நிர்ணயித்த அளவுக்கு அதிகமாக முழங்கையை வளைத்து பந்து வீசிய புகாரில் அடிக்கடி சிக்குவார்.

இதனால் 2014, 15ஆம் ஆண்டில் சில மாதங்கள் 'சஸ்பெண்ட்' செய்யப்பட்டார். தற்போது பாகிஸ்தான் சுப்பர் லீக் ரி20 தொடரில் லாகூர் அணிக்காக விளையாடி வருகிறார்.

சமீபத்தில் சார்ஜாவில் குயட்டா அணிக்கு எதிரான போட்டியில் பந்துவீசினார். இப்போட்டிக்குப்பின் ஐ.சி.சி., நிர்ணயித்த அளவுக்கு அதிகமாக முழங்கையை மடித்து பந்துவீசியதாக நரைன் மீது




நடுவர்கள் புகார் கூறினர்.

இதனையடுத்து, பாகிஸ்தான் கிரிக்கெட் சபை இவரை எச்சரிக்கும் வீரர்களுக்கான பட்டியலில் சேர்த்துள்ளது. தொடர்ந்து பந்துவீச அனுமதி அளித்துள்ளது. எதிர்வரும் போட்டியில் மீண்டும் இதே புகாரில் சிக்கினால், நரைனுக்கு பந்துவீச ஐ.சி.சி., தடை விதிக்கலாம்.

எதிர்வரும் ஏப்ரல் 7ஆம் திகதி இந்தியாவில் ஐ.பி.எல்., ரி20 தொடர் ஆரம்பமாகிறது. இதில் கொல்கத்தா அணி சார்பில் களமிறங்க உள்ளார். இதனால், பந்துவீச்சுப் புகாரில் மீண்டும் சிக்காமல் இருப்பது அவசியம்.

## வடக்கின் பெரும் போரின் ஒரு நாள் போட்டி இன்று

வடக்கின் பெரும் போர் என வர்ணிக்கப்படும் யாழ். மத்திய கல்லூரி - சென். ஜோன்ஸ் கல்லூரி அணிகள் மோதும் ஒரு நாள் போட்டித் தொடரின் 16ஆவது அத்தியாயம் இன்று சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் அரங்கேறுகிறது.

மூன்று பகுதி ஆட்டமாக நடைபெறும் இப்போட்டி காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகிறது.

இதில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு இரு கல்லூரி சமூகத்தினர் அழைப்பு விடுத்துள்ளனர். (ம)

## நேபாள கிரிக்கெட் வரலாற்றில் ஒரு பொன்னான நாள்

# ஒரு நாள் அந்தஸ்தை பெற்றது




கிரிக்கெட் வரலாற்றில் நேபாள அணி முதன்முறையாக ஒருநாள் அந்தஸ்து பெற்றது.

உலக கிண்ண (2019) தொடருக்கான தகுதிச்சுற்று சிம்பாப்வேயில் நடக்கிறது. மொத்தம் 10 அணிகள் பங்கேற்கும் இத்தொடரில் 'ரொப்-7' இடம்பிடிக்கும் அணிகளுக்கு வரும் 2022 வரை ஒருநாள் போட்டிகளில் விளையாடும் அந்தஸ்து கிடைக்கும்.

இதில் மேற்கிந்தியத் தீவுகள், ஆப்கானிஸ்தான், சிம்பாப்வே, அயர்லாந்து அணிகளுடன் சேர்ந்து 'சுப்பர்-6' சுற்றுக்கு முன்னேறிய ஸ்கொட்லாந்து, யு.ஏ.இ., அணிகள் வரும் 2022 வரை ஒருநாள் போட்டிகளில் பங்கேற்கும் அந்தஸ்து பெற்றன.

மீதமுள்ள ஒரு இடத்துக்கு ஹொங்கொங், நேபாளம், பப்புவா நியூ கினியா இடையே போட்டி இருந்தன. இதனிடையே 7 முதல் 10 வரையிலான இடத்துக்கான போட்டியில் பப்புவா நியூ கினியா (114/10) அணியை, நேபாள அணி (115/4) வீழ்த்தியது.

மற்றொரு போட்டியில் நெதர்லாந்து (174/10), ஹொங்கொங்கை (130) வென்றது.

இதனால், 7-8வது இடத்துக்காக நேபாளம், நெதர்லாந்து மோதவுள்ளன. இருப்பினும், நெதர்லாந்து அணி ஏற்கெனவே ஒருநாள் அந்தஸ்து பெற்றுள்ளதால் வாய்ப்பு நேபாளத்துக்கு சென்றது. இது எதிர்வரும் 2022 வரை நீடிக்கும். நேபாள கிரிக்கெட் அணி வரலாற்றில், ஒருநாள் அந்தஸ்து பெற்றது இது தான் முதன்முறை.

# இது சரியா நெய்மர்

ஸ்ரீபன் ஹாக்கிங் மரணத்தை 'டுவிட்டர்' படம் வெளியிட்ட நெய்மருக்கு எதிர்ப்பு கிளம்பியுள்ளது.

பிரிட்டன் இயற்பியல் விஞ்ஞானி ஸ்ரீபன் ஹாக்கிங் (வயது-76), 'மோட்டார் நியூரோன்' நரம்பியல் நோயினால் பாதிக்கப்பட்ட இவர், வாழ்நாளில் மூன்றில் இரண்டு பங்கை வீல் சேரில் தான் கழித்தார்.

இந்நிலையில் இவரது மரணம் பலருக்கும் சோகத்தை ஏற்படுத்தியது.

இதனிடையே, கணுக்கால் காயம், விரல் எலும்பு முறிவுக்கு சத்திரசிகிச்சை செய்த உலகின் பெறுமதி வாய்ந்த கால்பந்து வீரர், பிரேசிலின் நெய்மர், ஹாக்கிங்கை போல புகைப்படம் வெளியிட்டுள்ளார்.

தற்போது சத்திரசிகிச்சை செய்த காரணத்தினால மேலாடை இல்லாமல் சிறிய டிரவுசர் மட்டும் அணிந்து





'வீல் சேரில்' அமர்ந்து 'உங்களுக்கு நேர்மறையான எண்ணங்கள் இருந்தால், எந்த சூழலில் இருந்தும் விடுபடலாம், உங்களை நீங்கள் கண்டு கொள்ளலாம், என ஹாக்கிங் கருத்துக்களை தெரிவித்துள்ளார்.

நெய்மரின் இச்செயல் ஹாக்கிங்கை கேலி செய்வது போல இருப்பதாக பலரும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர்.

இது தொடர்பில் ஒரு ரசிகர் கூறுகையில், ''தனது காயத்தை, ஹாக்கிங்குடன் ஒப்பிட்டு பேசும் நெய்மர், சரியான நிலையில் இல்லை என்றுதான் தெரிகிறது,' என்றார்.

மற்றொரு ரசிகர், 'தனது உடைந்த விரல் காயத்தை, ஹாக்கிங் மரணத்துடன் இணைத்து நெய்மர் செய்தி வெளியிட்டது வெறுக்கத்தக்க செயல்' என்றார்.






புன்னாலைக்கட்டுவன் அறிவொளி சனசமூக நிலையத்தின் 34ஆவது ஆண்டு விழா அறிவொளி சனசமூக நிலைய முன்றலில் நிலையத் தலைவர் என்.இன்பம் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. இந் நிகழ்வில் பாண்ட் வாத்திய இசைக் குழுவினால் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதனையும் பிரதம விருந்தினர் உரையாற்றுவதையும் சிறுவர்களின் கலை நிகழ்வையும் படங்களில் காணலாம்.

# மரண அறிவித்தல்

## திருமதி. துரைராசா வியாழாச்சி (துரையம்மா)



துணவியைப் பிறப்பிடமாகவும் மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி துரைராசா வியாழாச்சி (துரையம்மா) அவர்கள் 13.03.2018 செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகமுத்து-சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் ஆறுமுகம் பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற ஆறுமுகம் துரைராசா அவர்களின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான செல்லப்பா, பூரணம், சிவகுரு, கோபாலசிங்கம் மற்றும் நல்லம்மா, பொன்னையா, கண்மணி, பூமணி, தவபாலசிங்கம், குணபாலசிங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் காலஞ்சென்ற செல்வரத்தினம் அவர்களின் அன்பு மைத்துனியும் கருணராசா (பிரான்ஸ்), பாலசிங்கம் (ஜேர்மனி), கருணாவதி, ஜீவராசா (கொலன்ட்), ரஞ்சனாதேவி(சாந்தி), சற்குணராஜா (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஜெயந்தினி (பிரான்ஸ்), சரஸ்வதி( ஜேர்மனி), இராசதுரை (தச்சுத்தொழில்), தனலீலா (கொலன்ட்), வரதராஜன் (மேசன்), மயூரி (இந்தியா) ஆகியோரின் அன்பு மாமியாரும் சஜீவன் (சுவிஸ்), கீர்த்திகா, கிரிசாந், விதுர்ஷன், டெனிசன், விதுஷ்யா, கீர்த்தனா, தனுசன், சுஜீவன், சிசானா, ஷயூ ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (18.03.2018) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் உடுவில் தெற்கு, புதுமடம், மானிப்பாய் என்னும் முகவரியிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

உடுவில் தெற்கு,
புதுமடம், மானிப்பாய்.

தகவல் : குடும்பத்தினர்
075 440 0169

(சி-1900)

# மரண அறிவித்தல்

## சச்சிதானந்தன் சாரங்கன்



இல.85, பத்திரகாளி கோவிலடி, வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சச்சிதானந்தன் சாரங்கன் (யா/வைத்தீஸ்வராக் கல்லூரி, யா/நாவற்குழி ம.வி-பழைய மாணவன்) 14.03.2018 புதன்கிழமை அன்று அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற சச்சிதானந்தன் (உதயன் சவுண்ட்ஸ், ஒளி, ஒலி அமைப்பின் உரிமையாளர்) மற்றும் ருக்மணிதேவி ஆகியோரின் அன்பு மகனும் காலஞ்சென்ற அரிசூதனன் மற்றும் சாருஜன் (மாணவன்-யா/பெரியபுலம் ம.வி), ரூபிகா(மாணவி, யா/இந்து மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான இராசபாக்கியம், பவானிதேவியினதும், காலஞ்சென்ற காசிப்பிள்ளை மற்றும் நாகபூரணம் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

இவரின் இறுதிக் கிரியைகள் நாளை 18.03.2018 ஞாயிற்றுக்கிழமை மு.ப.10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.85, பத்திரகாளி கோவிலடி,
வண்ணார்பண்ணை
தொ.இல:077 838 3045

(3240)

தகவல்:
குடும்பத்தினர்.

# இராசி பலன்

**மீனம்** குடும்ப இரகசியங்களை மற்றவர்களிடம் பேசாதிருப்பது நல்லது, எடுத்த காரியத்தில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், போசன சுகமுண்டு.

**மேடம்** செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள். வழக்கத்தை விட கூடுதல் நேரம் பணி புரியும் சூழ்நிலை ஏற்படலாம், தேகநலனில் அக்கறை தேவை.

**இடபம்** அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், வாகன சுகமுண்டு, பெரிய மனிதர்களின் தொடர்புகள் அனுகூலம் தரும்.

**மிதுனம்** கொள்கைப் பிடிப்போடு செயற்பட்டு கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவீர்கள், தொழில் வளர்ச்சி கூடும் நாள், மாலை நேரம் மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம்.

**கும்பம்** நண்பர்களால் வளர்ச்சி கூடும் நாள், ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட வகையில் இருந்த கவலைகள் தீரும், பொது வாழ்வில் மரியாதை கூடும்.

**கடகம்** சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் ஏற்படலாம், வேலைச்சுமை கூடினாலும் பலன் கிடைக்கும், மனதில் உற்சாகமும் மகிழ்ச்சியும் கூடும் நாள்.

| | | | |
|---|---|---|---|
| சூரி, சுக், புத | | | |
| சந் | இராசி பலன் கிரகநிலை சந்திராஷ்டமம் மகம் மதியம் 1.38 மணிக்கு மீன-சந் | | ராகு |
| கேது | | | |
| சனி, செவ் | குரு | | |

**17.03.2018**

பங்குனி 03, சனிக்கிழமை
சூரிய உதயம் காலை 6.21 மணிக்கு
அமாவாசை முன்னிரவு 7.07 மணிவரை
பூரட்டாதி முன்னிரவு 8.04 மணிவரை
சுபநேரம் 3.19-4.49 மணிவரை
இராகுகாலம் 9.19-10.49 மணிவரை
அமாவாசை விரதம்

வளவன்

**மகரம்** கனிவாகப் பேசி காரியம் சாதிக்க வேண்டிய நாள், இளைய சகோதர வழியில் இனிய செய்திகள் வந்து சேரலாம், ஆன்மீக சிந்தனை மேலோங்கும்.

**சிம்மம்** உதவி செய்த சிலரே உதாசீனப்படுத்துவது கண்டு வருத்தமடைய நேரிடலாம், காலையில் நடைபெறவிருந்த காரியமொன்று மாலை நேரம் தாமதமாகலாம்.

**தனுசு** பெற்றோரின் நலனில் அக்கறை காட்டுவீர்கள், நேர்மையும் நாணயமும் கொண்ட நண்பர்களால் நம்பிக்கைகள் நடைபெறலாம், சுப செலவுகள் கூடும்.

**விருச்சிகம்** ரோக பயமுண்டு, மனதில் இனம்புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும், தூர தேசத்து உறவுகளின் வருகையுண்டு.

**துலாம்** சுபதகவல்கள் வந்து சேரலாம், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், பெரிய மனிதர்களின் ஒத்துழைப்புக் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**கன்னி** சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், புதிய பொருட் சேர்க்கையுண்டு, பயணங்கள் செல்ல போட்ட திட்டங்கள் எளிதில் கைகூடும், போசன சுகமுண்டு.

# ஈழத்தமிழ் இலக்கிய வரலாறு விரைவில் வெளிவர வேண்டும்

## முதலமைச்சர் விக்னேஸ்வரன் விருப்பம்

(யாழ்ப்பாணம்)

தமிழகத்தினுடைய இலக்கிய வரலாற்றினை "தமிழ் இலக்கிய வரலாறு" எடுத்துரைப்பதைப் போன்று ஈழத்து இலக்கிய வரலாற்றினை எடுத்துக்கூறுவதற்கு ஈழத் தமிழ் இலக்கிய வரலாறு விரைவில் வெளிவர வேண்டும் என வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வடமாகாண கல்வி அமைச்சின் கீழ் இயங்கும் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்ட ஈழத்துத் தமிழ்க் கவிதைக் களஞ்சியம் நூல் வெளியீட்டு விழா நேற்று முன்தினம் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றது. இதில்கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் உரையாற்றுகையில்,

ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றின் ஒரு திருப்புமுனைக் காலமாக அமைந்த 1960களில் புதுமை இலக்கியப் படைப்புக்கள் விரைவாக மலரத் தொடங்கிய வேளையில் தான் மல்லிகை ஜீவாவின் நூலுக்கு 1961 இல் சாகித்திய விருது கிடைக்கப் பெற்றது.

எனினும் மரபுவழி இலக்கியத்தை இறுக்கமாக பின்பற்றிய அறிஞர்கள் புதுமை இலக்கியப் படைப்பாளிகளை புல்லறிவாளர்கள் என்றும் போலிப்படைப்பாளர்கள் என்றும் புறந்தள்ளினர். பழையனவற்றை ஏற்கும் நாங்கள் புதியனவற்றை ஏற்கப் பின்நிற்கின்றோம்.

தமிழகத்தினுடைய இலக்கிய வரலாற்றினை "தமிழ் இலக்கிய வரலாறு" எடுத்துரைப்பதைப் போன்று ஈழத்து இலக்கிய வரலாற்றினை எடுத்துக்கூறுவதற்கு ஈழத்தமிழ்க் கவிதைக் களஞ்சியம் உறுதுணையாக உள்ளது. அனுசரணையாக விளங்குகின்றது. விரைவில் ஈழத் தமிழ் இலக்கிய வரலாறு வெளிவர வேண்டும்.

வரும் இன்றைய சமூகத்தில் குறிப்பாக இளைஞர்கள் மத்தியில் வாசிப்புப் பழக்கம் மிக மிக அருகிப்போகின்ற இக் காலகட்டத்தில் இவ்வாறான பெரியளவிலான புத்தகங்கள் முழுமையாக வாசிக்கப்படுவன என்று கொள்ள இயலாது.

ஆனாலும்இன்றைய இலத்திரனியல் செயற்பாடுகளின் கீழ் அரும்பெரும் இலக்கியப் பொக்கிஷங்கள் இலத்திரனியல் புத்தகங்களாக மாற்றி வழங்கப்பட்டு வருகின்றன.

இப்புத்தகத்தில் எத்தனை முஸ்லிம் கவிஞர்களின் படைப்புக்கள் குறிப்பிடப்பட்டுள்ளன என்று கண்டு மன மகிழ்வடைந்தேன். இன்று தான் அரசியல் காரணங்களுக்காக முஸ்லிம்கள் தள்ளி நிற்கின்றார்கள்.



ஆனால் தமிழை வளர்ப்பதில் அவர்கள் எவருக்குஞ் சளைத்தவர்கள் அல்ல என்பதை இந்த நூல் எடுத்துக்காட்டுகின்றது என மேலும் தெரிவித்தார். (இ-9)

## கலைநிலம் -II மலருக்கான ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

வலி.தெற்கு உடுவில் பிரதேச பண்பாட்டு மலராகிய கலைநிலம் II இற்கான ஆக்கங்கள்கோரப்பட்டுள்ளன. இந்த மலரானதுபிரதேசத்தின்பழைய விடயங்களை ஆவணப்படுத்துவதுடன்பிரதேச எழுத்தாளர்களுக்கு களம் அமைப்பதாகவும் உள்ளது. அத்துடன் அறிவியல் சார்ந்த விடயங்கள் பழைய-பாரம்பரியமான விடயங்கள் தொடர்பான செய்திகள், புகைப்படங்கள் முதலிய வற்றினையும் உள்ளடக்கியதாக அமைக்கப்படவுள்ளது.

எனவே வலி.தெற்கு பிரதேசத்தினை சார்ந்தவர்களிடம் இருந்து ஆக்கங்கள் (கட்டுரைகள், கவிதைகள், சிறுகதைகள், விமர்சனம் ஆய்வு, சமயம், வரலாறு...) கோரப்பட்டுள்ளன. ஆக்கங்கள் வந்து சேரவேண்டிய இறுதித்திகதி 30.04.2018 ஆகும். பிரதேச வடமாகாண கலாசாரப் பிரிவில் ஆக்கங்கள் நேரடியாகவோ தபால் மூலமாகவோ ஒப்படைக்க முடியும் என பிரதேச செயலாளர் திருமதி மதுமதி வசந்தகுமார் அறிவித்துள்ளார். (இ

## சிறுவர் நடவடிக்கைக்குழு வடக்கில் அங்குரார்ப்பணம்

(யாழ்ப்பாணம்)

மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சின் சுற்றறிக்கை இல 01/2018 இற்கு அமைவாக வட மாகாண பிரதம செயலர் அ.பத்திநாதன் தலைமையில் மாகாண மட்ட சிறுவர் நடவடிக்கை குழு நேற்று முன்தினம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

இது ஐரோப்பிய ஒன்றியத்தின் அனுசரணையில் செயற்படுத்தப்படும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும்இக்குழுவின்செயற்பாடானது முரண்பாடுகளின் பிற்பட்ட காலப்பகுதியில் இலங்கையின் சிறுவர்களுக்கான உரிமைகளினை அடைதலும் அதற்கான சந்தர்ப்பங்களினை விரிவுபடுத்தலும் எனும் நோக்கில் முன்னெடுத்துச் செல்லப்படவுள்ளது.

மாகாண மட்டத்தில் பல துறையில் செயற்படும் உயர் நிலை அரச அதிகாரிகள், உத்தியோகத்தர்கள், பொலிஸ் உயர் அதிகாரிகள் உள்ளிட்ட 33 பேரை உள்ளடக்கி இந்த குழு உருவாக்கப்பட்டுள்ளது.

தொடர்சியாக மாகாண ரீதியாகவும் மாவட்ட ரீதியாகவும், கிராம மட்டத்திலும் இந்த குழுவின் செயற்றிட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

மேலும், இந்நிகழ்வில், சிறுவர் நன்னடத்தை மற்றும் பராமரிப்பு திணைக்களத்தின்வடக்கு மாகாண ஆணையாளர் ரி. விஷ்வரூபன், மாகாண மட்ட சிறுவர் நடவடிக்கைக் குழு சம்பந்தமான சுற்றறிக்கை தொடர்பாகவும், சட்டத்தரணியும், வோர்ல்ட் சயில்ட் அமைப்பின் நிகழ்ச்சித்திட்ட முகாமையாளரும், செயற்பாட்டாளருமான சிறுவர் ஜெ.தற்பரன் சிறுவர் கண்காணிப்புக்குழுக்களின் கடந்த காலச் செயற்பாடுகள் குறித்தும், எதிர்காலத்தில் கவனத்தில் கொண்டு செயற்படவேண்டிய விடயப்பரப்புக்கள் தொடர்பாகவும் சமர்ப்பணங்களினைச் செய்திருந்தனர்.

சிறுவர் தொடர்பான தரவுகள் சேகரிக்கப்படுதலின் முக்கியத்துவம், பொலிஸ் மற்றும் இதர அரச அதிகாரிகளுக்கான கலந்துரையாடல்கள் நடத்தப்படுவதன் முக்கியத்துவம், கிராமிய, பிரதேச மற்றும் மாவட்ட மட்ட கண்காணிப்புக்குழுக்களின் கிரமமான செயற்பாடுகள் தொடர்பாக அக்கறை, சிறுவர் பிரதிநிதித்துவம் உறுதிப்படுத்தப்படுதல் போன்ற பல்வேறு விடயப்பரப்புக்கள் என்பன ஆரம்பக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டன. (இ-9)

## ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் இன்று சத்தியப்பிரமாணம்

(யாழ்ப்பாணம்)

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி மன்றத்தேர்தலில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் சார்பில் போட்டியிட்டு உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களுக்கான சத்தியப்பிரமாண நிகழ்வு இன்று கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெறும்.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கட்சியின் தலைமை அலுவலகத்தில் காலை 9 மணியளவில் நடைபெறும் குறித்த நிகழ்வில் வடக்கு-கிழக்கு மாகாணங்களில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களில் ஈழமக்கள்ஜனநாயகக்கட்சியின் சார்பாக தேர்ந்தெடுக்கப்பட்ட 98 உறுப்பினர்கள் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா முன்னிலையில் சத்தியப்பிரமாணம் எடுக்கவுள்ளனர்.

குறித்த நிகழ்வில் கட்சியின் மாவட்ட நிர்வாக செயலாளர்கள், உதவி நிர்வாக செயலாளர்கள் மற்றும் பிரதேசங்களினது நிர்வாக செயலாளர்கள் உதவி நிர்வாக செயலாளர்களுடன் பல முக்கியஸ்தர்களும் கலந்துகொள்ளவுள்ளனர். (இ-7)


## திரைப்பட வெளியீடு நாளை




(யாழ்ப்பாணம்)

பிஎம்எல்(PML) மீடியா தயாரிப்பில் சுதர்சன் ரட்ணம் இயக்கத்தில் உருவாகியுள்ள சாலைப்பூக்கள் திரைப்படம் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் யாழ். ராஜா திரையரங்கில் வெளியிடப்படும். (இ)

## 119 பயனாளிகளுக்கு செவிப்புல சாதனங்கள்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் றோட்டறிக் கழகத்தின் ஏற்பாட்டில் தென்னிந்திய றோட்டறி மாவட்டம் 3232 - மதுரை கோவில் நகர் றோட்டறிக் கழகத்தின் அனுசரணையில் கேள்திறன் குறைந்த 119 பயனாளிகளுக்கு செவிப்புல சாதனங்கள் வழங்கி வைக்கும் நிகழ்வு கடந்த புதன்கிழமை யாழ். போதனா வைத்தியசாலையின் காது, மூக்கு, தொண்டை சிகிச்சை நிலையத்தில் இடம் பெற்றது.

வைத்திய கலாநிதி என். இந்திரநாத் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் சுமார் 25 பயனாளிகள் செவிப்புல சாதனங்களைப் பெற்றுக் கொண்டனர். ஏனைய பயனாளிகள் அடையாளங் காணப்பட்டு வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதில் யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ரீ.சத்தியமூர்த்தி, றோட்டறி மாவட்டம் 3232 இன் முன்னாள் மாவட்ட ஆளுநர் ரேகா ஷெட்டி தம்பதியினர், யாழ்ப்பாணம் றோட்டறிக் கழகத்தின் தலைவர் ஆர். பி.பிரஷாந்தன், யாழ்ப்பாணம் றோட்டறிக் கழகத்தின் முன்னாள் தலைவரும், உதவி ஆளுநருமான எஸ். அனுராஜ், சிகிச்சை நிலைய தாதியர்கள், பயனாளிகள் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (இ-9)

## பணிப்புறக்கணிப்புக்கு ஆதரவு

(யாழ்ப்பாணம்)

அனைத்துப் பல்கலைக்கழக போதனை சாரா ஊழியர்களின் தொடர் பணிப்புறக்கணிப்புக்கு யாழ்.பல்கலைக் கழக நிறைவேற்று உத்தியோகத்தர் சங்கம் ஆதரவை வழங்குவதாக அறிவித்துள்ளது.

கடந்த 20.02.2018 முதல் இலங்கையில் உள்ள அனைத்து பல்கலைக்கழக போதனை சாரா ஊழியர்களின் தொழிற்சங்க நடவடிக்கை தொடர்பாக யாழ்.பல்கலைக்கழக நிறைவேற்று உத்தியோகத்தர் சங்கத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டத்தில் மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

உரிய தரப்பினர் மேற்படி தொழிற்சங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்துவதன் மூலம் நியாயமான தீர்வினை எட்டும்வரை மேற்படி தொழிற்சங்க நடவடிக்கைக்கு தமது தார்மீக ஆதரவினை வழங்குதல். மேற்படி தொழிற்சங்க நடவடிக்கை முடிவுறும் வரை தமது கடமை வரம்பிற்குட்பட்ட பணிகளை மட்டும் ஆற்றுதல், பல்கலைக்கழக நாளாந்த நடவடிக்கைகள் செவ்வனே நடைபெறுவதற்கு ஏதுவாக சம்பந்தப்பட்ட தரப்பினர் தொழிற்சங்கங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி சுமுகமான தீர்வினை விரைவாக எடுப்பதற்கு இதன்மூலம் வலியுறுத்துதல் போன்ற தீர்மானங்கள் எடுத்துள்ளதாக குறித்த சங்கத்தின் தலைவர் கே.கடம்பசீலன் அறிவித்துள்ளார். (இ-9)

# தமிழ் மக்களுக்கு எதிரான யுத்தம் ஓய்ந்த பின்னர் முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகள் அதிகரிப்பு

# சர்வதேச ஆய்வு ஊடகம் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

இலங்கையில் 30 வருடங்களாக நடைபெற்று வந்த யுத்தம் கடந்த 2009ஆம் ஆண்டுடன் நிறைவுக்கு வந்ததாக அறிவிக்கப்பட்டது. இந்த யுத்தத்தினால் 80,000 இற்கும் அதிகமான தமிழ் மக்கள் உயிரிழக்க நேரிட்டது.

யுத்தம் நிறைவடைந்த பின்னர் இலங்கை மறு சீரமைப்பு மற்றும் நிலையான அமைதியுடன் கூடிய நாடாக மாறும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அவ்வாறு இடம் பெறவில்லை என்று, ஆசியன் கரஸ்பொண்டன்ட் என்ற சர்வதேச ஆய்வு ஊடகம் தெரிவித்துள்ளது. தமிழர்களுக்கு எதிரான யுத்தம் நிறைவடைந்த பின் னர், முஸ்லிம்களுக்கு எதி ரான வன்முறைகள்அதிகரித்துள்ளன.

அண்மையில் கண்டி மற்றும் அம்பாறை உள்ளிட்ட பகுதிகளில் இடம்பெற்ற வன்முறைகளானது, வரவேற்கப்பட வேண்டியவை அல்ல.

இவ்வாறான வன்முறைகளால் பாதிக்கப்பட்ட அனைத்து தரப்பினருக்கும் நிவாரணம் வழங்கப்பட வேண்டியது கட்டாயமாகும்.

அத்துடன் மறுபடி இவ்வாறான வன்முறைகள் இடம் பெறாமல் தடுப்பதும் அரசாங்கத்துக்கும் இருக்கும் பெரும் சவால் என்றும் அந்த ஊடகம் தெரிவித்துள்ளது. (இ-7)

# சிவில் நபர்களிடம் 1300 துப்பாக்கிகள்

(கொழும்பு)

அனுமதிப்பத்திரங்களுடன் சிவில் நபர்களிடம் ஆயிரத்து 300 கைத்துப்பாக்கிகள் இருப்பதாக பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளர் என்.டி பண்டிதரத்ன தெரிவித்துள்ளார்.

மேலும் விவசாய நடவடிக்கைகளுக்காக 19 ஆயிரம் துப்பாக்கிகள் அனுமதிப் பத்திரங்களுடன் வழங்கப்பட்டுள்ளன.

சட்டவிரோத ஆயுதங்களை கையளிக்கும் பொது மன்னிப்பு காலத்தில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட துப்பாக்கிகள் கையளிக்கப்பட்டுள்ளன.

2018 ஆம் ஆண்டில் அனுமதிப்பத்திரம் பெறாமல் நபர்கள் வைத்திருக்கும் துப்பாக்கிகள் குறித்து இன்னும் கணக்கிடப்படவில்லை எனவும் பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளர் பண்டிதரத்ன தெரிவித்தார்.

அண்மையில் தனியார் பேருந்து சாரதியை தாக்கிய தென் மாகாண சபை உறுப்பினர் மற்றும் அவரது மனைவியிடம் இருந்த துப்பாக்கிக்கு 2018 ஆம் ஆண்டுக்குரிய அனுமதியை பெறவில்லை என தெரியவருகிறது. (இ-7)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு:
021 221 7603,
021 567 1532



## இதயங்கனிந்த நன்றிகள்

04.03.2018 ஞாயிற்றுக்கிழமையன்று நடைபெற்ற எமது குருத்துவ வெள்ளிவிழாவை மிக விசுவாசத்தோடு நடத்திய வெள்ளிவிழாக் குழுவினருக்கும் குரு பூஜையை ஏற்றருளிய குருவுக்கும், கலந்து சிறப்பித்த நல்லை ஆதீன முதல்வர் அவர்கட்கும் மற்றும் கல்வியாளர்களுக்கும், கலை நிகழ்வுகளை வழங்கியவர்களுக்கும், ஆலய பரிபாலகர்களுக்கும், உபயகாரப் பெருமக்களுக்கும், ஊர் மக்களுக்கும் பாராட்டுக்கள், கௌரவங்கள்,அன்பளிப்புக்கள் செய்தோருக்கும் சமூக நிறுவனங்களுக்கும் இரத்ததான முகாமில் பங்கேற்ற இளந் தொண்டர்களுக்கும், ஒழுங்கமைத்த யாழ்.போதனா வைத்தியசாலை இரத்த வங்கிப் பிரிவினருக்கும், செய்தி விளம்பரங்கள் பிரசுரித்த ஊடகத் துறையினருக்கும் எமது இதயங் கனிந்த நன்றிகளைத் தெரிவித்து மகிழ்கின்றோம்.

(3211)

சிவஸ்ரீ குமார.சரவணபவக்குருக்கள்
ஸ்ரீமதி ச.நிரஜா(இணுவில் பவாக்குருக்கள்)





அம்பிகை துணை

கச்சேரி நல்லூர் வீதி, பாணன்குளம் நாச்சி அம்மன் ஆலய

## மகோற்சவ விஞ்ஞாபனம்.

## ஏவிளம்பி வருஷம் 2018

அம்பிகை அடியார்களே!

நிகழும் மங்களகரமான ஏவிளம்பி வருடம் பங்குனி திங்கள் 4ம் நாள் 18.03.2018 ஞாயிற்றுக்கிழமை முதல் பங்குனித் திங்கள் 18ம் நாள் 01.04. 2018 ஞாயிற்றுக்கிழமை வரையான (15) பதினைந்து தினங்கள் மஹோற்சவ விழாவும் தொடர்ந்து பூங்காவனம், வைரவர் சாந்தி என்பனவும் நடை பெறத் திருவருள் பாலித்துள்ளது. திருவிழா காலத்தில் அடியார்கள் ஆலயத்திற்கு வருகை தந்து அம்பிகையை வணங்கி அருளைப் பெறுவீர்களாக.

### கிரியா கால நிகழ்வுகள்

கொடியேற்றம்: 18.03.2018 ஞாயிறு காலை 10.00 மணி
தினசரி உற்சவம்: காலை 09.30 மணி மாலை 5.00 மணி
சப்பற உற்சவம்: 30.03.2018 வெள்ளி மாலை 6.00 மணி
தேர் உற்சவம்:31.03.2018 சனி காலை 7.00 மணி
தீர்த்த உற்சவம்: 01.04.2018 ஞாயிறு காலை 9.00 மணி
பூங்காவனம்: 02.04.2018 திங்கள் மாலை 6.00 மணி

(சி-1818)

மகோற்சவ காலத்தில் தினமும் நண்பகல் அன்னதானம் (மகேஷ்வர பூஜை) நடைபெறும்.

கச்சேரி, நல்லூர் வீதி, நல்லூர். ஆலய பரிபாலனசபை.


# நகரை சுத்தமாக வைத்திருப்போம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை வட பிராந்திய சத்திய சாயி சர்வதேச நிறுவனம் எமது நகரை நாம் சுத்தமாக வைத்திருப்போம் என்ற தொனிப்பொருளின் கீழ் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணியிலிருந்து 8.30 மணி வரை யாழ். பண்ணை கடற் கரையோரத்தை சுத்தம் செய்யவுள்ளது. (இ-7)




கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய
பங்குனி உத்தரப்பொங்கல்-2018



## கடை ஏலம் விடுதல்

கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவம் எதிர்வரும் 30.03.2018 நடைபெறவுள்ளது. இப் பொங்கல் உற்சவத்தின் போது வாணிபம் செய்ய விரும்புகின்றவர்களுக்கான கடை ஏலம் விடும் நிகழ்வு எதிர்வரும் 18.03.2018 ஞாயிற்றுக்கிழமை மு.ப.10.30 மணிக்கு ஆலய முன்றலில் நடைபெறவுள்ளது என்பதனை அறியத் தருகின்றோம்.

ஏலத்தின்போது முழுத் தொகையும் உடனடியாக செலுத்தப்படுதல் வேண்டும்.

வீ.இராமநாதன்
தலைவர்

(C-1890)

தி.பிரபாகரன்
செயலாளர்.



## கல்யாணமாலை

### சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்:சுவாதி<br>கி.பா:36<br>உயரம்: 6’<br>தகைமை/தொழில்:B.COM, AAT, CA/தனியார் தொழில்<br>தொ.இ: B/8365 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: 17 செவ் 8 இல்<br>உயரம்: 5’2"<br>தகைமை/தொழில்: BBA/ அரசதொழில்<br>தொ.இ: G/6794 |
| பிறப்பு: 19 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>கி.பா: 16<br>தகைமை/தொழில்:ஆசிரியர்<br>தொ.இ: B/8366 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 62<br>தகைமை/தொழில்: HND<br>தொ.இ: G/6797 |
| பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை<br>கி.பா: 24செவ் 12 இல்<br>உயரம்: 5’5"<br>தகைமை/தொழில்:B.COM, CIMA/ வங்கிமுகாமையாளர்<br>தொ.இ: B/8367 | பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: செவ் 7 இல்<br>உயரம்: 5’4"<br>தகைமை/தொழில்: O/L<br>தொ.இ: G/6806 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா: செவ் 1 இல்<br>உயரம்: 5’11"<br>தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில்<br>தொ.இ: B/8368 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா: 17<br>உயரம்: 5’4"<br>தகைமை/தொழில்: BSc<br>தொ.இ: G/6810 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# அரச அலுவலகங்களில் மதத்தலங்கள் அமைப்பது தவறான விடயம்- சிவமோகன்

(பனிக்கன்குளம்)

அரச அலுவலகங்களில் மதத் தலங்கள் வைப்பது தவறான விடயம் என நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் தெரிவித்துள்ளார். வவுனியா மாவட்ட செயலகத்தில் மத நல்லிணக்கம் என்னும் பெயரில் புத்தர் சிலை வைப்பதற்கு எடுக்கும் நடவடிக்கை தொடர்பில் வினவிய போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும் தெரிவிக்கையில், மதம் சார்ந்த விடயங்களை சரியாக கையாள வேண்டும். பௌத்த மக்கள் இல்லாத இடங்களில் புத்தர் சிலைகள் வைப்பது தவறானது. அதுபோல அரச திணைக்களங்களிலும் மதத் தலங்கள் தேவையற்றவை. குறிப்பாக வைத்தியசாலைகளில் மட்டும் இதுவரை காலமும் ஒவ்வொரு மத மக்களுக்கான மதத்தலங்கள் இருந்தன. ஏனெனில் அங்கு வரும் நோயாளர்கள் அவர்களது நோயை குணப்படுத்த கடவுளை நம்புவார்கள். அதனால் வழிபடுவதற்காக அங்கு மதத்தலங்கள் இருந்தன. ஆனால் மாவட்ட செயலகத்தில் அது தேவையில்லை.



ஏனெனில் மாவட்ட செயலகத்திற்கு மக்கள் வழிபட செல்வதில்லை. தமது அரச தேவைகளை பூர்த்தி செய்யவே செல்கின்றனர்.

அப்படியான நிலையில் வவுனியாவில் மாவட்ட செயலகத்தில் புத்தர் சிலை வைக்க அரச அதிபர் நடவடிக்கை எடுப்பாராக இருந்தால் அது தவறான விடயம். இந்த நடவடிக்கை உடனடியாக தடுத்து நிறுத்தப்பட வேண்டும் என தெரிவித்துள்ளார். (7-281)

# சிறுபான்மை மக்கள் சிறுபான்மையாக இருப்பதே பெரும்பான்மையினரின் விருப்பம்- சிவநேசன் விசனம்

(பனிக்கன்குளம்)

சிறுபான்மை மக்களை இன்னும் சிறுபான்மையாக்க வேண்டும் என்பது பெரும்பான்மையினரின் திட்டமாக இருக்கின்றது. அவர்கள் திட்டத்தை நிறைவேற்றிக் கொண்டுதான் இருக்கின்றார்கள். நாங்கள் சொல்லி சொல்லி இன்னும் கீழே போய்க்கொண்டு இருக்கின்றோம். தெற்கில் இருக்கின்ற சிங்கள அரசு மட்டும் தமிழர்களை ஒடுக்கவில்லை நாங்களும் சிந்திக்க வேண்டும் .நாங்கள் பல தடவைகள் சொல்லிக்கொண்டுள்ளோம். மாவட்டத்தில் வளமான பகுதிகள் இருக்கின்றது. அவற்றை அபிவிருத்தி செய்து மக்கள் வாழக்கூடியதாக நாங்கள் மாற்றுவோமாக இருந்தால் எங்களுடைய மக்களும் அங்கு சென்று குடியேறமுடியும். அவர்களும் வளர்ந்து கொள்வார்கள். அப்போதுதான் சிங்கள குடியேற்றங்கள் நிறுத்தப்பட முடியும் என்று சொன்னோம். அதற்கு யாரும் தயார் இல்லை. அதிகாரிகள் கூட இதனை பற்றி சிந்திக்கின்றார்கள் இல்லை என்றும் வடக்கு மாகாண சபை விவசாய அமைச்சர் க.சிவநேசன் தெரிவித்துள்ளார்.

போரினால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 207 பயனாளிகளுக்கான விவசாய உள்ளீடுகள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் காலை 9 .30 மணிக்கு ஒட்டுசுட்டான் விவசாய பயிற்சி நிலையத்தில் பிரதி மாகாண விவசாய பணிப்பாளர் பொ.அற்புதச் சந்திரன் தலைமையில் இடம் பெற்றது.

இங்கு பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

முல்லை. மாவட்டத்தில் வாழ்கின்ற மக்கள் மிக நீண்டகாலமாக பரம்பரை பரம்பரையாக சொந்த வாழ்இடங்களில் சொத்துக்களை இழந்த மக்களாக காணப்படுகின்றனர். இந்நிலையில் மாவட்டத்தில் விவசாய அபிவிருத்தி ஏற்பட வேண்டும் என்றால் சரியான திட்டமிடல் மூலமே அவற்றை ஏற்படுத்த முடியும்.

இந்நிலையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த மூன்று ஆண்டுகளாக காலநிலை மாற்றம் மிக மோசமாக பாதித்துள்ளது. நாங்கள் எதிர்பாக்கின்ற மழை கிடைக்கவில்லை. உரிய காலத்தில் இவை கிடைக்கவில்லை. இது மக்களை மிகவும் மோசமாக பாதித்துள்ளது. இந்த அடிப்படையில் எவ்வாறு மாவட்டத்தில் விவசாய திட்டமிடல்களை கொண்டு செல்ல வேண்டும் என்பதில் பல மாறுபட்ட கருத்துக்கள் இருக்கின்றன.

முல்லைத்தீவு மாவட்டம் என்பது இன்று ஒரு நெற்செய்கை மாவட்டமாக கணிக்கப்படுகின்றது. விவசாய மக்கள் நெற்செய்கையினை முழுமையாக நம்பி தங்கள் வாழ்வாதாரத்தினை கொண்டு செல்லவேண்டுமாக இருந்தால் 16 ஏக்கர் காணியினை இரண்டு போகங்கள் செய்தால் மட்டுமே சாதாரண வாழ்க்கையினை ஒரு குடும்பம் கொண்டு செல்லும் என்று எங்கள் ஆய்வில் கிடைக்கின்ற உண்மை.

இந்நிலையில் காலநிலை மாற்றத்திற்கு ஏற்ப நெற்செய்கைக்கு பதிலாக மாற்றீடான பயிர்களை நாங்கள் ஏன் செய்யக்கூடாது. ஒரு விவசாயி ஒரு ஏக்கர் நெற்செய்கை செய்வதானால் மாதவருமானம் 5ஆயிரம் ரூபாவாக இருக்கின்றது. அதே ஒரு ஏக்கரில் கடலை பயிரிடுகின்றபோது மாத வருமானம் 20ஆயிரம் ரூபாவாக கிடைக்கின்றது. இவ்வாறு பணப்பயிர்களை நாங்கள் மேற்கொள்கின்ற போது இன்னும்வருமானம் அதிகரிக்கின்றது.

எனவே இன்று நாங்கள்தான் எங்களை வளர்த்துக் கொள்ள வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (7-281)

# விவசாயத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் 214 பயனாளிகளுக்கு உதவிகள் வழங்கல்







(பனிக்கன்குளம்)

வவுனியா விவசாய திணைக்களத்தின் ஏற்பாட்டில் நேற்றுக் காலை 10 மணியளவில் தாண்டிக்குளம் வீதியில் அமைந்துள்ள விவசாய உற்பத்தி பண்ணையில் தெரிவு செய்யப்பட்ட 214 பயனாளிகளுக்கு 13.5 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் உதவித் திட்டங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

வவுனியாவில் நான்கு பிரதேச செயலகங்களில் பெண் தலைமைத்துவ குடும்பத்தினை சேர்ந்தவர்கள் , போரால் பாதிப்படைந்தவர்கள் , பெற்றோரை இழந்த குடும்பங்கள் என்ற அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட 214 பயனாளிகளுக்கு 13.5 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் மோட்டர் பைப் , தூவல் நீர்ப்பாசன தொகுதி , துளிர் நீர்ப்பாசன தொகுதி , மண்ணெண்ணெயில் இயங்கும் மோட்டார் போன்ற பல பொருட்கள் வழங்கப்பட்டன.

இந் நிகழ்வில் வடக்கு மாகாண விவசாய அமைச்சர் க.சிவநேசன் , வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான ப.சத்தியலிங்கம் , ம.தியாகராஜா , இ.இந்திரராஜா , வடக்கு மாகாண விவசாய அமைச்சரின் செயலாளர், விவசாய பணிப்பாளர் , விவசாய திணைக்கள உத்தியோகத்தர்கள் , பயனாளிகள் என பலரும் கலந்து கொண்டனர். (7-281)

# நோன்மதி தினத்தை முன்னிட்டு 3 முத்திரைகள் வெளியிடப்படும்

## தபால் திணைக்களம் தெரிவிப்பு

(கொழும்பு)

விசாக நோன்மதி தினத்தை முன்னிட்டு பௌத்த பாரம்பரியங்களுக்கு முன்னுரிமை அளித்து மூன்று புதிய முத்திரைகள் வெளியிடப்படவுள்ளதாக தபால் திணைக்களம் அறிவித்துள்ளதுடன் இவை 10 ரூபா, 15 ரூபா, 30 ரூபா ஆகிய பெறுமதிகளை கொண்டதாக இருக்கும் என்று முத்திரை வெளியீட்டு பணியகத்தின் பணிப்பாளர் எச்.வீ.டீ. அபேவிக்ரம தெரிவித்தார்.

எதிர்வரும் 23 ஆம் திகதி மேலும் நான்கு முத்திரைகளையும், அடுத்த மாத முற்பகுதியில் மேலும் மூன்று முத்திரைகளையும் வெளியிட திட்டமிட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

எதிர்வரும் 23,-24.25 ஆம் திகதிகளில் கொழும்பில் முத்திரை கண்காட்சி ஒன்றும் இடம் பெறவுள்ளது. (7)



புதிதாக அமைக்கப்பட்டுள்ள வவுனியா இந்துக் கல்லூரியின் வழிபாட்டுத்தலத்திற்கான 20000/- பெறுமதியான மின்விளக்குகள் முன்னாள் உப.நகரபிதா க.சந்திரகுலசிங்கத்தினால் (மோகன்) அன்பளிப்பு செய்யப்பட்டது. அதேவேளை முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் செ.மயூரனின் ஒதுக்கப்பட்ட நிதியில் இருந்து தெரிவு செய்யப்பட்ட வறுமைக்கோட்டுக்குட்பட்ட மாணவர்களுக்கு துவிச்சக்கரவண்டிகளும் அன்பளிப்பு செய்யப்பட்டன.

# வவுனியாவில் வரட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு காப்புறுதித் திட்டங்கள்

## கமநல அபிவிருத்தி திணைக்களம் தெரிவிப்பு

(குருமன்காடு)

வவுனியாவில் வரட்சி காரணமாக 12 ஆயிரத்து 34 தசம் 25 ஏக்கர் நெல் முற்று முழுதாக அழிவடைந்துள்ளது என கமநல அபிவிருத்தி திணைக்கள உதவி ஆணையாளர் இ.விஜயகுமார் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் ஏற்பட்ட வரட்சி குறித்து கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில்,

நாடு முழுவதும் ஏற்பட்ட கடுமையான வரட்சி நிலையில் வவுனியா மாவட்டமும் உள்ளடங்குகின்றது. வவுனியா மாவட்டத்தை பொறுத்த வகையில் 2017 மற்றும் 2018 பெரும்போகத்தின் இலக்காக 53 ஆயிரத்து 885 தசம் 5 ஏக்கரை விளைச்சலுக்கு எடுத்திருந்தோம். அந்த அடிப்படையில் மழை வீழ்ச்சியை அடிப்படையாகக் கொண்டு 48 ஆயிரத்து 399 ஏக்கருக்காக பயிர்ச்செய்கை கூட்டங்களை நடத்தியிருந்தோம். எனினும் வவுனியா மாவட்டத்தில் ஏற்பட்ட வரட்சி காரணமாக 29 ஆயிரத்து 840 தசம் 5 ஏக்கர் வயல் நிலங்களில் பயிர்ச்செய்கை மேற்கொண்டிருந்தோம். சராசரியாக 50 வீதமான காணிகளில் மாத்திரமே பயர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டது.

பயிர்ச்செய்ல்கயின் பின்னரான காலப்பகுதியில் எதிர்பார்த்த மழை பெய்யாத காரணத்தினால் 12 ஆயிரத்து 34 தசம் 25 ஏக்கர் கணிகள் முற்ற முழுதாக அழிவடைந்துள்ளன.

அந்த அடிப்படையில் 6 ஆயிரத்து 170 விவசாயிகள் முற்று முழுதாக பாதிக்கப்பட்டுள்ளனர். அத்துடன் நீரின்மை காரணமாக 2018 ஆம் ஆண்டுக்கான சிறுபோகமும் பாதிக்கப்பட்டுள்ளது. 15 ஆயிரத்து 900 ஏக்கர் சிறுபோகத்திற்காக எடுத்திருந்தோம். நீரின்மை காரணமாக 300 ஏக்கர் நிலத்தில் மாத்திரமே பயிர்ச்செய்கை மேற்கொள்ள தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளது.

இந்த வரட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்காக காப்புறுதித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. அந்த வகையில் காப்புறுதிக்காக 1500 ரூபா செலுத்தியவர்கள் 25 ஆயிரம் ரூபா வரை நட்டஈட்டினை பெற்றுக் கொள்ள முடியும். அதற்கான விண்ணப்பங்கள் கமநல சேவைகள் திணைக்களத்தில் விநியோகிக்கப்படுகிறது. கடந்த வரவு-செலவுத் திட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட 40 ஆயிரம் ரூபாவை காப்புறுதியாக பெறுவதற்கு ரூபா 675 செலுத்தியுள்ளவர்களுக்கு வழங்கப்படும். உரமானியம் பெற்று காப்புறுதி செய்யாத விவசாயிகளுக்கும் அரசினால் நட்டஈடு வழங்கப்படும். அதற்கான விண்ணப்பப் படிவங்களும் கமக்கார அமைப்புக்கள் ஊடாக விநியோகிக்கப்படுகிறது என தெரிவித்தார். (7-250)

# ஓகான் விசேடதேவையுடையோருக்கான ஒலிம்பிக் விளையாட்டு நிகழ்வுகள் இன்று

(குருமன்காடு)

ஓகான் நிறுவனத்தின் விசேட தேவைக்குட்பட்டோருக்கான விசேட ஒலிம்பிக் விளையாட்டு நிகழ்வுகள் இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு வவுனியா நகரசபை மைதானம் மற்றும் வுனியா தேசிய கல்வியியல் கல்லூரி மண்டபத்தில் ஓகான் நிறுவனத்தின் தலைவர் வி. சுப்பிரமணியம் தலைமையில் இடம்பெறும்.

இந் நிகழ் வுகளில் பிரதம விருந்தி னராக வடக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி வனஜா செல்வரட்ணம். சிறப்பு விருந்தினராக மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர், கௌரவ விருந்தினராக வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் ஆகியோர் கலந்து கொள்வர். -(7-250)



# கிணற்றில் விழுந்த இருவர் பரிதாபகரமாக உயிரிழப்பு

## மடு காக்கையன் குளத்தில் சம்பவம்

(பனிக்கன்குளம்)

மடு பிரதேசச் செயலாளர் பிரிவுக்குட்பட்ட காக்கையன் குளம் கிராமத்தைச் சேர்ந்த இரு சிறுவர்கள் தமது வீட்டிற்கு பின் பகுதி காணியில் காணப்பட்ட பாதுகாப்பற்ற தோட்டக் கிணற்றில் விழுந்து உயிரிழந்த சம்பவம் ஒன்று நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர்கள் சகோதரர்களான முஹமட் சம்ரான் (வயது-5) மற்றும் முஹமட் அஸ்ஹான் (வயது-7) என தெரிய வந்துள்ளது.

குறித்த சகோதரர்கள் இருவரும் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாலை காக்கையன் குளம் கிராமத்தில் உள்ள தமது வீட்டில் விளையாடிக்கொண்டிருந்துள்ளனர்.

இதன்போது தாய் தனது மூன்றாவது பிள்ளையுடன் இருந்துள்ளார். தந்த கூலித் தொழில் நிமித்தம் வீட்டில் இருந்து வெளியில் சென்றுள்ளார்.

வீட்டு முற்றத்தில் விளையாடிக்கொண்டிருந்த குறித்த இரு சிறுவர்களும் திடீர் என நீண்டநேரமாக காணாமல் போன நிலையில் பெற்றோர் மற்றும் உறவினர்கள் வீட்டைச் சுற்றி தேடியுள்ளனர்.

இதன்போது அவர்களுடைய வீட்டிற்கு பின் பகுதியில் காணப்பட்ட காணியில் பாதுகாப்பற்ற முறையில் இருந்த தோட்டக்கிணற்றினுள் சடலமாகக் காணப்பட்டனர்.

உடனடியாக மடு பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்ட நிலையில் சம்பவ இடத்திற்கு விரைந்த மடு பொலிஸார் குறித்த இரு சடலங்களையும் மீட்டு நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு மன்னார் பொது வைத்தியசாலையில் ஒப்படைத்தனர்.

நேற்று வெள்ளிக்கிழமை காலை 9 மணியளவில் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்குச் சென்ற மாவட்ட பதில் நீதவான் இ.கயஸ் பெல்டானோ பிரேத அறையில் வைக்கப்பட்டிருந்த சடலங்களை பார்வையிட்டதோடு, மரண விசாரணைகளையும் மேற்கொண்டார். (7-4-281)

# வடக்கு மாகாண விவசாய அமைச்சால் விவசாயிகளுக்கு மானியம் வழங்கல்





(குருமன்காடு)

வடமாகாண விவசாய அமைச்சினால் வவுனியா விவசாயிகளுக்கு 13.5 மில்லியன் ரூபாய் பெறுமதியான விவசாய உபகரணங்கள் மானியமாக வழங்கப்பட்டுள்ளன.

வவுனியா, தாண்டிக்குளம் விவசாயப் பண்ணையில் உதவி விவசாய பணிப்பாளர் த.யோகேஸ்வரன் தலைமையில் நேற்று முன்தினம் இந்நிகழ்வு இடம்பெற்றது.


உலக உணவு, விவசாய ஸ்தாபனத்தின் உதவியுடன் 13.5 மில்லியன் ரூபாய் பெறுமதியான விவசாய உபகரணங்கள் வடமாகாண விவசாய அமைச்சினால் வவுனியா மாவட்டத்தைச் சேந்த 214 விவசாயிகளுக்கே வழங்கி வைக்கப்பட்டன.

நீர் இறைக்கும் இயந்திரம், நீர் விநியோகக் குழாய்கள், முட்கம்பிகள் என பல்வேறு வகையான விவசாய உபகரணங்கள் இதன்போது வழங்கி வைக்கப்பட்டன. இதில் வடமாகாண விவசாய அமைச்சர் க.சிவநேசன், வடமாகாண சபை உறுப்பினர்களான ப.சத்தியலிங்கம், ம.தியாகராசா, இ.இந்திராசா, வடமாகாண விவசாய அமைச்சின் செயலாளர் க.சத்தியசீலன், வடமாகாண விவசாய பணிப்பாளர், விவசாய போதனாசிரியர்கள், விவசாயிகள் எனப்பலரும் கலந்து கொண்டனர். (7-250)

# 3 இந்து ஆலயங்களில் ஒரே இரவில் திருட்டு

## பொலிஸாரின் அசமந்தப் போக்கே காரணம்





0

நேற்று முன்தினம் இரவு கிளிநொச்சி முரசுமோட்டைப் பகுதியில் உள்ள வரலாற்றுச்சிறப்புமிக்க மூன்று ஆலயங்களில் இனம் தெரியாத நபர்களால் பிரதான விக்கிரகங்கள் உடைக்கப்பட்டும் திருடப்பட்டும் உள்ளன.

முரசுமோட்டை சிவசுப்பிரமணியர் ஆலயத்தின் கதவுகள் உடைக்கப்பட்டு ஆலயத்தின் மூல விக்கிரகமான வேல் முறிக்கப்பட்டுள்ளதுடன் களஞ்சிய அறையும் சோதனை இடப்பட்டுள்ளது. அத்துடன் முரசுமோட்டை சேற்றுக்கண்டி முத்துமாரி அம்மன் ஆலயக் கதவுகளும் உடைக்கப்பட்டு மூலவிக்கிரகத்தையும் உடைத்துள்ளதுடன் அம்மனுக்கு சாத்தப்பட்டிருந்த தங்கப் பொட்டுக்கள் மற்றும் உண்டியலில் இருந்த பணம் என்பவற்றுடன் ஓர் விக்கிரகத்தையும் எடுத்துச்சென்றுள்ளனர். அத்துடன் இரண்டாம் கட்டை பிள்ளையார் ஆலயத்திலும் ஒலி பெருக்கி சாதனங்களும் திருடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது

இந்த மூன்று ஆலயங்களிலும் ஒரு குழுவினரே கைவரிசையினைக் காட்டியிருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

வரலாற்றுச்சிறப்பு மிக்க இவ் ஆலயங்களில் களவு போன பெறுமதிகளை விட மூல விக்கிரகத்தினை உடைத்தமையால் இவ் இரு ஆலயங்களுக்கும் கும்பாபிசேகம் செய்ய கூடிய பணம் தேவைப்படும் என ஆலயங்களின் நிர்வாகத்தினர் தெரிவிக்கின்றனர்.

மேலும் கிளிநொச்சியை பொறுத்தவரையில் ஒரு குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் கிளிநொச்சி நகரின் ஏ-9 பிரதான வீதி மற்றும் கனகபுரம் டிப்போ வீதியில் அமைந்துள்ள இருபதுக்கு மேற்பட்ட வியாபார நிலையங்கள் உடைக்கப்பட்டுள்ளன.

இவற்றில் இருந்து பணமும் பெறுமதியான பொருட்களும் திருடப்பட்டுள்ள போதும் பொலிஸாரால் இது வரை எவ்வித முன்னேற்றகரமான நடிவடிக்கையும் எடுக்கப்படவில்லை. பொலிஸாரின் இவ் அசமந்தப் போக்கே தொடர்ந்தும் கிளிநொச்சியில் திருட்டு மற்றும் அடாவடிகள் தொடர்ந்தும் நடைபெறுவதற்கு முக்கிய காரணம் என கல்வியியலாளர்கள் குற்றஞ்சாட்டியுள்ளார். (7-60-312)





முல்லைத்தீவு கண்ணகைபுரம் மெதடிஸ்த மிஷன் முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டுப் போட்டி நேற்று முன்தினம் முன்பள்ளி மைதானத்தில் நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராக ஸ்கந்தபுரம் சமுர்த்தி வங்கி முகாமையாளர் கலந்து கொண்டார்.

(படங்கள்:-கிளிநொச்சி செய்தியாளர்)

# சூழலுக்கியைவான பசுமைத் தொழில்நுட்பங்கள்—147

## நிறையுணவையும் சத்துணவையும் கவனத்திற்கொள்ளல் அவசியம்!



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

வாருங்கள் எம்மினிய உறவுகளே!

உலக உணவு திட்டத்தின் 2016 ஆம் ஆண்டு அறிக்கையில் இயற்கையின் சீற்றங்களைப் பற்றி குறிப்பிடப்பட்டு இந்த காலநிலை மாற்றங்களுக்கூடாக நாம் தப்பிப் பிழைத்தல் என்பதுடன் விவசாயச் செய்கையையும் மாற்றியமைத்துக்கொள்ளல் என்பதனை வலியுறுத்தியிருக்கின்றது. குறிப்பாக இலங்கையின் மொத்த சனத்தொகையான 21 மில்லியனில் நாலிலொரு பகுதி மக்கள் இயற்கையின் சீற்றத்திற்குட்பட்ட காலநிலை மாற்றத்தினுள் அகப்பட்டு சத்தான உணவை உட்கொள்ளாதிருப்பது கவனத்திற்கொள்ளப்பட்டுள்ளது. காலநிலை மாற்றம் உயர்த்தப்பட வேண்டும் என்பதாகின்றது. உணவின்றி எதுவுமசையாது. அதிமுக்கியமாக மக்களை பட்டினிச்சாவிலிருந்து காப்பாற்றுவதற்கான முன்னெடுப்புக்களை உரியவர்கள் உடனடியான ஆரம்பித்தல் வேண்டும். இந்த நூற்றாண்டில் உணவின்றி மக்கள் மடிவதென்பது ஜீரணிக்க முடியாத செயற்பாடாகும். இதனை வெறுமனே ஒரு திட்டமாக செயற்படுத்த முடியாது. மாறாக அதனை மக்கள் இயக்கமாக மாற்றியமைக்க வேண்டும். மக்கள் இயக்கம் என்றவுடன் மாற்றி எதனையும் யோசிக்கக்கூடாது. எமக்காக நாம் உணவை உற்பத்தி செய்வதற்கான முயற்சியினை செய்வதனை இங்கே குறிப்பிட்டிருக்கின்றேன்.

சரணை அவசியமாகின்றது. மக்களை இயற்கையின் இடர் அச்சுறுத்தும் போதும் தமது உணவுற்பத்தியை தொடர்ந்தும் மேற்கொள்ளும் தொழில்நுட்ப வழிமுறைகள் கண்டுபிடிக்கப்படல் வேண்டும். இதற்காக புதிய கண்டுபிடிப்புக்கள் மற்றும் புத்தாக்க முயற்சிகளினூடாக புதிய உணவுகள் அதிலும் பாரம்பரிய உணவுகளை பிரதிபலிக்கும் உணவுகளாக உற்பத்தி செய்யப்படல் வேண்டும்.

ஜப்பானில் நிலநடுக்கம் வரும் போது மக்கள் தாங்கள் அமைத்திருக்கும் கடதாசிமட்டை வீடுகளிலிருந்து தம்மை தப்பிக்க வழிசெய்திருக்கின்றார்கள். இன்னும் நிலநடுக்கத்தின் அசைவிற்கு ஈடுகொடுத்து நிலைத்துநிற்கும் வீடுகளை கொள்ள முடியும்.

உணவுற்பத்தியியல் நஞ்சற்ற உணவினை உற்பத்தி செய்ய வேண்டுமென்பது மக்களின் கோரிக்கையாக இருக்கின்றது. இதனை செவிமடுத்த அனைத்து விவசாயப் பெருமக்களுக்கும் நன்றி கூறக் கடமைப்படுத்தப்பட்டுள்ளோம். விவசாயப்பெருமக்கள் சேற்றில் கைவைத்தால் தான் உலகத்து மக்கள் அனைவரும் சோற்றில் கை வைக்கமுடியும். அந்த வகையில் விவசாயத்தையும் விவசாயிகளையும் காப்பாற்றும் பொறுப்பு எமக்கெல்லாம் உண்டு என நாம் அனைவரும் உணரவேண்டும். நாம் வாழும் இக்காலம் பொன்னானது.

தனியொருவனுக்கு உணவில் கொண்டே இருக்கின்றது. தற்போது அதனைப் பற்றி உலகளாவிய ரீதியில் சமூகப் பொறுப்புள்ளவர்கள் ஓரளவிற்கு சிந்தி

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 162

என்பது பாரியதொரு பிரச்சினையாக உருவெடுத்திருக்கின்றது. இது உலகளாவிய பிரச்சினையாக காணப்பட்டாலும் எமது சிறிய நாட்டிலும் இதனது தாக்கம் பாரியளவில் உணரத்தலைப்பட்டிருக்கின்றது. கடந்த ஆண்டுகளில் ஏற்பட்ட வரட்சியும் வெள்ளப்பெருக்கும் இதற்கொரு நல்ல உதாரணம்.

காலநிலை சீரற்று பாரியளவில் மாற்றமடையும் போது அதற்கேற்ப உயிரினங்களும் தம்மை இயைவாக்கி மாற்றங்கொள்ள வேண்டும். இது அனைத்து உயிரினங்களுக்குள்ள இயையாயினும் மனிதன் மட்டும் அந்த மாற்றத்திற்குள் உள்ளார்ந்து வாழப் பழகிக்கொள்ளவில்லை. புதிய உணவுகள், புதிய உற்பத்திகள் வாழ்வியலை மாற்றிப்போட்டிருக்கின்றன. அதனால் நாம் எமது சுயத்தை இழந்து கொண்டிருக்கின்றோம்.

உலக உணவு திட்டத்தின் கடந்த வருட அறிக்கையின் படி 33 சதவீதமான மக்கள் (அதாவது 6.8 மில்லியன் மக்கள்) சத்தான நிறையுணவை உண்பதற்கு ஏற்படும் செலவுக்கான பண பலத்தை கொண்டிருக்கவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இன்னும் பலர் பட்டினி வாழ்க்கைக்குள் சிறைப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. ஒரு பக்கம் எமது நாடு நெல் உற்பத்தியில் தன்னிறைவு கண்டுள்ளதாக பெருமைப்பட்டுக் கொண்டிருக்கும் அதே நேரத்தில் மறுபக்கத்தில் பலர் பட்டினியின் விளிம்பில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள் என்பது மனதை நெடுரும் செய்தியாகவே இருக்கின்றது. அப்படியாயின் விவசாயத் துறையின் பங்களிப்பு இன்னும்

இலங்கையில் 2017 மே மாதத்தில் ஏற்பட்ட றோவானு (Roanu) சூறாவளியினால் ஏற்பட்ட வெள்ளப்




பெருக்கில் நாட்டிலுள்ள 25 மாவட்டங்களில் 22 மாவட்டங்களைச் சேர்ந்த 340,000 மக்கள் பாதிக்கப்பட்டனர் என புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

இந்த பாதிப்பின் விளைவாக பட்டினியினால் மக்கள் அதிகளவில் பாதிக்கப்பட்டனர். இதன் விளைவாக தாழ்வான பகுதியிலிருந்த மக்கள் உயர்வான பகுதிகளுக்கு மாற்றப்பட்டும் அவர்களால் புதிய இடத்தில் தமது வாழ்க்கையை சுமுகமாக கொண்டு செல்ல முடியவில்லை என்பதோடு உணவுற்பத்தியிலும் ஈடுபடுவதில் பல இன்னல்களை அடைவதாக அறியமுடிகின்றது.

ஆனால் பலவருடங்களாக எதுவுமே நடைபெறாதிருந்த நிலையில் திடீரென இயற்கையின் சீற்றம் ஏற்படும் போது அதனை தாங்கும் சக்தியற்றவர்களாகவே மக்கள் காணப்படுகின்றனர்.

இங்குதான் தொழில்நுட்பத்தின் வசதிவாய்ப்புள்ளவர்களின் அனுயும் உருவாக்குகின்றார்கள். பிரச்சினைகளை தீர்ப்பதற்கென்றே அவர்களது ஆய்வுகளை முன்னிறுத்தி பலவிதமான கண்டுபிடிப்புக்களை உள்வாங்கியிருக்கின்றார்கள்.

இது போன்ற பிரச்சினைகளை தீர்க்கக்கூடிய கண்டுபிடிப்புக்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டால் எமது நாட்டிலும் காலநிலை மாற்றத்தினால் ஏற்படும் அழிவுகளிலிருந்து நாம் தப்பிக்க வழியுண்டு. காலநிலை மாற்றத்தை துல்லியமாக அளவிடும் கருவிகளை பயன்படுத்தி அவ்வப்போது மக்களுக்கான அறிவித்தல்களை கொடுத்தால் மக்கள் தங்களை விழிப்புணர்வுக்குட்படுத்தி காப்பாற்றுவதற்கான முயற்சிகளை எடுப்பார்கள்.

வருமுன் காப்போம் என்னும் கருத்துப்பொதிக்கேற்ப இவ்வாறான செயன்முறைக்குள் நாம் மக்களை உள்ளீர்க்க வேண்டும். மாறிவரும் காலநிலைக்கேற்ப தக்கனபிழைத்தல் உத்திகளை வகுத்து அதனை நாமனைவரும் கடைப்பிடித்து வந்தால் தான் இனிவரும் எமது சந்ததியினையும் நாம் காப்பாற்றிக் லையென்றால் ஜெகத்தினையே அழித்திடுவோம் என்பதன் அர்த்தம் அனைவருக்கும் புரிவது எப்போது?

உழவனின் வாழ்வாதாரம் செழித்தால் தான் அவன் உண்டாக்கும் உணவும் அனைவருக்கும் பசியாற உதவும். உழவர் பெருமக்கள் தமது வாழ்வாதாரத்தை உயர்த்த முயற்சிக்கும் போது அவர்களுக்கு அனைத்து உதவிகளும் வழங்கப்பட வேண்டும் என்பதற்குப் பதிலாக சொல்பவை செயலில் இருக்க வேண்டும்.

உலகளாவிய ரீதியில் ஏற்படும் காலநிலை மாற்றத்தின் அவதானிப்புக்களையும் நாம் கவனத்திற்கொண்டு அதன்மூலம் ஏற்படும் விளைவுகளை முன்கூட்டியே பதிவு செய்து மக்களை விழிப்புணர்வு செய்வதன் மூலமும் தக்கனெனப் பிழைத்தலுக்கான வழிவகைகளையும் அதற்கான மாற்றுவழிகளையும் பரிந்துரைப்பதன் மூலமும் வருகின்ற பாரிய அழிவுகளிலிருந்து மக்களைக் காப்பாற்றிட முடியும்.

காலநிலை மாற்றம் பலவழிகளில் பயிர்ச்செய்கையை பாதித்துக்கத் தொடங்கியிக்கின்ற நிலையில் அதனை நடைமுறைப்படுத்தும் வழிவகைகளை கவனிக்க வேண்டும்.

எமது பிரதேசத்திலுள்ள வளங்களைப் பயன்படுத்தி அவற்றை வினைத்திறனானதாக நாம் பயன்படுத்த ஆரம்பித்தால் நாடும் நகரமும் விருத்தியடையும் நாமும் எமது மக்களை காப்பாற்றிக்கொள்ளலாம்.

நமது உணவில் நிறையுணவு மிகவும் முக்கியமானதாக கருதப்படல் வேண்டும். குறையுணவு உண்பதனால் நாம் எதிர்ப்பு சக்தியினை இழந்து தினந்தினம் பலநோய்களுக்கு ஆளாகிக்கொண்டிருக்கின்றோம். அதேபோல சத்துணவும் மிகவும் முக்கியமானதாகும்.

பாரம்பரிய உணவில் சத்துணவு அனைத்தும் நிறைந்திருந்தது. அதனை நாம் கவனத்திற்கொண்டால் எமது சந்ததியையாவது வளமானதாக எதிர்ப்புசக்தியுள்ளதாக நாம் உருவாக்கிட முடியும்.

இதனைப்பற்றி பல முறை எழுதினாலும் நம்மவர்கள் அதனை ஒரு பொருட்டாகவே எடுத்துக்கொள்வதில்லை. எமது சுகாதாரத்தையும் குடும்ப சுகாதாரத்தையும் நாம் கவனத்திற்கொண்டால் நிச்சயமாக அது வளமுள்ள சந்ததியை உருவாக்குவதில் முன்னிற்கும் என்பதற்கப்பால் இதுவொரு சமூகக் கடமை என்பதனையும் நாம் புரிந்து கொள்ளவேண்டும்.

முதலில் நாம் இதனை செய்ய முயற்சிசெய்வோம் சமூகம் தானாக உணர்ந்து அதனை செய்ய முயற்சி செய்யும். எதுவும் நம்மிலிருந்து தானே ஆரம்பிக்க வேண்டும். அதனைச் செய்ய தலைப்படுவோமா?

# கொத்துக் குண்டு வீச்சு குறித்து இலங்கையிடம் ஐ.நா.விளக்கம் கோரும்

## சர்வதேச மனிதவுரிமைகள் கண்காணிப்பகம் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

கொத்துக்குண்டுகள் வீச்சு தொடர்பான தமது முன்னைய செயற்பாடு குறித்து இலங்கையால் தற்போது பதில் வழங்க முடியும் என்றும் ஐ.நா. மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

கொத்துக்குண்டுகள் தொடர்பான சாசனத்தில் கைச்சாத்திட்ட 103 ஆவது நாடாக இலங்கை கடந்த மாதம் இணைந்துள்ளது.

கொத்துக்குண்டுகள் மற்றும் நிலக்கண்ணிகள் தொடர்பான இரண்டு உடன்படிக்கைகளில் கைச்சாத்திட்டதன் அடிப்படையில், ஏற்கனவே தாம் பயன்படுத்திய கொத்துக் குண்டுகள் மற்றும் நிலக் கண்ணி வெடிகள் தொடர்பில் இலங்கை அரசாங்கத்தினால் பதிலளிக்க முடியும் என்று மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது

இதன் கீழ் இலங்கை அரசாங்கம், இனிவரும் காலங்களில் கொத்துக்குண்டுகளை பயன்படுத்தவோ அல்லது தயாரிக்கவோ முடியாது.

அத்துடன் அந்த உடன்படிக்கையை அமுல் செய்ய ஏனைய நாடுகளின் உதவிகளைப் பெற்றுக்கொள்ளவும் முடியும்.



இந்த நிலையில் உடன்படிக்கையில் கைச்சாத்திட்ட அரசாங்கத்தரப்பு என்ற அடிப்படையில் இலங்கையினால் உத்தியோகபூர்வமாக தமது முன்னைய செயற்பாடு குறித்து பதில் வழங்க முடியும் என்றும் மனித உரிமைகள் கண்காணிப்பகம் சுட்டிக் காட்டியுள்ளது.

போரின் போது கொத்துக் குண்டுகளை இலங்கை பயன்படுத்தியதாக குற்றம் சுமத்தப்பட்டு வருகின்ற போதும், அரசாங்கத்தினரும் படையினரும் அதனை மறுத்து வருகின்றனர். இதேவேளை இந்த உடன்படிக்கைகளில் இந்தியா, பாகிஸ்தான் மற்றும் நேபாளம் போன்ற நாடுகள் கைச்சாத்திடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# இலங்கைக்கு மேலும் மூன்று ரோந்துக் கப்பல்களை வழங்குகிறது அவுஸ்திரேலியா



(கொழும்பு)

இலங்கைக்கு இந்த ஆண்டு மேலும் மூன்று ரோந்துக் கப்பல்களை அவுஸ்திரேலியா வழங்கவுள்ளது. இலங்கையின் கடல்சார் கண்காணிப்புத் திறனை வலுப்படுத்தும் நோக்கிலேயே இந்தக் கப்பல்கள் வழங்கப்படவுள்ளன.

இந்த ஆண்டு போர்ட் வகையை (Port Class vessels) சேர்ந்த மூன்று கண்காணிப்புக் கப்பல்கள் இலங்கைக் கடலோரக் காவல் படைக்கு வழங்கப்படும்.

அவுஸ்திரேலியத் தூதுவர் பிரைஸ் ஹட்சிசன் இந்த தகவலை வெளியிட்டுள்ளார்.

2014ஆம் ஆண்டு இலங்கை கடற்படைக்கு அவுஸ்திரேலியா வழங்கியிருந்த இரண்டு பே வகை (Bay Class) கண்காணிப்புக் கப்பல்களுக்குத் தேவையான இரண்டு இயந்திரங்களைக் கையளிக்கும் நிகழ்வு காலி துறைமுகத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார். (இ-7)


# சிகிரியாவில் சிங்க உருவம் மீட்டபின் வெளியாகியுள்ள வரலாற்றுத் தகவல்

(கொழும்பு)

சிகிரியாவில் வடக்கு நீர் அகழிப் பகுதியில் மேற்கொண்ட அகழ்வில் சிங்க உருவம் ஒன்று கிடைக்கப் பெற்றுள்ள நிலையில், சிகிரியா தொடர்பான பல முக்கிய தகவல்கள் தற்போது வெளியாகியுள்ளன.

அண்மையில் மேற்கொண்ட அகழ்வில் சிங்க உருவத்திற்கு மேலாக முத்துக்கள், இரும்பு தொல்பொருட்கள் மற்றும் சில மட்பாண்டங்களும் மீட்கப்பட்டுள்ளதாக மத்திய கலாசார நிதியத்தின் பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் பிரசாந்த குணவர்தன தெரிவித்துள்ளார்.

அகழ்வின் போது மீட்கப்பட்ட மட்பாண்டங்கள் வெளிநாட்டு தோற்றங்களை கொண்டுள்ளமையால் சிகிரியாவில் காசியப்பர் ஆட்சியின் போது சர்வதேச தொடர்புகள் காணப்பட்டிருக்கலாம் என்பது பேராசிரியரின் கருத்தாகும். இந்த ஆட்சியின் போது ரோம்



மற்றும் மத்திய ஆசிய நாடுகளுடன் வர்த்தக தொடர்புகள் காணப்பட்டுள்ளமை இதன் ஊடாக புலப்படுகின்றது. (இ-7)

# மகிழ்ச்சியான நாடுகள் பட்டியலில் இலங்கைக்கு 116 ஆவது இடம்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபை வெளியிட்ட அறிக்கையின் பிரகாரம், இலங்கை மக்கள் கடந்த ஆண்டை விட மகிழ்ச்சியாக இருக்கிறார்கள் என குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த அறிக்கையில் 156 நாடுகள் பட்டியலிடப்பட்டன.

இதில் பின்லாந்து முதலிடம் பெற்றது. நோர்வே, டென்மார்க் ஆகிய நாடுகள் அடுத்தடுத்த இடங்களைப் பெற்றிருந்தன.

கடந்த ஆண்டு 120 ஆவது இடத்தில் இருந்த இலங்கை இம்முறை 116ஆவது இடத்திற்கு முன்னேறியது.

இதில் இந்தியாவை விட இலங்கை முன்னேற்றகரமான நிலையில் இருப்பது குறிப்பிடத்தக்கது.

உலக சந்தோச அறிக்கை பல விடயங்களின் அடிப்படையில் தொகுக்கப்படுகிறது.

மொத்த உள்நாட்டு உற்பத்தி, தனிநபர் வருமானம், சமூக உதவிகள், ஆரோக்கியமான ஆயுட்காலம், சமூக சுதந்திரம், நன்கொடை வழங்கும் தன்மை, ஊழல் இல்லாத நிலை முதலான காரணிகள் முக்கியத்துவம் பெறுகின்றன. (இ-10)

# ரஷ்ய ஜனாதிபதித் தேர்தலை கண்காணிக்க நாமல் பயணம்

(மொஸ்கோ)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மூத்த மகனும் நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ அடிக்கடி பேசப்படும் நபராக இருந்து வருகிறார்.



கூட்டு எதிர்க்கட்சியில் அவர் வெளியிடும் கருத்துக்கள் குறித்து நாடு முழுவதும் பேசப்படுவதும் உண்டு.

இவ்வாறான நிலையில், இளம் நாடாளுமன்ற உறுப்பினரான நாமல் ராஜபக்ஷவுக்கு அரிய சந்தர்ப்பம் ஒன்று கிடைத்துள்ளது.

நாமல் ராஜபக்ஷவுக்கு ரஷ்ய ஜனாதிபதித் தேர்தலில் பங்கேற்க சந்தர்ப்பம் கிடைத்துள்ளதாக தெரியவருகிறது.

ரஷ்ய ஜனாதிபதி தேர்தலில் நாமல் ராஜபக்ஷ சுயாதீன கண்காணிப்பாளராக கலந்து கொள்ள வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

ரஷ்ய அரசாங் கத்தின்அழைப்புக்கு அமைய நாளை 18 ஆம் திகதி நடை பெறவுள்ள ஜனாதிபதித் தேர் தல் கண்காணிப்பில் ஈடுபட நாமல் நேற்று முன்தினம் ரஷ்யா நோக்கிப் புறப்பட்டுச் சென்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)


# அந்தியேட்டி அழைப்பு

## அமரர் கணபதிப்பிள்ளை சின்னத்தம்பி

அவர்களின் அந்தியேட்டி கிரியைகள் இன்று 17.03.2018 சனிக்கிழமை காலை 5.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து மதியம் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். சபிண்டீ கரண கிரியைகளிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் தங்களை அன் புடன் அழைக்கின்றோம்.

✸ இவ் அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.





மருமகன், மகள்.
வரணி, இடைக்குறிச்சி.

# பாரதம்

## அரசியல் கதாபாத்திரத்தில் நூறுவீத அரசியல்வாதி நான்

### ரஜினிகாந்த் உறுதிமொழி



(ரிஷிகேஷ்)

அரசியல்வாதியாக 100 சதவீதம் சிறப்பாக செயற்படுவேன் என்றும் நடிகர் ரஜினிகாந்த் தெரிவித்துள்ளார்.

நடிகர் ரஜினிகாந்த் ஆன்மீக பயணமாக இமயமலைக்கு சென்றுள்ளார். ரிஷிகேஷ் சென்ற நடிகர் ரஜினிகாந்த், தயானந்த சரஸ்வதி ஆசிரமத்தில் சிறப்பு பிரார்த்தனை மேற்கொண்டார். செய்தியாளர்களிடம்கருத்து தெரிவிக்கையில்,

1995ஆம்ஆண்டில்இருந்து இமயமலைக்கு வருவேன். இடையில் பலகாரணங்களால் என்னால் இங்கு வரமுடியவில்லை. ஒரு மனிதன் தன்னைத்தானே உணர்ந்து கொள்வதுதான் அவனுடைய பிறவியின் முக்கிய வேலை. அதற்காகத்தான் இங்கு வருகிறேன். நிறைய தியானம் செய்வதற்காகவும், ஆன்மீக புத்தகங்கள் படிப்பதற்காகவும், எந்த கட்டுப்பாடும் இல்லாமல் மக்களை சந்திப்பதற்காகவும் இங்கு வந்திருக்கிறேன்.

இங்கே எனக்கு சினிமா துறையினர், அரசியல்வாதிகள் யாரும் தேவையில்லை. மக்கள், இயற்கை போதும்.

நான் இமயமலையையும், கங்கை நதியையும் மிகவும் நேசிக்கிறேன். நிறைய புனிதர்கள் இங்கு வாழ்கின்றனர்.

அவர்களை சந்தித்து ஆசி பெற்று என்னை புதுப்பித்துக்கொள்ள வந்திருக்கிறேன். நான் இங்கு வந்ததற்கும், அரசியலுக்கும் எந்த தொடர்பும் இல்லை.

நான் இன்னும் முழுநேர அரசியல்வாதியாக மாறவில்லை. இன்றைய இளைய தலைமுறையினர் கடவுள் மீதான நம்பிக்கையை வளர்த்துக்கொள்ள வேண்டும். அது மிக முக் கியமானது. கடவுள் மீது முழு நம்பிக்கை வைப்பதற்கு பெற்றோரும், ஆசிரியர்களும் அவர்களுக்கு கற்றுத்தர வேண்டும். இது என்னுடைய அன்பான வேண்டுகோள்.

மக்கள் பணியில் நிறைய தியாகங்களை செய்ய வேண்டி இருக்கும். அதற்கு நான் தயாராக இருக்கிறேன்.

மக்களுக்காக வாழ்வது மதிப்புமிக்கது. கடவுள் எனக்கு நடிகர் பாத்திரத்தை கொடுத்திருந்தார். அதை சிறப்பாக செய்து முடித்து இருக்கிறேன். தற்போது எனக்கு அரசியல் பாத்திரம் கொடுத்து இருக்கிறார். அதில் 100 சதவீதம் சிறப்பாக செயற்படுவேன்.

அரசியலை முன்னிட்டு இந்த ஆன்மீக பயணமா என்று கேட்கிறீர்கள்.

அப்படியும் இதை வைத்துக் கொள்ளலாம். மக்களுக்காக சேவை செய்ய அரசியலில் கால் பதித்த நான் அரசியல்வாதியாக எனக்கான பணி களை சிறப்பாக ஆற்றுவேன் என நடிகர் ரஜினிகாந் மேலும் தெரிவித்தார். (10)

## ஆந்திராவிற்கான சிறப்பு சலுகை பா.ஜ.க. கூட்டணியிலிருந்து விலகி

(அமராவதி)


பா.ஜ.க தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணிக்கு அளித்து வந்த ஆதரவை வாபஸ் பெறுவதாக தெலுங்கு தேசம் கட்சி அதிகாரபூர்வமாக நேற்று அறிவித்துள்ளது.

ஆந்திராவுக்கு சிறப்பு அந்தஸ்து வழங்கும் விவகாரத்தில் மத்திய அரசுடன் மோதல் ஏற்பட்டதால், பா.ஜ.க தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கு அளித்து வந்த ஆதரவை ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு வாபஸ் பெற்றுள்ளார்.

தெலுங்கு தேசம் கட்சியைச் சேர்ந்த எம்.பி.க்கள் தங்களது மத்திய அமைச்சர் பதவியை கடந்த வாரம் இராஜினாமா செய்திருந்தனர்.

ஆந்திர அமைச்சரவையில் அங்கம் வகித்த பா.ஜ.க எம்.எல்.ஏக்கள் இருவர் தங்களது பதவியை இராஜினாமா செய்தனர்.

கடந்த சில நாட்களாக இவ்விவகாரம் தொடர்பாக தனது கட்சி நிர்வாகிகளுடன் சந்திரபாபு நாயுடு தொடர்



## அமெரிக்க அரசியல் களத்தில் தேசிய பாதுகாப்பு ஆலோசகரை


(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், தனது தேசிய பாதுகாப்பு ஆலோசகர் எச்.ஆர். மெக்மாஸ்டரைப் (H.R.McMaster) பதவியிலிருந்து நீக்குவதற்குத் தீர்மானித்துள்ளார்.

இந்த விடயத்தை அறிந்த உயர்மட்ட அதிகாரிகள் 5 பேரை மேற்கோள்காட்டி, வோஷிங்டன் போஸ்ட் பத்திரிகை நேற்று முன்தினம் வியாழக்கிழமை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பிலேயே, மேற்கண்ட விடயத்தைக் கூறியுள்ளது.

இந்நிலையில், புதிய தேசிய பாதுகாப்பு ஆலோசகராக, வெள்ளை மாளிகையின் தலைமை அதிகாரி ஜோன் கெல்லியை (John Kelly) ஜனாதிபதி ட்ரம்ப் நியமிக்கக்கூடிய சாத்தியம் இருப்பதாக குறித்த பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

தற்போது தனது தேசிய பாதுகாப்பு ஆலோசகராகவுள்ள மெக்மாஸ்டரின் செயற்பாடுகள் தன்னைக் கவரவில்லையெனவும், இதன் காரணமாக, தற்போது வெள்ளை மாளிகையின் தலைமை அதிகாரியாகவுள்ள ஜோன் கெல்லியை தேசிய பாதுகாப்பு ஆலோசகராக நியமிக்கவுள்ளதாகவும் பல உயர்மட்டப் பதவிகளில் மாற்றங்களைச் செய்ய ஜனாதிபதி ட்ரம்ப்



## ஐம்பது கோடி ரூபாய் செலவில் ஜெயலலிதா நினைவு மண்டபம்



(சென்னை)

சென்னை, மெரினாக் கடற்கரையில் 50 கோடி ரூபாய் செலவில் ஜெயலலிதாவிற்கு நினைவு மண்டபம் அமைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழக சட்டப்பேரவையில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற அமர்விலேயே இதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன், சென்னை போயஸ் தோட்டத்தில் உள்ள மறைந்த முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவின் 'வேதா நிலையம்' இல்லத்தை நினைவிடமாக மாற்ற 20 கோடி ரூபாயும் ஒதுக்கப்பட்டுள்ளது.

எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழா கொண்டாட்டங்கள் 30 மாவட்டங்களில் சிறப்பாக நடத்தப்பட்டன.

இதன் நிறைவாக, சென்னையில் மாபெரும் விழா நடத்தப்படுமென தமிழக முதலமைச்சர் சட்டசபையில் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (10)

## நடைபாதை மேம்பாலம் இடிந்து வீழ்ந்ததில் கட்டட இடிபாடுகளில் சிக்கி 6 பேர் உரிழப்பு

(அமெரிக்கா)

புளோரிடா சர்வதேச பல்கலைக்கழகத்தில் நடைபாதை மேம்பாலம் இடிந்து விழுந்து 6 பேர் உயிரிழந்துள்ளனர்.

அமெரிக்காவில் மியாமியில் உள்ள புளோரிடா சர்வதேச பல்கலைக்கழகத்தில் கடந்த வியாழக்கிழமை மதியம் புதிதாக நிறுவப்பட்ட நடைபாதை மேம்பாலம் உடைந்ததில் 6 பேர் உயிரிழந்துள்ளனர். பலர் படுகாயம் அடைந்தனர்.

வீதியின் குறுக்கே பொதுமக்கள் நடந்து செல்வதற்கான பாலம் அமைக்கும் பணிகள் கடந்த வாரம் முதல் நடைபெற்று வந்தது. இந்நிலையில், நேற்று முன்தினம் அந்த 950 தொன் எடையுள்ள மேம்பாலம் திடீரென இடிந்து விழுந்ததில் 6 பேர் பலியாகியதுடன் பலர் படுகாயமடைந்துள்ளனர். (10)



## இராமர் ப... சேது சமுத்...

### மத்திய ...

(சென்னை)

சேது சமுத்திர தி... டத்திற்காக இராமர்... பாலத்தை அகற்ற மு... யாது என உச்ச நீ... மன்றத்தில் மத்தி... அரசு தெரிவித்துள்... ளது.

இராமர் பாலத்தை... இடிக்காமல் சேது சமு... த்திர திட்டத்தை நிறை... வேற்றக் கோரி... பா.ஜ.க. மூத்த தலை... வர் சுப்பிரமணியன்... சுவாமி உச்ச நீதிம... ன்றத்தில் வழக்கு... தொடர்ந்தார். இராமர்... பாலத்தை இடிப்பதால்... மத நம்பிக்கை பாதி...

## அரசாங்க வேலையில் பணியாற்ற ஐந்தாண்டு கட்டாய இராணுவ சேவை

(டில்லி)

இந்தியாவில் அரசு வேலையில் சேர விரும்புபவர்கள் ஐந்தாண்டுகள் இராணுவத்தில் கட்டாயம் சேவையாற்றி இருக்க வேண்டும் என பாராளுமன்ற நிலைக்குழு பரிந்துரை செய்துள்ளது. மத்திய, மாநில அரசு வேலையில் சேர விரும்பும் நபர் குறைந்தது ஐந்து ஆண்டுகள் கட்டாயமாக இராணுவத்தில் சேவையாற்றி இருக்க வேண்டும் என்ற பரிந்துரையை தயார் செய்ய பாராளுமன்ற நிலைக்குழு மத்திய பணியாளர் பயிற்சித்துறையை

கேட்... திட... கேட்... ளாத... ளர்... நிலை... வும்... பற்ற... பும்...

# வெளிநாடு

## ...கையில் இழுபறிநிலை ...லகியது தெலுங்கு தேசம்



ஆலோசனை நடத்தி வந்தார். இந்நிலையில், பா.ஜ.க தலை மையிலான தேசிய ஜனநாயக கூட்ட ணியில் இருந்து விலகுவதாகவும், மத்திய அரசுக்கு அளித்து வந்த ஆத ரவை திரும்பப் பெற்றுக் கொள்வதாகவும் அந்த கட்சி அதிகாரபூர்வமாக தெரிவித்துள்ளது.

ஆந்திராவின் இந்த அதிரடி கருத்தால் இந்தியாவின் அரசியல் வட்டாரங்களில் பெரும் சர்ச்சை ஏற்பட்டுள்ளது. (10)

## ...தில் தொடரும் அதிரடி ...கரை மாற்ற தீர்மானம்



கவனஞ்செலுத்தி வருவதாகவும், அப்பத்திரிகை தெரிவித்துள்ளது.

அமெரிக்க ராஜாங்கச் செயலாளர் ரெக்ஸ் ரில்லர்ஸனை கடந்த செவ் வாய்க்கிழமை பதவியிலிருந்து நீக்கிய ஜனாதிபதி ட்ரம்ப், புதிய ராஜா ங்கச் செயலாளராக மத்திய புலனாய்வு முகவரகத்தின் பணிப்பாளராக இருந்த மைக் பொம்பேயை (Mike Pompeo) நியமித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.


அமெரிக்காவில் தொடரும் மாற்றங்கள் குறித்து சர்வதேச நாடுகள் அதிருப்தியடைந்துள்ளது. (10)

## ...ாமர் பாலத்திற்கு சேதம் இல்லாமல் ...து சமுத்திரத்திட்டம் நிறைவேற்றப்படும்

### ...த்திய அரசு உறுதி

...ன்னை)
...து சமுத்திர திட்
...காக இராமர்
...தை அகற்ற முடி
...ன உச்ச நீதி
...த்தில் மத்திய
...தெரிவித்துள்

...மர் பாலத்தை
...மல் சேது சமு
...ட்டத்தை நிறை
...றக் கோரி
... மூத்த தலை
...பிரமணியன்
... உச்ச நீதிம
...தில் வழக்கு
...ந்தார். இராமர்
...தை இடிப்பதால்
...விக்கை பாதிக்



கப்படும், சுற்றுச்சூழல் பாதிப்பும் ஏற்படும் என்பதால் இராமர்பாலத்தை இடிக்காமல் மாற்றுப் பாதையில் சேது சமுத்திர திட்டத்தை செயற்படுத்த வேண்டும் என அவர் தனது மனுவில் வலியுறுத்தி இருந்தார்.

இராமர் பாலத்தை தேசிய நினைவுச் சின்னமாக அறிவிக்க வேண்டும் என்றும் கோரியிருந்தார்.

இவ்வழக்கை விசாரித்த உச்ச நீதிமன்றம், இது தொடர்பாக மத்திய அரசு பிரமாணப் பத்திரம் தாக்கல் செய்யும்படி உத்தரவிட்டிருந்தது.

இவ் வழக்கில் உச்ச நீதிமன்றத்தில் மத்திய அரசு நேற்று பிரமாணப்பத்திரம் தாக்கல் செய்துள்ளது. அதில், சேது சமுத்திர திட்டத்திற்காக இராமர் பாலத்தை அகற்ற முடியாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இராமர் பாலத்துக்கு சேதம் ஏற்படுத்தாமல் சேது சமுத்திர திட்டம் நிறைவேற்றப்படும் என்றும் மத்திய அரசு உறுதியளித்துள்ளது. (10)

...
...யார்
... மத்
...யை

கேட்டுக்கொண்டுள்ளது.

முதலில் பாதுகாப்பு அமைச்சகத்திடம் இதற்கான பரிந்துரை அளிக்க கேட்டதாகவும், அதில் திருப்தி இல்லாததால் தற்போது மத்திய பணியாளர் பயிற்சித்துறையிடம் பாராளுமன்ற நிலைக்குழு கேட்டுக்கொண்டுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இராணுவத்தில்உள்ள பணியிடங்கள் பற்றாக்குறையை இந்த திட்டம் நிரப்பும் என பாராளுமன்ற நிலைக்குழு கருதியுள்ளது.

மேலும்இராணுவப்பயிற்சி அளிக்கப்படுவதால் அதிகாரிகள் நேர்மையுடன் அரசுப் பணிகளைமேற்கொள்வார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய அரசின் குறித்த திட்டத்திற்கு இந்தியாவின் பல்வேறு கட்சிகள் கண்டனம் வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (10)

## சதாம் உசேனின் அரண்மனை அமெரிக்க பல்கலைக்கழகமாகிறது



(பக்தாத்)

ஈராக் நாட்டில் சதாம் உசேன் வாழ்ந்த அரண்மனையில் அமெரிக்க பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்படவுள்ளதாக ஈராக் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஈராக் நாட்டில் 1979ஆம் ஆண்டு முதல் 2003ஆம் ஆண்டு வரை ஜனாதிபதியாக இருந்தவர் சதாம் உசேன்.

2003 ஆம் ஆண்டு போருக்கு பின்னர் அவரது ஆட்சி கவிழ்க்கப்பட்டது. அதே ஆண்டின் டிசெம்பர் 13ஆம் திகதி திக்ரித் நகருக்கு அருகே பாதாள அறையில் பதுங்கி இருந்த சதாம் உசேன் கைது செய்யப்பட்டார்.

அவர் மீது மனித உரிமை மீறல் வழக்குகள் தொடரப்பட்டன.

அதன் முடிவில், அவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது.

2006ஆம் ஆண்டு, டிசெம்பர் 30ஆம் திகதி அவர் தூக்கில் போடப் பட்டார்.

பக்தாத் நகரில் அவர் வாழ்ந்த அரண்மனைகளில் முக்கியமானது, ரத்வானியா அரண்மனை. இதில்தான் சதாம் உசேன் பெரும்பாலும் வாழ்ந்தார்.

இந்த அரண்மனையில் அமெரிக்க பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இது குறித்த தகவல் களை ஈராக் அரசுக்கு சொந்தமான 'அல்சபா' பத்திரிகை வெளியிட்டுள்ளது.



இது தொடர்பாக அரசு சொத்துக்கள் துறை யின் தலைவரான அகமது அரல்ருபாயி கருத்துத் தெரிவிக்கையில்,

பக்தாத்தில் உள்ள ரத்வானியா அரண் மனையை அமெரிக்க பல்கலைக்கழகம் அமைப்பதற்கு, அமைச்சரவையால் உருவாக்கப்பட்ட கமிஷன் முடிவு செய்து உள்ளது எனத் தெரிவித்தார்.

பக்தாத்தில் அமெரிக்க பல்கலைக்கழகம் நிறுவுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என ஈராக்கிற்கான அமெரிக்க தூதரிடம், அந்த நாட்டின் கல்வி அமைச்சர் அப்துல் ராசிக் ஈசா உறுதி அளித்தது குறிப்பிடத்தக்கது. (10)

## ஜனாதிபதித் தேர்தலில் தவறான பரப்புரை 19 ரஷ்யர்களுக்கு அமெரிக்காவில் தடை

(வோஷிங்டன்)

அமெரிக்காவில் கடந்த 2016ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் தலையீடு செய்தமை மற்றும் இணையவழித் தாக்குதல்களில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் பேரில் ரஷ்ய அதிகாரிகள் 19 பேருக்கு, அமெரிக்கா தடை விதித்துள்ளது.

இந்தத் தடை மூலம் மேற்படி 19 பேருக்கும் அமெரிக்காவிலுள்ள சொத்துகள் முடக்கப்பட்டு அமெரிக்கர்கள் தொழில் ரீதியான உறவை பேணவும் தடை செய்யப்பட்டுள்ளதாக, சர்வதேச ஊடகங்கள் நேற்று முன் தினம் வியாழக்கிழமை தெரிவித்துள்ளன.



19 அதிகாரிகளில், நீதித் துறைத் திணைக்களத்தின் விசேட அதிகாரி ரொபர்ட் முல்லரினால் கடந்த மாதம் குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்ட 13 பேரும் அடங்குகின்றனர்.

ரஷ்ய அரசாங்கத்தின் புலனாய்வுப்பிரிவு உட்பட 5 ரஷ்ய அமைப்புகளைச் சேர்ந்தவர்களுக்கு எதிராகவும் இந்தத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

தவறான தகவல்களைப் பரப்பி ஜனாதிபதித் தேர்தலில் தாக்கம் செலுத்த முயன்ற சென். பீற்றர்ஸ்பேர்க் நகரிலிருந்து செயற்படும் இணைய ஆராய்ச்சி நிறுவனமும் இந்தத் தடைப்பட்டியலில் உள்ளது.

அபாயகரமான இணைய வழித் தாக்குதல்களை நடத்தியதாகவும், முக்கியமான உட்கட்டமைப்புகளை தாக்க இலக்கு வைத்ததாகவும், இவர்கள் மீது திறைசேரிச் செயலாளர் Steven Mnuchin குற்றஞ்சாட்டியுள்ளார்.

இப்புதிய தடையானது, ரஷ்யாவுக்கு எதிராக அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் நிர்வாகத்தினால் எடுக்கப்பட்ட பலமான நடவடிக்கையாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (10)

## விமான ஓடு தளத்தில் தங்க மழை

(யாகூட்ஸ்கி)

சைபீரியா யாகூட்ஸ்கி விமான நிலையத்தில் 10 தொன் அளவிலான தங்கம், வைரம் மற்றும் பிளாட்டினம் நகைகள் நிரப்பப்பட்டு நிம்பஸ் ஏர்லைன்ஸின் ஏ -12 ரக சரக்கு விமானம் புறப்பட்டது.


விமானம் புறப்பட்டு குறிப்பிட்ட தூரம் பறந்து கொண்டிருந்த போது எடை தாங்க முடியாமல் பின்புற கதவு உடைந்தது. கதவு உடைந்ததால் விமானத்தில் இருந்த தங்கக் கட்டிகள் ஓடு தளத்தில் விழுந்து சிதறியது.



விமானம் 26 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள மாகன் என்ற விமான நிலை யத்தில் தரையிறக் கப்பட்டது. விமானம் தரையிறக்கப்பட்ட உடனே அப்பகுதியை பொலிஸார் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். பின்னர் ஓடுதளத்தில் இருந்த தங்கக்கட்டிகளை கைப்பற்றினர். அனைத்து தங்கக்கட்டிகளும் பத்திரமாக மீட்கப்பட்டதாக அதிகாரிகள் தரப்பில் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. (10)

# கூட்டணிக்குள் கருத்து மோதல்?







(கொழும்பு)

கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் கூட்டணியாகப் போட்டியிட்ட கட்சி களுக்கு இடையில் கருத்து மோதல்கள் ஏற்பட்டுள்ளதுடன், அக் கூட்டணிக்குள் முரண்பாடுகளும் வலுப் பெற்றுள்ளனவென, உள்வீட்டுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தொகுதிகளில் பெற்ற வாக்குகளின் அடிப்படையில், கூட்டணிக்குக் கிடைத்த போனஸ் ஆசனங்களை, கூட்டணியில் அங்கம் வகித்த கட்சிகளுக்கிடையே பகிர்ந்துகொள்வதில் ஏற்பட்ட பிரச்சினையே, அந்தக் கருத்து மோதல்களுக்குக் காரணமென அறியமுடிகின்றது.

கருத்து மோதல்களை அடுத்து, கொழும்பில் கடந்த சில நாட்களாக உயர்மட்ட ரீதியில் பல சுற்றுப் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றதாகவும் அந்தப் பேச்சுவார்த்தைகளில் எவ்விதமான இணக்கப்பாடும் எட்டப்படவில்லையென்றும் அறிய முடிகின்றது.

மலையகத்தையும் கொழும்பையும் மையப் படுத்தி, கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில்பெரும்பான்மையின பிரதான கட்சிகளுடன் இணைந்து, சிறுபான்மையினக் கட்சிகள் கூட்டணியாகவும் தனியாகவும் போட் டியிட்டன.

அதில், அமைச்சர் மனோ கணேசன் தலைமையிலான ஜனநாயக மக்கள் முன்னணி, அமைச்சர் பி. திகாம்பரம் தலைமையிலான தொழிலாளர் தேசிய சங்கம், கல்வி இராஜாங்க அமைச்சர் வே. இராதாகிருஷ்ணன் தலைமையிலான மலையக மக்கள் முன்னணி ஆகியன இணைந்து தமிழ் முற்போக்குக் கூட்டணியில் களத்தில் குதித்திருந்தன.

அந்தக் கூட்டணி, சில இடங்களில் தனித்தும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணியுடன் சில மாவட்டங்களில் கூட்டணியமைத்தும் போட்டியிட்டது.

அதேபோல, நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான ஆறுமுகன்தொண்டமான் தலைமையிலான இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், ஜனாதி பதி மைத் திரிபால சிறிசேன தலைமை யிலான ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய மக்கள் சுதந்தி ரக் கூட்டணி ஆகியனவற்றுடன் இணைந்து கூட்டணியாகவும், சில இடங்களில் சேவல் சின்னத்தில் தனித்தும் போட்டியிட் டன.

இந்நிலையில், உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் நிறைவடைந்ததன் பின்னர், தொகுதி ரீதியில் பெற்றுக்கொண்ட வாக்குகளின் பிரகாரம், போனஸ் ஆசனங்கள் கிடைத்துள்ளன.

அதனைக் கூட்டணி யில் அங்கம் வகித்த கட்சிக்கு அல்லது கட்சிகளுக்குப் பகிர்ந்தளிப்பதிலேயே பிரச்சினைகள் எழுந்துள்ளனவென அறியமுடிகின்றது. (இ-7

# இலங்கை அரசாங்கத்தின் கோரிக்கையை ஏற்றுக் கொள்ள மறுத்தது பேஸ்புக் நிறுவனம்

(கொழும்பு)

இலங்கை அரசாங்கம் கோரியபடி, இனவெறுப்பைத் தூண்டும் கருத்துக்கள் பேஸ்புக் பதிவுகளில் இடம் பெறுவதை தடுப்பது தொடர்பான எந்த வாக்குறுதிகளையும் வழங்க பேஸ்புக் நிறுவனத்தின் அதிகாரிகள் மறுத்து விட்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

கண்டியில் அண்மையில் இடம்பெற்ற வன்முறைகளை அடுத்து, பேஸ்புக் உள்ளிட்ட சமூக வலைத் தளங்களின் மீது இலங்கை அரசாங்கம் தடை விதித்திருந்தது.

பேஸ்புக் உள்ளிட்ட சமூக வலைத்தளங்களில் இன வெறுப்பைத் தூண்டும் கருத்துக்கள் இடம் பெறுவதை தடுக்குமாறு பேஸ்புக் நிறுவனத்திடம் இலங்கை அரசாங்கம் கோரிக்கை விடுத்தது.

இந்தியாவில் இருந்து வந்திருந்த பேஸ்புக் நிறுவனத்தின் அதிகாரிகள், ஜனாதிபதி செயலகத்தில் நேற்றுமுன்தினம் ஜனாதிபதியின் செயலர் ஒஸ்ரின் பெர்னாண்டோவுடன் பேச்சுவார்த்தை நடத்தியிருந்தனர்.

இந்தப் பேச்சுவார்த்தையை அடுத்து, நேற்று முன்தினம் பிற்பகல் தொடக்கம் பேஸ்புக்குக்கு விதிக்கப்பட்டிருந்த தடை நீக்கப் பட்டது.

இது தொடர்பாக மைத்திரி தனது டுவிட்டர் தளத்தில் வெளியிட்டிருந்த பதிவு ஒன்றில், வெறுப்புணர்வையோ வன்முறைகளையோ தூண்டுவதற்கு தளமாகப் பயன்படுத்தப்படாது என்ற வாக்குறுதியின் அடிப்படையில் இந்த தடை நீக்கப்படுவதாக குறிப்பிட்டிருந்தார்.

எனினும், இதுதொடர்பான எந்த உத்தரவாதத்தையும் வழங்க பேஸ்புக் நிறுவன அதிகாரிகள் முன்வரவில்லை என்று, நேற்று முன்தினம் பேச்சுவார்த்தையில் பங்கேற்ற தரப்புகளுடன் தொடர்புடைய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தமது நிறுவனம் ஏற்கனவே வெறுப்புணர்வைத் தூண்டுவதற்கு எதிரான நிலைப்பாட்டைக் கொண்டிருப்பதாகவும், அதுபற்றி தெளிவுபடுத்தியிருப்பதாகவும், பேஸ்புக் நிறுவன அதிகாரிகள் தெரிவித்தது குறிப்பிடத்தக்கது. (7-10)

# சட்டத்தரணி அஜித் பிரசன்னவுக்கு எதிராக பொதுபல சேனா நீதியரசரிடம் முறைப்பாடு

(கொழும்பு)

பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயல்ாளர் கலகொட அத்தேஞானசார தேரரை அவமதிக்கும் வகையிலும் சட்டத்தரணி தொழிலுக்கு பொருந்தாத வகையிலும் செயற்பட்டதாக தெரிவித்து சட்டத்தரணி அஜித் பிரசன்ன தொடர்பில் பக்கச்சார்பற்றதும், மிகப் பொருத்தமானதுமான விசாரணையொன்றை நடத்துமாறு உயர் நீதிமன்ற நீதியரசருக்கும் சட்டத்தரணிகள் சங்கத்துக்கும் எழுத்து மூலம் முறைப்பாடொன்றை நேற்று முன்தினம் பொதுபல சேனா முன்வைத்துள்ளது.

பொதுபல சேனாவின் சார்பில் பஸ்ஸரமுல்லை பஞ்ஞாசோதி தேரர் இந்த முறைப்பாட்டை பிரதம நீதியரசருக்கு அனுப்பி வைத்துள்ளார்.

நாட்டில் அவசரகால நிலைமை நடைமுறையிலுள்ள நிலையில், குறித்த சட்டத்தரணி கடந்த 5 ஆம் திகதியும் 8 ஆம் திகதியும் இணையத் தளத்துக்கு வீடியோ காட்சியொன்றை வெளியிடுவதன் ஊடாக பொதுபல சேனாவின் செயலாளருக்கு அபகீர்த்தியை ஏற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளார்.

சட்டத்தரணி வெளியிட்டுள்ள வீடியோ காட்சியில் மனித உரிமைகளை மீறும் வகையில் அச்சுறுத்துதல், நீதிமன்றத்தின் தீர்ப்பு தவறு என்ற கருத்தை சமூகமயப்படுத்த முயற்சித்தல் போன்ற குற்றச்சாட்டுக்களை தேரரின் மீது சுமத்த முயற்சித்துள்ளார்.

எந்தவொரு நபரும் நீதிமன்றத்தினால் குற்றம் சாட்டப்படும் வரையில் அவர் சட்டத்தில் நிரபராதியாகவே கருதப்படுகின்றார். இந்த நடைமுறையைப் பின்பற்றுதல் சட்டத்தரணியின் தார்மீகப் பொறுப்பாகும்.

ஞானசார தேரரோ கடந்த 2014 ஆம் ஆண்டு இடம் பெற்ற எந்தவொரு இனவாத பிரச்சினைகளுக்காகவும் நீதிமன்றத்தினால் குற்றவாளியாக கருதப்படவில்லை. இது இவ்வாறிருக்கையில், குறித்த சட்டத்தரணி தேரர் மீது பொய்யான குற்றச்சாட்டை முன் வைத்துள்ளதாகவும் அந்த முறைப்பாட்டில் பொதுபல சேனா சுட்டிக்காட்டியுள்ளது. (இ)

## இன்று ஒரு தகவல்

# நெருக்கமில்லாதபோது செய்யக்கூடாத நான்கு

நெருக்கம் இல்லாதபோது சிற்சில காரியங்களைச் செய்யக்கூடாது. முதலாவது கோபித்துக் கொள்வது. நெருக்கமில்லாதவர்களைக் கோபித்துக் கொண்டால் பதிலுக்கு அவர்களும் கோபப்படுவார்கள். வாக்குவாதம் வளரும். அது நிச்சயம் மனச் சங்கடத்தில்தான் முடியும். அது மட்டுமல்ல நாம் எதிர்பார்த்த பலனும் கிடைக்காது.

நெருக்கமில்லாதவர்களுக்கு ரொம்பவும் உபதேசம் செய்யக் கூடாது. அத்தகைய உபதேசம் காதில் ஏறாது. அதுமட்டுமல்ல இந்தாள் என்ன சொல்வது? நாம் என்ன அதைக் கேட்டுக் கொள்வது? என்று நேர்மாறாக நடந்து கொள்வார்கள்.

நெருக்கமில்லாத போது கேலி செய்யக் கூடாது. இது தவறாக புரிந்து கொள்ளப் படும். நாம் நகைச் சுவைக்காக ஏதும் சொல்லி வைத்தால் கூட அதைத் தவறாக எடுத்துக் கொண்டு விடுவார்கள். நம் நோக்கம் அவர்களைப் புண்படுத்துவது அல்ல. ஆனால் நம் நோக்கத்திற்குக் களங்கம் கற்பிக்கிற மாதிரிப் பேசி நம்மை அவர்கள் அதிர்ச்சியடையச் செய்வார்கள். ஐயையோ நான் சும்மா ஒரு பேச்சுக்குத் தானே சொன்னேன்! அதை ஏன் இவ்வளவு சீரியஸா எடுத்துக்கிட்டீங்க? என்று நாம் ஏகமாக சமாதானம் செய்ய வேண்டி வரும். ஒரு குத் துக் குத்திவிட்டு ஒரு வாரம் ஒத்தடம் கொடு க்கிற மாதிரி ஏன் இப்படி நடந்து கொள்ள வேண்டும்? நெருக்கமில்லாத போது உதவி ஏதும் கேட்கக்கூடாது. ஒரே நாள் பழகிவிட்டு ஆயிரம் ரூபாய் கடன் கேட்கிறவர்களைப் பற்றி நீங்கள் என்ன முடிவுக்கு வருவீர்கள்?

பக்கத்து வீட்டுக்கு குடி வந்து பத்து நாள் கூட ஆகவில்லை. அதற்குள் உங்கள் வீடியோ டெக்கைத் தருகிறீர்களா? புதுசா ரிலீசான பட கசட் வந்திருக்கிறது. பசங்க பார்க்கணுங்கிறாங்க என்றார் பக்கத்து வீட்டுக்காரர். தர்ம சங்கடத்தில் ஆழ்ந்து சுதாகரித்த வி.சி.ஆர்.ஐக் கொடுத்தவருக்கு அதிர்ச்சி. அதில் உள்ள ஹெட் கெட்டு விட்டது. ஹெட் மட்டுமா கெட்டது? நல்லுறவும் சேர்ந்தே கெட்டுப் போனது.

நெருக்கம் மட்டும் இருந்திருந்தால் கெடுத்தவர் அதுக்கு நான் பணம் தந்தாலே ஆச்சு என்பார். அவர் நீங்க கொண்டு போன நேரம் கெட்டுப் போச்சே தவிர அது மோசமாத்தான் இருந்தது என்று இவர் சமாதானம் சொல்வார்.

நெருக்கம் இல்லாததால் இரண்டு பேருமே மேற்கூறிய அந்த இரு வாக்கியங்களையும் சொல்லவே இல்லை. அறிமுகமாகிப் பழகி சிறுசிறு சம்பவங்களால் உள்ளத்தில் இடம் பிடித்து அன்பான வார்த்தைகளால் மரியாதைப் பரிமாற்றங்களால் அசைக்க முடியாத இடத்தைப் பெற்று நெருங்கவும் செய்யவிட்டால் மேற்கூறிய நான்கு செயல்களை மட்டுமல்ல தலைமேல் கூட ஏறி உட்கார்ந்து கொள்ளலாம் . எவரும் ஒன்றும் சொல்லமாட்டார்கள்.

**லேனா தமிழ்வாணன்**

# அறிவித்தல்

**கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய வருடாந்த பங்குனி உத்தர பொங்கல் விழாவிற்கான வாகன தரிப்பிட நிலையங்களை வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல்-2018**

கரைச்சி நாகதம்பிரான் ஆலய பங்குனி உத்தர பொங்கல் விழாவிற்கு பின்வரும் வாகன தரிப்பிட நிலையங்களுக்கான கேள்விகள் கீழ் குறிப்பிட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக கோரப்படுகின்றன.

| விண்ணப்பப்படிவம் விநியோகிக்கப்படும் திகதி, நேரம் | கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதி, நேரம் | கேள்வி திறக்கப்படும் திகதி, நேரம் |
|---|---|---|
| திகதி:- 2018.03.14ம் திகதி முதல் 2018.03.21ம் திகதி வரை<br>நேரம்:- மு.ப 8.30 மணி முதல் பி.ப 3.00 மணி வரை<br>இடம்:- கரைச்சி பிரதேச சபை உப அலுவலகம் முரசு மோட்டை | திகதி:- 2018.03.22ம் திகதி வியாழக்கிழமை<br>நேரம்:- மு.ப 10.00 மணி | திகதி:- 2018.03.23ம் திகதி வெள்ளிக்கிழமை<br>நேரம்:- மு.ப 10.00மணி<br>இடம்:- கரைச்சி பிரதேச சபை உப அலுவலகம் முரசுமோட்டை |

கேள்விப்பத்திரங்களை பொறுப்பதிகாரி, கரைச்சி பிரதேச சபை, உப அலுவலகம், முரசுமோட்டை என முகவரியிட்டு தபால் உறையின் இடப்பக்க மேல் மூலையில் கேள்விப்பத்திரம் என தெளிவாக குறிப்பிட்டு 2018.03.22ம் திகதி மு.ப 10.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத்தபால் மூலம் அனுப்பப்பட வேண்டும்.

கேள்விகள் யாவும் 2018.03.23ம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப 10.00 மணிக்கு கரைச்சி பிரதேச சபை உப அலுவலகம் முரசுமோட்டையில் திறக்கப்படும். கேள்விச்சபையின் முடிவே இறுதி முடிவாகும்.

**நியந்தனைகள்**

1.உரிய காலத்தில் கிடைக்கப்பெறாத கேள்விகள் இரத்துச்செய்யப்படும்.

2.கேள்வித்தொகை முழுவதையும் 2018.03.26ம் திகதி மு.ப 2.00மணிக்கு முன்னர் செலுத்தி பற்றுச்சீட்டினை பெற்றுக்கொள்ள வேண்டும். செலுத்தப்பட்ட குத்தகைப்பணம் எக்காரணம் கொண்டும் மீளளிக்கப்பட மாட்டாது.

3.கேள்வியை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஏற்பதற்கோ அல்லது நிராகரிப்பதற்கோ கேள்வி சபைக்கு அதிகாரமுண்டு.

4.கேள்வி பத்திரம் பெற வரும் போது தம் ஆளடையாளத்தை உறுதிப்படுத்தும் ஏற்றுக்கொள்ளத்தக்க ஆவணப்பிரதியை கிராம சேவையாளர் மூலம் "உண்மைப்பிரதி" என உறுதிப்படுத்தி சபைக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

5.ஆகக்கூடிய கேள்வி கோரும் கேள்வி தாரருக்கு 2018.03.30ம் திகதி உற்சவகால வாகன தரிப்பிடம் வழங்கப்படும்.

6.கடந்த கால கேள்விகள் மூலம் சபைக்கு நிலுவைகளை செலுத்த தவறியவர்களும், கறுப்புப் பட்டியலில் உள்ளவர்களும் குத்தகை கேள்விகளில் பங்குபெற தகுதியற்றவர்கள்.

| இல | வாகன வகை | கேள்வி வைப்பு பணம்(மீளளிக்கக் கூடியது) | கேள்வி படிவக்கட்டணம் NBT நீங்கலாக (மீளளிக்கப்பட முடியாதது) | வாகனம் ஒன்றிற்கான கட்டணம் | இழிவு கேள்வி தொகை (NBT நீங்கலாக) |
|---|---|---|---|---|---|
| 01 | துவிச்சக்கர வண்டி, மோட்டார் சைக்கிள் (பாதுகாப்பு நிலையம்) | 10000.00 | 2000.00 | துவிச்சக்கர வண்டி 01க்கு-20.00<br>மோட்டார் சைக்கிள் 01க்கு-50.00<br>HELMAT 01க்கு- 30.00 | 90,000.00 |
| 02 | முச்சக்கரவண்டி (பாதுகாப்பு நிலையம்) | 5000.00 | 2000.00 | முச்சக்கர வண்டி 01க்கு-100.00 | 10,000.00 |
| 03 | கயேஸ், கார் (பாதுகாப்பு நிலையம்) | 5000.00 | 2000.00 | கயேஸ், கார் 01க்கு- 100.00 | 10,000.00 |
| 04 | ஏனைய வாகனங்கள் (தரிப்பிட நிலையம்) | 5000.00 | 2000.00 | தனியார் பேருந்து 01க்கு-100.00<br>-ஏனைய வாகனங்கள் 01க்கு-100.00 | 20,000.00 |

**கனேசன் கம்ஸநாதன்,**
**செயலாளர்,**
**கரைச்சி பிரதேச சபை,**
**கிளிநொச்சி.**

(சி-1901)


# இரத்ததான நிகழ்வு இன்று

(சுன்னாகம்)

சுன்னாகம் றோட்டறக்ட் கழகம் நடத்தும் இரத்ததான நிகழ்வு இன்று சனிக்கிழமை முற்பகல் 8.30 முதல் பிற்பகல் 2 மணிவரை சுன்னாகம் பெஷன் பார்க் மண்டபத்தில் இடம்பெ றும். இரத்ததானம் வழங்க விரும் புவர்கள் இதில் பங்கேற்க முடி யும். (இ)

# திகனயில் சிரமதானம்





(கண்டி)

அண்மையில் ஏற்பட்ட இன வாத தாக்குதலில் பாதிப்புக்குள் ளான திகன பிரதேசத்தில் சிரம தானப் பணிகள் ஆரம்பமாகி யுள்ளன.

கண்டி மாவட்ட செயல கம் மற்றும் இலங்கையின் முப் படையினர் இணைந்து ஏற்பாடு செய்துள்ள இந்த சிரமதானப் பணிகள் பல கொல்ல பௌத்த மத்திய நிலையத்தின் தலைவர் ஹல் பொச தம்மஜோதி தேரர் தலைமையில் நடைபெற்று வரு கிறது.

இந்த சிரமதானப் பணிகளில் பிரதேச பௌத்த பிக்குமார், பிர தேச மதத் தலைவர்கள், முப் படைவீரர்கள், குண்டசாலை மாவ ட்ட செயலக அதிகாரிகள் உள்ளிட்ட பொதுமக்கள் பலர் கலந்து கொண் டுள்ளதாக உதவி பிரதேச செயலாளர் கௌஷல் யாதர்மபால தெரிவித் தார்.

நேற்று முற்பகல் 10 மணி யள வில் பாதிக்கப்பட்ட திகன மஸ்ஜி துன் நூர் பள்ளிவாசலில் ஆரம்ப மான சிரமதானப் பணிகள் மாலை 5 மணிவரைக்கும் நடைபெற்றது. இந்த சிரமதானப் பணிகளில் பொது மக்களும் இணைந்துகொள்ள முடி யும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சிரமதானப் பணிகளில், 225 இராணுவத்தினர் இணைந்து கொண்டுள்ளதாக மத்திய மாகா ணத்திற்கு பொறுப்பான லீடர் ஜெனரல் நிஸ்ஸங்க ரணவல தெரி வித்தார். (இ-7)

# சிறுபான்மையினர் விடயத்தில் அரசு மீண்டும் தவறிழைப்பு

## கோடீஸ்வரன் எம்.பி.குற்றச்சாட்டு

(கல்முனை)

சிறுபான்மை இனத்தவர் களை பாதுகாப்பதில் நாட்டின் அரசாங்கம் மீண்டும் தவறி ழைத்திருக்கின்றது என அம் பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ் வரன் குற்றம்சாட்டினார்.

கல்முனை தமிழ் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் கல் முனையில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற கலாசார நிகழ்வில் கலந்து கொண்டு உரை யாற்றுகையி லேயே அவர் இவ்வாறு தெரி வித்தார்.

"இலங்கையில் இடம் பெற்ற இனப்படுகொலை என்பது வெறு மனே தனிமனித இன அழிப்பு மாத்திரமல்ல. கல்வி, கலை, கலாசாரம், பொருளாதாரம் மற்றும் சமூக ரீதியான விடயங் களை மழு ங்கடிப்பது ஆகியன வும் ஒரு இனரீதியான அழிப்பா கத்தான் நான் கருதுகின்றேன்.

கடந்த காலங்களில் பேரின வாதிகளினால் அரங்கேற்றப் பட்டுவந்த இன அழிப்பின் தொட ர்ச்சியே, அண்மையில் கண்டி யில் இடம்பெற்ற சம்பவங்கள்.

இந்நாட்டை பொறுத்த வரையில் தற்போது சட்டம், ஒழு ங்கு என்பன கேள்விக் குறியாகி போய்க்கொண்டிருக்கும் நிலை யினை காணமுடிகின்றது. இந்நாட் டின் அரசாங்கம் சிறுபான்மை யினத்தவர்களை பாதுகாப்ப தில் மீண்டும் தவறிழைத் திருக்கின் றது. கடந்த காலங்களில் எவ்வாறு தமிழர்களுக்கு எதிராக அநீதி இழைக் கப்பட்டதோ அதே போன்ற தொரு நிலைதான் இன்று முஸ் லிம்களுக்கு எதிராக இடம்பெற்றி ருக்கின்றது.

இந்த விடயத்தில் முஸ் லிம்கள் ஒன்றை புரிந்து கொள்ளவேண்டும் சிறுபா ன்மை இனத்தவர்களாகிய தமிழர்களுக்கும், முஸ்லிம் களுக் குமான ஒரு தனியலகு வடகிழக்கு இணைந்த ஒரு சமஷ்டி முறையி லான ஆட்சி முறையே. இதனை கருத் தில் கொண்டு முஸ்லிம் மக்கள் செயற்படவேண்டும்" எனத் தெரிவித்தார். (இ-7)

# ஈழத்துத் தமிழ்க் கவிதைக் களஞ்சியம் யாழில் வெளியீடு



வடமாகாண கல்வி அமைச்சின் கீழ் இயங்கும் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்ட ஈழத்துத் தமிழ்க் கவிதைக் களஞ்சியம் (புதுக்கிய பதிப்பு) நூல் வெளியீட்டு விழா நேற்று முன்தினம் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றது. வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்ட இந்த நூலானது, ஈழத்தில் வாழ்ந்த புலவர்களால் இயற்றப்பட்ட மரபுக் கவிதைகளை உள்ளடக்கிய தொகுப்பு நூலாக வெளியிடப்பட்டுள்ளது. இது அரசியல் காலப்பகுதிகளை அடிப்படையாக கொண்டு 6 காலங்களாக வகுக்கப்பட்டுள்ளது. இந்த நூலைப் புதுப்பித்து வழங்குவதற்கு தொகுப்பாசிரியர்களாக பேராசிரியர் அ.சண்முகதாஸ், பேராசிரியை திருமதி மனோன்மணி சண்முகதாஸ், பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா, கலாசார உத்தியோகத்தர் சைவப் புலவர் கு.ரஜீவன் ஆகியோர் பணியாற்றினர். இந்நூல் 1040 பக்கங்களைக் கொண்டுள்ளதுடன் முதற்கட்டமாக 1500 பிரதிகள் அச்சிடப்பட்டுள்ளது. இவை விற்பனைக்கு வழங்கப்படாது பாடசாலைகள், நூலகங்கள், பல்கலைக்கழகங்கள் ஆகியவற்றுக்கு வழங்கப்படவுள்ளது. சைவப்புலவர் சு.செல்லத்துரை தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண கல்வி அமைச்சர் கே. சர்வேஸ்வரன் கலந்து கொண்டதுடன், வடக்கு மாகாண பிரதம செயலாளர், மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள், மாகாணசபை உறுப்பினர்கள், திணைக்கள தலைவர்கள், அறிஞர்கள், கலைஞர்கள், ஆசிரியர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

(படங்கள்:-பொ.சோபிகா)

## தரம் 1,2 மாணவர்களுக்கு ஆங்கிலப் பாடப்புத்தகம்





(கொழும்பு)

இலங்கை கல்வி வரலாற்றில் முதற் தடவையாக தரம் 1 மற்றும் தரம் 2 மாணவர்களுக்கான ஆங்கிலப் பாடப் புத்தகம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

தரம் ஒன்றிலிருந்து ஆங்கில பாடத்திட்டத்தினை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கையினை கல்வி அமைச்சு மேற்கொண்டதுடன், அதனை மகரகம தேசிய கல்வி நிறுவகம் நேற்று அறிமுகம் செய்துள்ளது.

அத்துடன், அதற்கான பாடப்புத்தகம் மற்றும் இறுவெட்டு என்பனவும் நேற்று வெளியிட்டுவைக்கப்பட்டுள்ளது.

குறித்த புத்தகத்தில், கதைகள் வரைதல், ஆடல், பாடல்கள், பேசுதல், கதைத்தல் செயற்பாடுகள் அதற்கான உபகரணப் பாவிப்பு ஆகியன உள்ளடக்கப்பட்டுள்ளதுடன், வகுப்பறைச் செயற்பாடுகள் போன்றனவும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இலங்கையின் கல்விக் கொள்கைக்கு அமைய இதுவரையான காலப்பகுதியில் பாடத்திட்டத்தில் ஆங்கிலக் கல்வியானது தரம் 3இல் இருந்தே ஆரம்பிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்த அறிமுக நிகழ்வின்போது, கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம், கல்வி இராஜாங்க அமைச்சர் வே. இராதாகிருஸ்ணன், கல்வி அமைச்சின் செயலாளர் சுனில் ஹெட்டியாராச்சி, தேசிய கல்வி நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகம் உட்பட கல்வி அமைச்சின் அதிகாரிகள், தேசிய கல்வி நிறுவகத்தின் உயர் அதிகாரிகள் எனப் பலர் கலந்து கொண்டிருந்தனர். (இ-7)

## ரணிலை வீழ்த்த 40க்கும் அதிகமான ஐ.தே.க. எம்.பிக்கள் ஆதரவு-மகிந்த

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றைக் கொண்டுவருகின்ற திட்டம் இன்னமும் கைவிடப்படவில்லை எனவும், அடுத்த வாரத்தில் இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை சபாநாயகரிடம் சமர்ப்பிக்கப்படவுள்ளதாகவும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.



இலங்கையிலுள்ள வெளிநாட்டு செய்தியாளர் சங்க அங்கத்தவர்களை நேற்று முன்தினம் வியாழக்கிழமை கொழும்பில் சந்தித்து கலந்துரையாடிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும், இதற்கு ஐக்கிய தேசிய கட்சியின் 42 முதல் 46 வரையான நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆதரவளிப்பார்கள் என நம்பிக்கை வெளியிட்ட மகிந்த, இது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை விடவும் அதிகமாகும் என்றும் நகைப்புடன் தெரிவித்தார்.

இதேவேளை, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கண்டி கலவரத்துடன் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை தொடர்புபடுத்தி குற்றம் சாட்டியதாகவும், ஆனால் அந்தக் கலவரத்திற்கும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சிக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை என்றும் தெரிவித்துள்ளார். (இ-7)

## முஸ்லிம்களுக்கு வீண் அச்சம் வேண்டாம் உரிய பாதுகாப்பு வழங்க அரசு தயார்

## சட்டம் ஒழுங்கு அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

முஸ்லிம் மக்கள் வீணாக அஞ்சவேண்டிய தேவையில்லை. பொறுப்பு வாய்ந்த அரசாங்கம் என்ற வகையில் போதிய பாதுகாப்பை வழங்கத் தயார் என்றும் எதிர்காலத்தில் இதுபோன்ற துரதிர்ஷ்ட சம்பவங்கள் நடைபெற ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லை என்றும் பொது நிர்வாக, முகாமைத்துவ, சட்டமும் ஒழுங்கும் அமைச்சர் ரஞ்ஜித் மத்தும பண்டார முஸ்லிம் அமைப்புக்களின் பிரதிநிதிகளிடம் உத்தரவளித்தார்.

அடிப்படை இனவாத குழுக்களினால் திட்டமிட்ட அடிப்படையில் இந்தச் சம்பவம் அரங்கேற்றப்பட்டுள்ளமை ஆரம்பக்கட்ட விசாரணைகள் மூலம் தெரிய வந்துள்ளதாகத் தெரிவித்த அவர், கண்டி மாவட்டத்தில் இடம்பெற்ற சம்பவங்களுடன் தொடர்புடையோருக்கு எதிராகத் தராதரங்களுக்கு அப்பால் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

முஸ்லிம் கவுன்ஸில் ஒப் ஸ்ரீலங்காவின் ஏற்பாட்டில் அதன் தலைவர் என்.எம்.அமீன் தலைமையில் அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா உட்பட முஸ்லிம் அமைப்புக்களின் பிரதிநிதிகளும் புதிதாகக் கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்ட பொது நிர்வாக, சட்டமும் ஒழுங்கும் அமைச்சர் ரஞ்ஜித் மத்தும பண்டாரவுக்கும் இடையிலான முக்கிய சந்திப்பு ஒன்று கொழும்பில் இடம்பெற்றது.

கொழும்பு 7 இல் உள்ள பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பின் போது அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்,

இந்தச் சம்பவம் தொடர்பில் சிலர் அரசின் பக்கம் விரல் நீட்டுகின்றனர். அதில் எவ்வித உண்மையும் கிடையாது. அரசுக்கு இந்தச் சம்பவத்துடன் தொடர்புள்ளதாகக் கூறப்படும் கூற்றைத் தான் முற்றாக மறுப்பதாகத் தெரிவித்த அமைச்சர் மாறாக அரசியல் நோக்குடன் செயற்படுகின்ற சிலர் இதன் பின்னணியில் இருக்கின்றனர். அவை தொடர்பில் அறிக்கை கிடைக்கப் பெற்றதும் முழுமையான தகவல்களை வழங்குவோம் என்றார்.

அண்மையில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் இதுவரை சுமார் 280 சந்தேக நபர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் பெரும்பாலானோர் வெளி மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள். இவற்றின் மூலம் இந்தத் தாக்குதல் சம்பவத்தின் பின்னணியைப் புரிந்து கொள்ள முடியும் என்றார்.

அத்துடன் சில பகுதிகளில் பொலிஸாரின் செயற்பாடுகள் தொடர்பிலும் தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளதுடன் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. அவை தொடர்பிலும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்த அவர் இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளச் சட்டமும் ஒழுங்கும் அமைச்சின் மேலதிக செயலாளர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார் எனவும் தெரிவித்தார்.

அத்துடன் மேற்படி சம்பவத்தின் போது முஸ்லிம் இளைஞர்களும் முஸ்லிம் சமூகத்தினரும் மிகவும் பொறுமையுடன் செயற்பட்டதாக தனக்கு அதிகாரிகள் குறிப்பிட்டதாக சுட்டிக்காட்டிய அமைச்சர் அதற்கான பாராட்டுகளையும் தெரிவித்தார்.

மிகவும் சவாலான சந்தர்ப்பத்தில் இந்த அமைச்சு பொறுப்பை பொறுப்பேற்றுச் சரியான முறையில் வழிநடத்த முன்வந்தமைக்காக முஸ்லிம் சமூகத்தின் சார்பில் பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்வதாக முஸ்லிம் கவுன்ஸில் ஒப் ஸ்ரீலங்காவின் தலைவர் என்.எம் அமீன் தெரிவித்தார். (இ-7)

# கைப்பணியாளர்களுக்கான விழிப்புணர்வுச் செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

கைப்பணி கைத் தாழிலில் ஈடுபடும் கைப்பணியாளர்களை ஊக்குவிக்கும் முகமாக தேசிய அருங்கலைகள் பேரவையினால் வருடாவருடம் " சில்ப அபிமானி" கண்காட்சியும், போட்டியும் நடத்தப்பட்டு வெற்றியாளருக்கான பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டு வருகின்றன.

இவ் வாண் டும் ஓகஸ்ட் 23-27 வரை நடை பெறவுள்ள கண்காட்சி மற்றும் போட்டிக்காக கைப் பணியாளர்கள் தயார்படுத்தும் நோக்கில் மேற்படி விழிப்புணர்வு செயலமர்வு தேசிய அருங்கலைகள் பேரவையினால் எதிர்வரும் 20.0 3.2018 செவ்வாய்க் கிழமை காலை 9 மணிக்கு யாழ் மாவட்ட செலக கேட்போர் கூடத்தில் நடத்தப்படவுள்ளது. இச் செயலமர்வில் கொழும்பு கட்புலத்து ஆற்றுகை பல்கலைக் கழக பேராசிரியர் தலைமையிலான குழுவினர் கலந்து கொண்டுவடிவமைப்புதொழில் நுட்பம் தொடர்பான ஆலோசனைகள் வழங்க உள் ளனர். ஆகவே இவ் விழிப்புணர்வு செயலமர்வில் கலந்து கொள்ளுமாறு கேட்பதுடன் பின்வரும் கைப்பணித்துறை சார்ந்த கைப்பணியாளர்களை தவறாது கலந்து கொண்டு பயன் பெறுமாறு கேட்டுக் கொள்கின் றோம்.

களிமண் சார்ந்த உற்பத்திகள், தும்பு ஓலை, புல் சார்ந்த உற்பத்திகள்,பிரம்பு மூங்கில் சார்ந்த உற்பத்திகள், உலோக கைப்பணிப் பொருட்கள், ஆபரணங்கள், சங்கீத உபகரணங்கள், துணிகளில் ஆன கைப்பணிப் பொருட்கள், பற்றிக், மர உற் பத்திகள், தோற்பொருட்கள், கற்கள் மூல கைப்பணிப் பொருட்கள், தென்னை, கித்துல், எள்ளு, பனை சார்ந்த உற்பத்திகள், நானாவித கைப்பணிப் பொருட்கள், நினைவுச் சின்னங்கள் என் பனவாகும் என அபிவிருத்தி உதவியாளர் அ.தினேஸ் அறிவித்துள்ளார். (இ

# அமைச்சர் ராஜித மீது புதிய குற்றச்சாட்டு



(கொழும்பு)

அரச மருத்துவ பீட மாணவர்களின் பெற்றோர் சங்கம், சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ன மீது குற்றச்சாட்டொன்றை முன்வைத்துள்ளது.

மாலபே நெவில் பெர்னாண்டோ வைத்தியசாலையை அரசாங்க மயமாக்கும் செயற்பாடு போலியான முறையில் இடம்பெற்றுள்ளதால் இதற்கு சுகாதார அமைச்சர் பொறுப்புக்கூற வேண்டுமெனவும் அவர்கள் தெரிவித்தனர்.

இதுதவிர அரச மருத்துவ பீட மாணவர்களின் பெற்றோர் சங்கம் நேற்று வெள்ளிக்கிழமை பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜெயசுந்தரவிடம் எழுத்து மூல முறைப்பாடு ஒன்றை கையளித்துள்ளனர்.

குறித்த முறைப்பாட்டில் மாலபே நெவில் பெர்னாண்டோ வைத்தியசாலையை அரசாங்கத்திற்கு மாற்றும் போது. இடம்பெற்ற மோசடிகள் குறித்தும் இதன் போது விபரிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# இந்து ஆலயங்களுக்கு நட்டஈடு கோரல்

(யாழ்ப்பாணம்)

அண்மைக்காலமாக வடக்கு மாகாணத்தில் குறிப்பாக முல்லைத்தீவு மன்னார் போன்ற மாவட்டங்களில் அமைந்திருக்கும் இந்து ஆலயங்களின் விக்கிரகங்கள் சேதமாக்கப்பட்டு மக்களிடையே அச்ச உணர்வை ஏற்புடுத்திவருவதை அனைவரும் அறிவர்.

இது போன்ற சம்பவம் யாழ்ப்பாணத்திலும் இடம் பெற ஆரம்பித்திருப்பதை திட்டமிட்ட ஒரு செயலாகவே நாம் திடமாக நம்புவதோடு மத சுதந்திரத்திற்கு விடுக்கப்படும் சவாலாகவே இதனைக் கருதுகின்றது.

நல்லாட்சியில் இன ஐக்கியம், மத நல்லிணக்கம், ஜனநாயகம் போன்றன ஏட்டளவில் காணப்படுகிறதே தவிர நடைமுறையில் அவை அச்சுறுத்தலுக்கு உட்படுத்தப்படுவதையே மேற்படி சம்பவங்கள் வெளிப்படுத்துகின்றன.

இவ்வாறான திட்டமிட்ட குரோதச் செயற்பாடுகளை இல்லாதொழிப்பதற்குரிய பாதுகாப்பினை சகல ஆலயங்களுக்கும் வழங்கி மக்கள் அமைதியாகவும் நிம்மதியாகவும் வாழுவதற்கான சூழலை பாதுகாப்பு அமைச்சினூடாக உருவாக்கித் தர வேண்டுமெனவும் சேதம் விளைத்தவர்களை இனங்கண்டு அவர்களை சட்டத்தின் முன் நிறுத்துவதோடு பாதிப்படைந்த ஆலயங்களுக்கு நட்ட ஈட்டையும் பெற்றுத் தர ஆவன செய்யுமாறு சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு புனர்வாழ்வு மீள்குடியேற்றம் மற்றும் இந்து சமய அலுவல்கள் அமைச்சரைக் கோருவதென இந்து அமைப்புக்களின் ஒன்றியம் ஏகமனதாகத் தீர் மானித்துள்ளது என அதன் செயலாளர் இ. இரத்தினசிங்கம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் குறிப்பிட்டுள்ளார். (இ

# தந்தை செல்வநாயகம் நினைவு தினப் போட்டி

(யாழ்ப்பாணம்)

தந்தை செல்வாவின் பிறந்த தினம் பங்குனி மாதம் 31 ஆம் திகதியும் அவரின் நினைவு தினம் எதிர்வரும் சித்திரை மாதம் .26 ஆம் திகதியுமாகும். இந் நாட்களில் அவரை நினைவுகூரும் முகமாக செல்வநாயகம் நினைவு அறக்கட்டளையால் ஞாபகார்த்த நிகழ்வுகளை நடத்தவும் தந்தை தொடர்பான விழிப்புணர்வை இளைய தலைமுறையினருக்கு ஏற்படுத்தும் முகமாக கட்டுரை போட்டிகளை நடத்தி அவர்களுக்கு பரிசில்களை வழங்கவும் திட்டமிட்டுள்ளோம்.

போட்டி தொடர்பான விபரம் இரு பிரிவுகளாக நடைபெறுகின்றது.

வடக்கு மாகாண பாடசாலைகள் மட்டத்திலான போட்டி,உயர்தரத்தில் க்ல்வி பயிலும் பாடசாலை மாணவர்களுக்கான கட்டுரை மற்றும் பேச்சுப் போட்டி.

திறந்த போட்டி -நாடு முழுவதும் வயது வேறுபாடின்றி விரும்பிய அனைவரும் பங்குபற்றக் கூடியதான கட்டுரைப் போட்டி

கீழ்வரும் தலைப்புகளில் திறந்த போட்டியாளர்கள் தமது கட்டுரைகளை அனுப்பலாம்.

தந்தை செல்வாவும் சமஷ்டி கோரிக்கையும் ,

அஹிம்சை போராட்டமும் தந்தை செல்வாவும் , தந்தை செல்வா விட்டுச் சென்ற தடங்கள், வன்முறைகள் பெருகி வரும் இன்றைய சூழ் நிலையில் தந்தை செல்வா வாழ்ந்திருந்தால் .

கட்டுரையானது மேலே குறிப்பிடப்பட்ட தலைப்புக்களிலிருந்து விரும்பிய தலைப்பினை தெரிவு செய்து 400- 500 சொற்களுக்கு மேற்படாமல் எழுதுதல் வேண்டும்.

மேற்படி போட்டிக்கான கட்டுரைகளை அனுப்ப வேண்டிய முகவரி-

செல்வநாயகம் நினைவு அறக்கட்டளை,
தந்தை செல்வா இல்லம்,
தந்தை செல்வா வீதி,
தெல்லிப்பழை.

போட்டி தொடர்பான மேலதிக விபரங்களுக்கு

எஸ். மரியதாஸ்- 077 971 0525

ஏ.ஆர்-சாள்ஸ் - 077 539 0011

கட்டுரை அனுப்ப வேண்டிய இறுதித் திகதி 31.03. 2018. இறுதிப் போட்டி மற்றும் பரிசில்கள் வழங்கும் வைபவம் கிளிநொச்சியில் 27.04.2018 நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என அறங்காவலர் ச.செ.ச. இளங்கோவன் அறிவித்துள்ளார். (இ

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1359

Search for people, places and things   Nagendram Home

### அரவிந்த்

விவசாயம் பண்ணுற பசங்களுக்கு பொண்ணு கொடுக்கமாட்டாங்களாம், ஆனா...



தன் பெண்ணை கட்டிக் கொடுக்கும் வீட்டில் தோட்டம் தோப்பு இருக்கனுமாம்... என்னயா நியாயம் இது

### அன்பு

ஆணின் முட்டாள்தனத்தை புரிந்துகொள்ளும் பெண்ணும்



பெண்களின் குழந்தை தனத்தை ரசிக்கும் ஆணும்தான் மிகச் சிறந்த தம்பதிகள்...

### அசோக்

முன்னெல்லாம் யாருக்கும் தெரியாம சின்ன வீடு வச்சிருப்பாய்ங்க...



அதேமாதிரி இப்பெல்லாம் சிம்கார்ட் ஒன்னு வைச்சிருக்கிறாங்க...

### அனித்தா


மன அமைதிக்கு யோகாதான் செய்யவேண்டும் என அவசியமில்லை



மனைவியை ஒருவாரம் வீட்டுக்கு அனுப்பியும் பயன்பெறலாம்...

### அமுதா


நமக்குப் பிடித்தவர்கள் நம்மைக் காயப்படுத்தும்போதுதான்



இல்லாதவற்றையும் இழந்தவற்றையும் பற்றி ஆழமாகச் சிந்திக்கத் தோன்றுகிறது...!

### அபிதா

வீட்டுக்குள்ள ஃபான் வச்சிருந்தா ஏழை



வீட்டுக்கு வெளிய ஃபான் வச்சிருந்தா பணக்காரன்

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

## கண்டிக் கலவரத்தில் உயிரிழந்த சிங்கள இளைஞனின் குடும்பத்தினருக்கு அமைச்சர் பைசர் முஸ்தபா நிதியுதவி



(கண்டி)


கண்டியில் இடம்பெற்ற கலவரத்தில் உயிரிழந்த சிங்கள இளைஞனின் குடும்பத்தினருக்கு மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் பைசர் முஸ்தபா தனிப்பட்ட முறையில் நிதியுதவி செய்துள்ளார்.

கண்டி மற்றும் புறநகர் பகுதிகளில் முஸ்லிம்,சிங்கள பிரச்சினை எழக் காரணம் எனக் கருதப்படும் கொலைச் சம்பவத்தில் உயிரிழந்த சிங்கள இளைஞனின் குடும்பத்தினரை நேற்று முன்தினம் பிற்பகலில் சந்தித்த அமைச்சர் பைசர் முஸ்தபா தனது குடும்பத்தினர் சகிதம் கலந்துரையாடி ஆறுதல் தெரிவித்திருந்தார்.

மேலும் தன் சொந்த நிதியில் இருந்து ஒரு தொகைப் பணத்தினை அவர்களுக்கு வழங்கி உதவினார்.

இதன்போது அப்பிரதேச (அம்பாளை) பௌத்த விகாரையின் விகாராதிபதி மற்றும் முஸ்லிம் பள்ளிவாசலின் இமாம் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இதற்கு முன்னதாக அப்பிரதேசங்களுக்கு விஜயம் செய்திருந்த முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்க உயிரிழந்த சிங்கள மற்றும் முஸ்லிம் இளைஞர்களின் குடும்பங்களுக்கு தலா ஒரு இலட்சம் ரூபா வீதம் தனிப்பட்ட முறையில் நிதியுதவி செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)




## விசா மறுப்பு;சுவிஸ் அரசின் நடவடிக்கையால் காணாமற்போனோரின் உறவுகள் வேதனை

(கரணவாய்)

எங்களுடைய பிரச்சினைகளை எடுத்துக்கூறி உண்மையை அறிந்து நீதியை நிலைநாட்ட ஐ.நா. மனிதவுரிமை மன்றத்திற்கு செல்வதற்கு சுவிட்சர்லாந்து அரசாங்கம் எமக்கு அனுமதி தர மறுத்தமையினையிட்டு வேதனையடைவதாக யாழ். மாவட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் குடும்பங்களின் சங்கத்தினால் ஐக்கிய நாடுகள் சபைக்கு அனுப்பப்பட்ட மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, கடந்த கால யுத்தத்தினால் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளாகிய நாங்கள் எங்களது உறவுகளுக்கு என்ன நடந்தது என்பதை அறிந்து அதற்கான நீதியை பெற்று கொடுக்க தொடர் போராட்டத்தினை ஆரம்பித்து ஒருவருடம் பூர்த்தியாகியுள்ளது.

காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் குடும்பங்களாகிய நாங்கள் சொல்லொணாத் துன்பங்களையும், இராணுவப் புலனாய்வாளர்களின் அச்சுறுத்தலுக்கும் உள்ளாகி வருகின்றோம்.

இப் போராட்டத்தில் கலந்து கொண்ட பல பெற்றோர்கள் வெயில்,மழை தாக்கத்தினாலும் உளவியல் ரீதியாகப் பாதிக்கப்பட்டும், திடீர் சுகயீனத்தினாலும் இறந்துள்ளனர்.

நாம் போராட்டத்தினைத் தொடங்கிய நாளிலிருந்தும் அதற்கு முன்னராகவும் பல உள்நாட்டு,வெளிநாட்டு பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளையும் அமைப்புக்களையும் சந்தித்து எமது கோரிக்கைகளை முன்வைத்து மனுக்களைக் கையளித்துள்ளோம்.

எமது நாட்டின் முன்னைய, தற்போதைய ஜனாதிபதிகள் உள்ளிட்ட பல பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளுக்கும் எமது கோரிக்கைகளை முன் வைத்துள்ளோம். ஆனால் இன்று வரை இலங்கை அரசோ, சர்வதேசமோ எங்களுடைய பிரச்சினைகளைக் கண்டு கொள்வதாகத் தெரியவில்லை.

இலங்கை அரசும், சர்வதேசமும் எங்களை ஏமாற்றுவதாக உணர்கின்றோம். இலங்கை அரசால் முன்னெடுக்கப்படும் அலுவலகத்தினால் பிரச்சினைகளைத் தீர்ப்போம் எனும் தீர்மானத்திலே எமக்கு நம்பிக்கையில்லை. உள்ளகப் பொறிமுறைகள் மேலும் காலத்தை நீடிக்குமே தவிர எமக்கு காத்திரமான எவ்வித முடிவுகளையும் பெற்றுத்தராது என்பதனை தெளிவாகக் கூறிக் கொள்கின்றோம்.

இலங்கை அரசாங்கத்தால் ஏற்படுத்தப்பட்டுள்ள காணாமற் போனோர் அலுவலகம் மற்றும் அதற்கான ஆணையாளருக்கு இருக்க வேண்டிய தகுதிகள் தொடர்பாக நல்லிணக்கச் செயலணியினரிடம் தெளிவாகவும், விரிவாகவும் தெரிவித்திருக்கின்றோம். ஆனால் எங்களது கருத்துக்கள் எதுவுமே உள்வாங்கப்படவில்லை என மனவருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அத்தோடு ஜனாதிபதி ஓய்வு பெற்ற இராணுவ உயர் அதிகாரியை நியமித்திருப்பதானது பாதிக்கப்பட்ட எங்களை மேலும் மனவேதனைக்கு உள்ளாக்குகின்றது. அத்துடன் அரசு போடும் இரட்டை வேடங்களும் எமக்கு வேதனை தருகிறது. இச் செயற்பாடுகளை நாம்வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

எங்களுடைய பிரச்சினையை எடுத்துக் கூறி உண்மையை அறிந்து நீதியை நிலைநாட்ட ஐ.நா. மனித உரிமை மன்றத்திற்கு செல்வதற்கு சுவிட்சர்லாந்து அரசாங்கம் அனுமதி தர மறுத்ததையிட்டு வேதனையடைகின்றோம்.

ஆகவே வடக்கு-கிழக்கில் காணாமல் ஆக்கப்பட்டவர்களுடைய உறவுகளாகிய நாங்கள் பின்வரும் கோரிக்கைகளை தங்களிடம் முன்வைக்கின்றோம்.

முதலாவது உள்ளக விசாரணையில் நம்பிக்கை இல்லை. அதனால் அதனை நிராகரிக்கின்றோம். இரண்டாவது சர்வதேச விசாரணை ஒன்றே எமக்கு வேண்டும்.

மூன்றாவது இலங்கை அரசால் உருவாக்கப்பட்ட காணாமற்போனோர் அலுவலகத்தில் எமக்கு நம்பிக்கை இல்லை.

எனவே எமது கோரிக்கைகளை சபை மன்றத்திற்குக் கொண்டு சென்று நீதி கோரி நிற்கின்றோம் என இந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-60)

## பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை பிரதேச பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் 8 ஆவது ஆண்டுப் பொதுக் கூட்டம் நாளை மறுதினம் திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் பருத்தித்துறை பிரதேச செயலகமாநாட்டு மண்டபத்தில் யாழ்ப்பாணம் உயர் தொழில்நுட்பவியல் நிறுவன முன்னாள் பணிப்பாளர் க.கதிரமலை தலைமையில் இடம்பெறும். இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக பருத்தித்துறை பிரதேச செயலர் ஆழ்வாப்பிள்ளைசிறி, சிறப்பு விருந்தினர்களாக பருத்தித்துறை பிரதேச செயலக கணக்காளர் செ.கிருபாகரன், பிரதேச செயலக நிர்வாக அலுவலகர் ஐ.பரமேஸ்வரன், யாழ். மாவட்ட சங்கத் தலைவர் பொ.கமலநாதன், கௌரவ விருந்தினர்களாக யாழ்ப்பாண என்.டி.பி.வங்கி முகாமையாளர் சு.சபேஸ், நெல்லியடி பான் ஏசியா வங்கி முகாமையாளர் எஸ்.அருள்குமரன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ)

## வெள்ளவாய்க்கால் அமைப்பு ஆரம்பம்





(கரணவாய்)

கரவெட்டி பிரதேச செயலகப்பகுதிக்குட்பட்ட ஜே/371 கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்துள்ள ஆட்டுப்பட்டி கிராமப் பகுதியில், வெள்ளவாய்க்கால் அமைப்பதற்கான ஆரம்ப வைபவம் நேற்றுக்காலை இடம் பெற்றது.

இதுவரை காலமும் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம்கொடுத்து வந்திருந்த ஆட்டுப்பட்டி கிராம மக்கள் பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனுக்கு விடுத்த கோரிக்கைக்கு அமைவாக, இத்திட்டத்திற்கான சம்பிரதாயபூர்வ ஆரம்ப நிகழ்வில் அவர் கலந்து கொண்டு ஆரம்பித்து வைத்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனின் பத்து இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் இந்த வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந் நிகழ்வில் கரவெட்டி பிரதேச செயலாளர், ஜே/371 கிராம உத்தியோகத்தர், சமூக அமைப்புக்களின் தலைவர்கள் மற்றும் சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள்,கிராம மக்கள் எனப்பலரும் கலந்து கொண்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-60)

## திட்டமிட்ட அடிப்படையில் ஞானசாரர் ஜப்பான் நிகழ்வில் பங்கேற்கவில்லை!

### பொதுபல சேனா விளக்கம்

(கொழும்பு)

திட்டமிட்ட அடிப்படையில் அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் ஜனாதிபதியின் ஜப்பான் நிகழ்வில் பங்கேற்கவில்லையென பொதுபல சேனா அமைப்பு தெரிவித்துள்ளது.



ஜப்பானில் பௌத்த பிக்குகளுடன் ஜனாதிபதி சந்திப்பு ஒன்றினை நடத்தியிருந்த நிலையில் இந்தச் சந்திப்பில் ஞானசார தேரர் பங்கேற்றமை பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது.

இலங்கையின் ஊடகங்களில் இந்த விடயம் சுட்டிக் காட்டப்பட்டிருந்தது. எனினும், இந்தச் சந்திப்பு திட்டமிட்ட அடிப்படையில் மேற்கொள்ளப்படவில்லை என பொதுபல சேனா தெரிவித்துள்ளது. (இ-7)



கோப்பாய் மத்தி கிராம சிவில் பாதுகாப்பு குழுவின் முயற்சியினால் புலம்பெயர் தமிழர் ஒருவரின் நிதி உதவியில் கோப்பாய் மத்தி கிராம அலுவலர் பிரிவின் கீழ் தெரிவு செய்யப்பட்ட வறுமைக்கோட்டிற்குட்பட்ட 7 மாணவர்களுக்கு கடந்த வாரம் கொம்பாய் மத்தி கிராம அலுவலர் அலுவலகத்தில் வைத்து துவிச்சக்கரவண்டிகள் வழங்கப்பட்டன. (இ-ஏ)

# பங்குனி மாத இராசி பலன்கள்

## 15.03.2018-13.04.2018



**பொதுப்பலன்**

புதன், சுக்ரன், சூரியன் சேர்க்கையோடு இந்த மாதம் தொடங்குவதால், எதிர்பாராத நல்ல மாற்றங்களையும், ஏற்றங்களையும் கொடுக்கப் போகின்றது. உள்ளத்தில் உற்சாகம் குடிகொள்ளும். அல்லல்கள் விலகும். திறமைக்கு அங்கீகாரம் கிடைக்கும். திட்டமிட்டுச் செய்யும் காரியங்களில் வெற்றி கிடைக்கும். வாழ்க்கைத் தேவை பூர்த்தியாகும். கடமையில் இருந்த தொய்வு அகலும்.

**உத்தியோகம்**

உத்தியோகத்தில் உங்கள் திறமைக்கு பாராட்டு கிடைக்கும். பொறுப்புகள் வந்து சேரும். தொழில் செய்பவர்களுக்கு மகத்தான நேரமிது. தொழில் ஸ்தானாதிபதி சுக்ரன் உச்சம் பெற்றிருப்பதால் எதிர்பார்த்ததைக் காட்டிலும் கூடுதல் இலாபம் கிடைக்கும். புதிய ஒப்பந்தங்கள் அடுக்கடுக்காக வந்துசேரும். திசாபுத்திக்கேற்ற தெய்வ வழிபாடுகளைச் செய்வது நலம் தரும்.

**உடல்நலம்**

இராசிநாதன் சூரியன் அஷ்டமத்தில் குரு வீட்டில் இருப்பதால், பெரியளவில் உடல்நல பாதிப்பு ஏற்படாது. வயிறு, தொண்டை, பல் சம்பந்தப்பட்ட வகையில் சிறுசிறு பிரச்சினை கள் ஏற்பட்டு அகலும். இரத்த அழுத்தம், வெப்ப நோய் ஏற்படுவதற்கான அறிகுறி தென்படும் பொழுதே சிகிச்சை எடுத்துக்கொள்வது நல்லது.

**குடும்பம்**

குடும்பத்தில் மகிழ்ச்சிக்குரிய சம்பவங்கள் ஏராளமாக நடைபெறும். சுப நிகழ்ச்சிகள் நடைபெறுவதற்கான அறிகுறிகள் தோன்றும். வீடு வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். இல்லத்திற்குத் தேவையான பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். வாழ்க்கைத் தரம் உயரும்.

**பணவரவு**

தனாதிபதி புதன் உச்சம் பெற்ற சுக்ரனோடு இணைந்திருப்பது யோகம் தான். எனவே பணம் பல வழிகளிலும் வந்து பையை நிரப்பும். வங்கிகளின் ஒத்துழைப்பும், வள்ளல்களின் ஒத்துழைப்பும் போதுமான அளவு கிடைக்கும். கொடுக்கல்- வாங்கல் திருப்திகரமாக இருக்கும். இடங்களை விற்பதன் மூலம் இலாபம் கிடைக்கலாம்.

**செவ்வாய்-சனி**

4, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியான

மார்ச் 16ஆம் திகதி முதல் ஏப்ரல் 6ஆம் திகதி வரை மீனத்தில் புதன் வக்ரம் பெறுகிறார். 2, 11இற்கு அதிபதி வக்ரம் பெறுவதால் வர வேண்டிய பாக்கிகள் தாமதமாகும். நிதி, நெருக்கடிகளை சமாளிக்க புதிய யுக்திகளைக் கையாள்வீர்கள். காரியங்கள் கடைசி நேரத்தில் கை கூடலாம். பிறருக்கு பொறுப்பு சொல்வதன் மூலம் பிரச்சினைகள் உருவாகலாம். யோசித்து செயற்பட வேண்டிய நேரமிது.

**மேஷ சுக்ரன்**




மார்ச் 27ஆம் திகதி மேஷத்திற்கு சுக்ரன் செல்கிறார். 3,10இற்கு அதிபதியான சுக்ரன் 9இல் சஞ்சரிப்பது யோகம் தான். பெற்றோர் வழியில் உறவு பலப்படும். விலகிச் சென்ற

வான் வக்ர இயக்கத்தில் செல்கிறார். பஞ்சம அஷ்டமாதிபதியான குரு வக்ரம் பெற்று சஞ்சரிப்பதால் பிள்ளைகளால் பிரச்சினைகள் உண்டு. அவர்களை உங்கள் மேற்பார்வையில் வைத்துக் கொள்வது நல்லது. சகாய ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் குரு, வழக்குகளில் திடீர் திருப்பங்களைக் கொடுக்கும். பத்திரப் பதிவில் இருந்த தடை அகலும்.

**பெண்களுக்கான பலன்கள்**

சுப செலவுகள் அதிகரிக்கும். துணிந்து முடிவெடுத்து மற்றவர்களை ஆச்சரியத்தில் ஆழ்த்து வீர்கள். திருமண முயற்சிகளில் இதுவரை இருந்த தடை அகலும். ஒரு சிலர் பழைய நகைகளைக் கொடுத்து விட்டு, புதிய நகைகளை வாங்குவார்கள். கணவன்-மனைவி உறவு பலப்படும். அசையாச் சொத்துகள் வாங்கி மகிழும் வாய்ப்பு உண்டு. பணவரவு திருப்திகரமாக இருக்கும்.

**கலைத்துறை**

கலைஞர்களுக்கு வாய்ப்புகள் படிப்படியாக வரத் தொடங்கும். திறமைக்குரிய அங்கீகாரம் கிடைக்கும் நேரமிது. பாதியில் நின்ற பணிகள் மீதியும் தொடரும். தொழில் போட்டிகள் அதிகரித்தாலும் உங்கள் முன்னேற்றம் பாதிக்காது.

## சுப செலவுகள் அதிகரிக்கும்

செவ்வாயும், 6, 7இற்கு அதிபதியான சனியும் பஞ்சம ஸ்தானத்தில் ஒன்று சேருவதால், மனையில் மங்கல ஓசை கேட்பதற்கான வாய்ப்புகள் உண்டு. பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் பஞ்சாயத்துகள் நல்ல முடிவிற்கு வரும்.

**புதன் வக்ரம்**

வர்கள் விரும்பி வந்து இணைவார்கள். சொத்துத் தகராறுகள் அகலும். எதிர்கால நலன்கருதி நீங்கள் தீட்டிய திட்டங்கள் எளிதில் வெற்றி பெறும்.

**துலாம் குரு**

ஏப்ரல் 11ஆம் திகதி துலாம் இராசிக்கு குரு பக

**அரசியல்**

எதிரிகளின் பலம் குறையும் நேரமிது. எதிர்பார்ப்புகள் நிறைவேறும். புதிய பொறுப்புகளும், பதவிகளும் கிடைக்கலாம். தொண்டர்களின் ஆதரவு பெருகும். எடுக்கும் முயற்சிகளில் வெற்றி பெற மக்களின் ஆதரவு கிடைக்கும்.

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**



**பொதுப்பலன்**

உங்களுக்கு இந்த மாதம், அர்த்தாஷ்டமச் சனியோடு செவ்வாயும் இணைவதால் அதிக கவனத்தோடு செயற்பட வேண்டியது அவசியம். கொடுக்கல்-வாங்கல்களில் கூடுதல் கவனத்தோடு இருந்தால் தான் விரயங்களில் இருந்து தப்பிக்க இயலும். எதிலும் அவசரம் காட்டக் கூடாது. அலட்சியம் காட்டவும் கூடாது. கோபத்தைக் குறைத்துக் கொள்ளுங்கள்.

**உத்தியோகம்**

பணிபுரியும் இடத்தில் கவனத்தோடு செயல்படுவது நல்லது. உங்கள் பொறுப்புகளை யாரிடமாவது ஒப்படைத்தால் அது மீண்டும் உங்களிடமே வந்து சேரும். எதிர்பார்த்த சலுகைகள் மேலிடத்தில் இருந்து கிடைப்பது அரிது. தொழில் செய்பவர்களுக்கு கடன்சுமை கூடலாம். பணியாளர்கள் நம்பிக்கைக்குரிய விதம் நடந்து கொள்ளமாட்டார்கள்.

**உடல்நலம்**

உங்கள் இராசிநாதன் புதன் நீச்சம் பெற்றும், வக்ரம்பெற்றும் சஞ்சரிப்பதால்,

இந்த மாதம் ஆரோக்கியத் தொல்லை அதிகரிக்கும். படபடப்பும், மனஅழுத்தமும் கூடும். சாப்பிடும் உணவுகளாலேயே தொல்லை அதிகரிக்கலாம். உணவில் கட்டுப்பாடோடு இருங்கள். சிறுநீரகப் பிரச்சினைகள், கட்டிகள், கொப்புளங்கள் வந்து மறையும்.

**குடும்பம்**

குடும்பத்தில் அமைதி ஏற் பட அனைவரையும் அனுசரித்துச் செல்லுங்கள். வாழ்க்கைத் துணையாலும், வாரிசுகளாலும் வந்த பிரச்சினைகள் அகலும். முன்கோபத்தை தவிர்ப்பது நல்லது. தனாதிபதி சுக்ரன் உச்சம் பெறுவதால் வருமானம் திருப்திகரமாக இருந்தாலும் மன நிம்மதி குறைவாகவே இருக்கும்.


**பணவரவு**

பணத்தை கையில் வைத்துக் கொண்டு தான் காரியத்தைத் தொடங்க வேண்டும் என்ற அவசியமில்லை. புது முயற்சிகளைத் தொடங்கினால் அதன் தேவைக்கேற்ப பணம் வந்து கொண்டே இருக்கும். மாதத்தின் மையப் பகுதியில் நிதி நெருக்கடி ஏற்பட்டாலும், அதைச் சமாளிக்கும் ஆற்றல் உங்களுக்கு உண்டு. புத-சுக்ர

விரோதங்களுக்கு ஆளாக நேரிடும்.

**புதன் வக்ரம்**

மார்ச் 16ஆம் திகதி முதல் ஏப்ரல் 6ஆம் திகதி வரை மீனத்தில் புதன் வக்ரம் பெறுகின்றார். இராசிநாதன் வக்ரம் பெறுவது அவ்வளவு நல்லதல்ல. எதையும் திட்டமிட்டுச் செய்ய இயலாது. தன்னம்பிக்கையும், தைரியமும் குறையும். தொழில் மாற்றச் சிந்தனை மேலோங்கும். பிற-




ருக்கு பொறுப்பு சொல்லி வாங்கிக் கொடுத்த தொகையால் பிரச்சினைகள் வரலாம்.

ஏப்ரல் 11ஆம் திகதி துலாம் இராசிக்கு குரு பகவான் வக்ர இயக்கத்தில் செல்கிறார். அப் பொழுது அவரது பார்வை 6, 8, 10 இடங்களில் பதிவதால் உத்தியோக முயற்சி கைகூடும். சம்பளப் பாக்கிகள் தானாக வந்து சேரும். நீண்ட நாளைய பஞ்சாயத்துகள் நல்ல முடிவிற்கு வரும். மாற்று மருத்துவம் உடல்நலத்தைச் சீராக்கும்.

**பெண்களுக்கான பலன்கள்**

மன பயம் அதிகரிக்கும். குடும்பச் சுமை கூடும். ஆரோக்கியத் தொல்லைக்கு ஆளாவீர்கள். கணவன்-மனைவி உறவில் அனுசரணை தேவை. குடும்பப் பெரியவர்களின் ஆலோசனைகளைக் கேட்டு நடப்பதுநல்லது. பண விடயத்தில் மிகுந்த எச்சரிக்கையோடு இருங்கள். முதுகுத் தண்டுவட தொல்லைகளைச் சந்திக்க நேரிடும். வழிபாடுகள் தான் வளர்ச்சியைக் கூட்டும்.

**கலைத்துறை**

கலைஞர்களுக்குப் புகழ் கூடும். புதிய வாழ்க்கை மலரும். விருதுகளும், பாராட்டுகளும் குவியும். தொழில் தொய்வின்றி நடைபெறும். உங்கள் திறமையை உலகம் கண்டுகொள்ளும். வெளிநாட்டில் இரு

## சுபகாரியப் பேச்சுக்கள் முடிவாகும்

சேர்க்கையால் குடும்ப உறுப்பினர்கள் மூலம் வருமானம் கிடைக்கலாம்.

**செவ்வாய்-சனி**

உங்கள் இராசிக்கு 3, 8 ஆகிய இடங்களுக்கு அதிபதியான செவ்வாயும், 5, 6 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சனியும் சுக ஸ்தானத்தில் ஒன்று சேருவது நல்லதல்ல. பிள்ளைகளால் பிரச்சினை உருவாகலாம். பெற்றோர்கள் வழியில் விரிசல்கள் ஏற்படலாம். சகோதர வர்க்கத்தினரின்

யோசித்தும், இறைவனைப் பூஜித்தும் செயற்பட வேண்டிய நேரமிது.

**மேஷ சுக்ரன்**

மார்ச் 27ஆம் திகதி மேஷத்திற்கு சுக்ரன் செல்கிறார். 2,9இற்கு அதிபதி அஷ்டமத்தில் மறையும் பொழுது குடும்பச் செலவு கூடும். சுபகாரியப் பேச்சுகள் முடிவாகும். கல்யாணக் கனவுகள் நிறைவேறும். ஆடை, ஆபரண சேர்க்கை உண்டு.

**துலாம் குரு**

ந்து அழைப்புகள் வந்துசேரலாம்.

**அரசியல்**

எதிரிகளின் தொல்லை அதிகரிக்கும். வீண் பழிகளுக்கு ஆளாகாமல் பார்த்துக் கொள்ளுங்கள். தொண்டர்கள் ஆதரவைத் தக்கவைத்துக் கொள்ள முயற்சி எடுப்பீர்கள். வருமானம் வந்தாலும் செலவும் கூடும். மேலிடத்தை அனுசரித்துச் செல்வது நல்லது.

(தொடரும்)




# சிட்டுக் குருவியும் குட்டி யானையும்

ஒரு காட்டில யானைக் குட்டி இருந்தது. அதுக்குத் தான் பெரிய ஆள்ன்னு நினைப்பு. தினமும் காட்டுல நடந்துக்கிட்டே தும்பிக்கைக்கு எட்டுகிற மரக் கிளைகளை ஒடிச்சு சாப்பிட்டுக்கிட்டே போகும். அப்படி ஒரு நாள் ஒரு மரத்தை நெருங்கினப்ப, அங்கே இருந்த சிட்டுக்குருவிகையை ஆட்டி, 'வணக்கம் யானை நண்பா' என்று கூறியது"


அதை கேட்ட யானைக் குட்டி அலட்சியமாக சொன்னது.

'உன்னோட உருவம் எவ்வளவு? என்னோட உருவம் எவ்வளவு? நாம எப்படி நண்பர்களா இருக்க முடியும்?", உடனே குருவி பதில் சொன்னது'.

'ஏன் முடியாது. நட்புக்கு உருவம்முக்கியம்இல்லை. மனசு தான் முக்கியம், நான் இந்த மரத்தில் ரொம்ப நாட்களாக இருக்கேன். நீ இதை ஒடிச்சேன்னா, நானும் இங்கே இருக்கிற மற்ற பறவைகளும் எங்கே போவது? " என்று கேட்டது.

"அதுக்கு யானை கேலியான குரலில் சொன்னது,

இந்த மரம் உங்களுக்கு வேணும்னா வீடா



இருக்கலாம் ஆனா எனக்கு இதுதான் சாப்பாடு" என்றது. அதைக்கேட்ட குருவி சொன்னது...

"அப்படின்னா நமக்குள்ளே ஒரு போட்டி வைத்துக்கொள்ளலாம். அதில் நீங்கள் வெற்றி அடைந்தால், இந்த மரத்தின் கிளைகளை உடைத்து சாப்பிட்டுகொள் நான் வெற்றி அடைந்தால் மரத்தை ஒடிக்கக்கூடாது' என்றது சிட்டுக் குருவி.

'பொடிப் பயல் உன்னோடு போட்டியா? சரி சொல்லு' என்றது யானைக் குட்டி.

"நாம ரெண்டு பேரும் அந்த மலை வரைக்கும் பறக்கணும். யார் முதலில் அங்கே போய்ச் சேர்கிறோமோ, அவங்கதான் வெற்றி அடைந்த மாதிரி" என்றது சிட்டுக்குருவி.

யானை தன்னாலே பறக்க முடியாதுனு தெரிஞ்சாலும் வீம்புக்காக இவ்வளவு தானா பறந்துட்டா போகுது என்று போட்டிக்கு ஒப்புக் கொண்டது.

போட்டி ஞாயிற்றுகிழமை காலை நடைபெறும் என்று நாள் முடிவு செய்யப்பட்டது, இப்போ யானைக்கு ஒரு பிரச்சினை, நாலு நாளைக்குள்ளே எப்படியாவது பறக்க கற்றுக் கொள்ள வேண்டும், என்ன செய்வது, யாரிடம் கற்றுக் கொள்வது என குழம்பியது.

பறக்கிறது என்பது பெரிய விஷயமா என்ன, லேசாக கத்துக் கொள்ளலாம் என்று நினைத்த யானை வழியிலே ஒரு கோழியை பார்த்தது.

"கோழி கோழி, எனக்கு ஒரு உதவி செய்யணும்,

**தொடரும்...**




❖1805-நெப்போலியன் தலைவனாக இருந்த இத்தாலியக் குடியரசு, இத்தாலியப் பேரரசு ஆனது. நெப்போலியன் அதன் பேரரசன் ஆனான்.

❖1845-இறப்பர் பட்டி (rubber band) கண்டு பிடிக்கப்பட்டது.

❖1958-ஐக்கிய அமெரிக்கா வங்கார்ட் 1 செய்மதியை ஏவியது.

1959 - டென்சின் கியாட்சோ, 14வது தலாய் லாமா, திபெத்தில் இருந்து வெளியேறி இந்தியா வந்து சேர்ந்தார்.

❖1969-கோல்டா மெயர் (Golda Meir) இஸ்ரவேலின் முதலாவது பெண் பிரதமரானார்.

❖1970-மை லாய் படுகொலைகள் தொடர்பான தகவல்களை வெளியிடாமல் மறைத்த குற்றத்துக்காக அமெரிக்க இராணுவம் 14 இராணுவ அதிகாரிகள் மீது குற்றம் சாட்டியது.

❖1992-ஆர்ஜெண்டீனாவில் இஸ்ரேல் தூதரகத்தில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுவெடிப்பில் 29 பேர் கொல்லப்பட்டு 242 பேர் படுகாயமடைந்தனர்.

❖1996-இலங்கை அணி அவுஸ்திரேலியாவைத் தோற்கடித்து துடுப்பாட்ட உலகக் கிண்ணத்தை வென்றது.

❖2000-உகண்டாவில் கடவுளின் பத்துக் கட்டளைகளை மேம்படுத்தும் மத இயக்கம் ஒன்றின் உறுப்பினர்கள் 800 பேர் வரையில் அவ்வியக்கத் தலைவர்களினால் படுகொலை செய்யப்பட்டனர்.

**பிறப்புகள்**

❖1834-காட்லீப் டைம்லர், செருமானிய பொறியியலாளர், தொழிலதிபர் (இ. 1900)

❖1926-கே. சங்கர், தென்னிந்தியத் திரைப்பட இயக்குநர், திரைப்படத் தொகுப்பாளர் (இ. 2006)

❖1940-எம்.எச்.எம்.ஷம்ஸ், இலங்கை ஊடகவியலாளர், கவிஞர், எழுத்தாளர் (இ. 2002)

❖1990-சாய்னா நேவால், இந்திய இறகுப் பந்தாட்ட வீராங்கனை

**இறப்புகள்**

❖1782-டேனியல் பெர்னூலி, டச்சு-சுவிட்சர்லாந்து கணிதவியலாளர், இயற்பியலாளர் (பி. 1700)

❖1853-கிறிஸ்டியன் டாப்ளர், ஆஸ்திரிய இயற்பியலாளர், கணிதவியலாளர் (பி. 1803)

❖1956-ஐரீன் ஜோலியட் கியூரி, நோபல் பரிசு பெற்ற பிரான்சிய வேதியியலாளர் (பி. 1897)

❖2011-யியார்யிய் ஏ.கிராசின்சுகி, உருசிய வானியலாளர் (பி. 1939)

**சிறப்பு நாள்**

❖குழந்தைகள் நாள், (வங்காளதேசம்)

❖தேசிய முவாய் போர நாள் (தாய்லாந்து)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 70 | 40 | 30 | 50 | 40 | 80 | 60 |
| உருளைக்கிழங்கு | 100 | 80 | 65 | 90 | 70 | 80 | 70 |
| பச்சைமிளகாய் | 50 | 50 | 50 | 50 | 60 | 60 | 60 |
| தக்காளி | 20 | 30 | 20 | 30 | 40 | 40 | 30 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 30 | 30 | 40 | 50 | 40 | 40 |
| கோவா | 30 | 30 | 30 | 30 | 50 | 60 | 50 |
| கரட் | 80 | 100 | 80 | 100 | 100 | 160 | 70 |
| பூசணி | 50 | 30 | 40 | 50 | 40 | 40 | 50 |
| புடோல் | 60 | 40 | 30 | 60 | 80 | 60 | 70 |
| வாழைக்காய் | 50 | 40 | 40 | 60 | 70 | 60 | 70 |
| சின்ன வெங்காயம் | 100 | 140 | 80 | 120 | 120 | 140 | 90 |
| பெரிய வெங்காயம் | 80 | 100 | 60 | 75 | 80 | 80 | 120 |
| பாகற்காய் | 120 | 100 | 110 | 120 | 140 | 100 | 130 |
| வெண்டிக்காய் | 100 | 100 | 65 | 80 | 80 | 80 | 100 |
| கருணைக்கிழங்கு | 50 | 100 | — | 60 | 60 | 60 | 50 |
| பயற்றங்காய் | 80 | 100 | 30 | 40 | 40 | 40 | 80 |
| லீக்ஸ் | 80 | 200 | 110 | 200 | 150 | 160 | 140 |
| பீற்றூட் | 30 | 40 | 30 | 60 | 60 | 40 | 50 |
| கறிமிளகாய் | 80 | 100 | 65 | 120 | 100 | 80 | 140 |
| முருங்கைக்காய் | 400 | 400 | 400 | 320 | 500 | 800 | 500 |
| போஞ்சி | 100 | 140 | 65 | 100 | 100 | 180 | 120 |
| கத்தரிப்பிஞ்சு | 60 | 30 | — | 50 | — | 60 | 50 |
| கீரை-1பிடி | 40 | 20 | 20 | 40 | 30 | 40 | 30 |
| தேசிக்காய் | 80 | 40 | 80 | 80 | 30 | 80 | 80 |
| தேங்காய்(ஒன்று) | 90 | 100 | 35-90 | 100 | 75 | 75 | 90 |
| இராசவள்ளி | 140 | 160 | — | 150 | 160 | 200 | 150 |
| வெங்காயப்பூ | 80 | 100 | 70 | 80 | 100 | 160 | 80 |
| முள்ளங்கி | 30 | 100 | 30 | 40 | 60 | 60 | 30 |
| பொன்னாங்காணி | 45 | 40 | 10 | 40 | 40 | 30 | 30 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 20 | 20 | 20 | 30 |
| ஈரப்பலா | 80 | 40 | — | 80 | 60 | 100 | 80 |

ஒழுக்கசீலரைப்போல உலகத்தை ஏமாற்றும் வஞ்சகரைப் பார்த்து அவரது உடலில் கலந்துள்ள நிலம், நீர், தீ, காற்று, வெளி எனப்படும் பஞ்சபூதங்களும் தமக்குள் சிரித்துக் கொள்ளும். *~ கலைஞர் உரை*

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## எங்கள் ஹிரோஷிமாவுக்கு ஜனாதிபதி மைத்திரி அஞ்சலிக்காதது ஏன்?

இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன யப்பானுக்கு விஜயம் மேற்கொண்டுள்ளார்.

யப்பானுக்குச் சென்றிருந்த அவர் இரண்டாம் உலக யுத்தத்தின்போது அணு குண்டு வீசப்பட்டு அழிக்கப்பட்ட யப்பானின் ஹிரோஷிமா நகருக்கு சென்று அங்கு அமைக்கப்பட்டுள்ள நினைவுத் தூபியில் அஞ்சலி செலுத்தினார்.

பொதுவில் யப்பானுக்கு விஜயம் செய்யும் உலக நாட்டுத் தலைவர்களும் வெளிநாட்டுப் பிரமுகர்களும் அணுகுண்டு வீச்சில் அழிவுற்ற நாகசாகி, ஹிரோஷிமா ஆகிய நகரங்களுக்குச் சென்று அங்குள்ள நினைவிடத்தில் அஞ்சலி செலுத்துவது வழக்கம்.

மனித அழிவின் அடையாளமாக இருக்கக்கூடிய மேற்குறித்த யப்பானின் இரு நகரங்களும் இன்றுவரை மனித இதயத்தைக் கசக்கிப் பிழிய வைப்பன.

அந்த இடத்துக்குச் செல்கின்ற எவரும் அங்கு ஏற்பட்ட அழிவுகளின் அடையாளங்களைப் பார்த்து நெக்குருகுவர். இதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் விதிவிலக்கல்ல.

ஹிரோஷிமாவில் உள்ள நினைவுத் தூபியில் அஞ்சலித்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சில நிமிடங்கள் இதயத்தால் அழுதார். இதேநிலைதான் அங்கு செல்லும் அத்தனை பேருக்கும் ஏற்படும்.

சிலவேளை இந்த உலகில் யுத்தம் நிகழாமல், மனித உயிர்கள் வதைபடாமல் இருப்பதற்கு யப்பானின் ஹிரோஷிமா, நாகசாகி ஆகிய நகரங்களில் ஏற்பட்ட அழிவுகள்தான் காரணமாக இருக்கலாம்.

சிலவேளை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வன்னி யுத்தத்துக்கு முன்னதாக யப்பானுக்கு சென்று ஹிரோஷிமா, நாகசாகி ஆகிய நகரங்களைப் பார்த்திருந்தால், வன்னியில் கொடும் போர் செய்வதை விரும்பாதிருப்பாரோ என்று நம் ஏழை மனம் நினைக்கிறது.

எதுவாயினும் எங்கள் வன்னியும் ஒரு ஹிரோஷிமா என்பதுதான் உண்மை.

அணுகுண்டு தரவல்ல அழிவுகளை; மனித உயிர்க்கொலைகள்; இன அழிப்பை வன்னி பெருநிலப்பரப்பும் சந்தித்தது.

இறுதி யுத்தம் நடந்த முள்ளிவாய்க்காலில் பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் கொல்லப்பட்டனர்.

யப்பான் எங்ஙனம் ஹிரோஷிமாவில் உயிரிழந்தவர்களுக்கு நினைவுச் சின்னம் நிறுவியுள்ளதோ அதுபோல தமிழ் மக்கள் வன்னி யுத்தத்தில் உயிரிழந்த பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்களின் நினைவாக முள்ளிவாய்க்காலை அஞ்சலிக்கின்றனர்.

ஆக, நம் கேள்வியெல்லாம் யப்பானுக்கு விஜயம் செய்த எங்கள் நாட்டு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, ஹிரோஷிமாவுக்குச் சென்று அங்குள்ள நினைவுத் தூபிக்கு அஞ்சலி செலுத்தினார் எனும்போது,

அவர் முள்ளிவாய்க்காலுக்குச் சென்று வன்னி யுத்தத்தில் உயிரிழந்த அப்பாவித் தமிழ் மக்களுக்காக ஒரு நிமிடமேனும் அஞ்சலி செலுத்தாதது ஏன்?

ஆம், முள்ளிவாய்க்காலில் உயிரிழந்தவர்கள் தமிழர்கள் அல்லவா? அதனால்தான் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முள்ளிவாய்க்காலுக்குச் சென்று அஞ்சலி செலுத்தவில்லை.

கடவுளே! இரக்கப்படுவதிலும் உயிரிழந்தவர் யார் என்று எட்டிப்பார்க்கும் கொடுமை இருக்கும்வரை மனிதம் வாழ்வது கடினமே.

# தஞ்சம் கோருவோரின் கோரிக்கையை சர்வதேச நாடுகள் ஏற்றுக் கொள்ள வேண்டும்

## அமைச்சர் அனந்தி சசிதரன் ஜெனிவாவில் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

அச்சுறுத்தலான காலத்தில்தான் நாம் இப்போதும் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். எனவே உயிர் தஞ்சம் கோருபவர்களின் அரசியல் தஞ்சக் கோரிக்கையை சர்வதேச நாடுகள் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று வட மாகாண சபை அமைச்சர் அனந்தி சசிதரன் தெரிவித்தார்.

ஜெனிவாவில் நடைபெற்ற இலங்கை விவகாரம் குறித்த விசேட உபகுழுக் கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

உபகுழுக் கூட்டத்தில் அனந்தி சசிதரன் மேலும் உரையாற்றுகையில்,

நான் வடமாகாண புனர்வாழ்வு அமைச்சராக உள்ளேன். புனர்வாழ்வு அமைச்சராக இருந்தாலும் ஆனால் எங்களுடைய இடங்களில் முற்று முழுதாக மீள்குடியேற்றம் செய்யப்படவில்லை.

மக்களுக்கு அந்த இடத்தில மீள்குடியேற்றுவதற்கான வசதி வாய்ப்புகள் இன்னும் முழுமையாக ஏற்படுத்தப்படவில்லை.

வலிகாமம் வடக்கில் மீள்குடியேற்றப்பட்ட நூற்றுக் கணக்கான குடும்பங்கள் மர நிழலின் கீழ் நின்று கொண்டு வீடுகளைக் கட்டுகின்றார்கள். குடியேற்றப்பட்ட பொழுது வீடுகள் எல்லாம் அழிக்கப்பட்டு இன்று கிணறு, மலசலகூடம் முற்று முழுதாக இல்லாமல் வீடு கட்டுவதற்கு மட்டும் வெறுமனே 8 இலட்சம் ரூபாய் அரசாங்கத்தினால் வழங்கப்படுகின்றது.

அதிகமான காணிகள் இராணுவ ஆக்கிரமிப்புக்குள் இருக்கின்றமையால் அரசாங்கம் ஏற்கெனவே கூறியது போன்று நாங்கள் எதிர்பார்த்தது போன்று நிலங்கள் விடுவிக்கப்படாத ஒரு சூழல் இருக்கின்றது. உள்நாட்டு அகதிகள் ஒரு புறம் இருக்க புலம்பெயர்ந்து வருகின்ற தமிழர்கள் அரசியல் தஞ்ச கோரிக்கை நிராகரிக்கப்பட்டு மீண்டும் இலங்கைக்கு அனுப்பப்பட்டு பலர் கைது செய்யப்பட்டிருகின்ற சம்பவங்களையும் நாம் பார்க்கின்றோம்.

இந்த இடங்களில் உயிர் பாதுகாப்புக்காகவும் அச்சுறுத்தல் காரணமாகவும் இந்த நாடுகளில் குடியேற வருகின்ற தமிழர்கள் மீது அந்தந்த நாடுகள் கருசனை கொள்ள வேண்டும். இன்னும் நாங்கள் சாதாரண வாழ்க்கையை வாழத் தொடங்கவில்லை என்பது அந்த மண்ணில் இருக்கின்ற எங்களுக்குத்தான் தெரியும்.

அச்சுறுத்தலான காலத்தில் தான் நாம் இப்போதும் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்.

எனவே உயிர்தஞ்சம் கோருபவர்களுக்கான அரசியல் தஞ்சக் கோரிக்கையை இந்த நாடுகள் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

மீள்குடியேற்றம் புனர்வாழ்வு என்ற பக்கம் இன்று வரை வடக்கு மாகாணத்தை புறந்தள்ளி அரசாங்கம் நேரடியாக செய்கின்றது. பல சிக்கல்களை எங்களுடைய மக்கள் எதிர்கொண்டுதான் இருக்கிறார்கள்.

சொந்த நாட்டிலே அகதிகளாக வாழ்கின்ற சூழல் இன்றும் நிலவி வருகின்றது என அவர் மேலும் தெரிவித்தார். (ம-4)

## கிராமங்களின் அபிவிருத்திக்கான புதிய வேலைத்திட்டம் ஆரம்பம்

### பிரதமர் ரணில் தெரிவிப்பு

(கேகாலை)

எதிர்வரும் பண்டிகைக் காலத்தைத் தொடர்ந்து கிராமிய மக்களின் அபிவிருத்திக்காக பரந்த வேலைத்திட்டத்தை ஆரம்பிக்கப் போவதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.


கேகாலையில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற சமய நிகழ்ச்சியொன்றில் உரையாற்றிய பிரதமர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இலங்கை வாழ் பௌத்தர்கள் மற்ற மதத்தவர்களை மதித்து, அவர்களின் நம்பிக்கையைப் பெற வேண்டும். இல்லாவிட்டால் கடந்த கால அசம்பாவிதங்கள் மீண்டும் தலைதூக்குவதைத் தவிர்க்க முடியாதென பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்துள்ளார். (ம)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 6 மணிவரை யாழ். பிரதேசத்தில் மண்டான், அண்ணா சிலையடி, சுன்னாகம் சிவன் கோவிலடி பிரதேசம், சூறாவத்தை மயிலங்காடு, குப்பிளான், ஏழாலை, கட்டுவன், சுன்னாகம்இலங்கைதொலைத்தொடர்பு நிலையம், சட்டநாதர் வீதி, பருத்தித்துறை வீதியில் கல்வியங்காட்டு சந்தையிலிருந்து நல்லூர் கோவில் வரை, நல்லூர் குறுக்கு வீதி, செம்மணி வீதி, கச்சேரி நல்லூர் வீதி, கனகரட்ணம் வீதி, திருமகள் வீதி, மலர்மகள் வீதி, கலைமகள் வீதி, பூமகள் வீதி, சாஸ்திரியார் வீதி, நடுத்தெருலேன், நாவலர் வீதி, நொத்தாரிஸ் லேன், வேலப்பர் வீதி, புவனேஸ்வரி அம்மாள் வீதி, புறூடி லேன், ஸ்ரான்லி கல்லூரி வீதி, சுப்பிரமணியம் வீதி, முதலியார் வீதி, பாரதி லேன், புங்கன்குளம் வீதி புகையிரத கடவை வரை, நாயன்மார் வீதி, குகன் வீதி, பொன்னம்பலம் வீதி, நாவலர் வீதியில் மாம்பழம் சந்தியிலிருந்து நல்லூர் குறுக்கு வீதி வரை, ஏ9 வீதியில் பாரதி வீதியிலிருந்து செம்மணி வளைவு வரை, நெடுங்குளம் வீதி புகையிரதக் கடவை வரை, முள்ளி, நாவலடி, பூம்புகார், அரியாலை கிழக்கு, Cey- Nor பவுண்டேஷன் லிமிற்ரெட், மாவட்ட கடற்றொழில் கூட்டுறவுச் சங்கம், கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம், SOS சிறுவர் பூங்கா, அரியாலை டீசல் அன்ட் மோட்டார் என்ஜினியறிங் பி.எல்.சி, நாயன்மார்கட்டு Carlton Sports Network (CSN), கொத்தியாலடி, நவிண்டில், கரணவாய், வதிரி, நெல்லியடி, கரவெட்டி, மாலுசந்தி, அல்வாய், திக்கம், இரும்பு மதவடி, வியாபாரி மூலை, கப்பூது, யாக்கரு, துன்னாலை, புலோலி, புற்றளை, தும்பளை, கற்கோவளம், நெல்லியடி நகரம், பருத்தித்துறை நகரம், தம்பசிட்டி, மாதனை, சாரையடி, நாவலர் மடம், மந்திகை, வல்லிபுரம், கற்கோவளம் ஐஸ தொழிற்சாலை ஆகிய இடங்களிலும் கிளிநொச்சி பிரதேசத்தில தருமபுரம், புளியம் பொக்கணை, விசுவமடு, தோரவில், விசுவமடு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்




**முகப்பு கேட் வாயில் எப்படி அமைக்க வேண்டும்?**

கிழக்கு ஈசானியத்தில் முகப்பு வாயில் அமைப்பது: இன்பத்தைக் கொடுக்கும்.

கிழக்கு முகப்பு வாயில்: குறைகளை நீக்கும்

கிழக்கு ஆக்நேய முகப்பு வாயில்: துன்பம்

மேற்கு முகப்பு வாயில்: ஆண்களுக்கு புகழ்

மேற்கு நிருதியில் வாயில்: விஷப்பூச்சிகள்

மேற்கு வாயில் முகப்பு வாயில்: நலம்

வடக்கு முகப்பு வாயில்: மிக நன்மை

வடக்கு ஈசானிய வாயில்: சுபம் தரும்

வடக்கு வாவிய வாயில்: நிரந்தர கேடு தரும்

தெற்கு முகப்பு வாயில்: சுபம் தரும்

தெற்கு நிருதி வாயில்: நாகம் வாசம்

தெற்கு ஆக்நேய வாயில்: சுபம் தரும். *(தொடரும்)*

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



- இறைவன் தான் நமக்கு உதவி செய்ய முடியுமே தவிர, இறைவனுக்கு நம்மால் உதவ முடியாது. எனவே, இறைவனுக்கு உதவுகிறேன் (இறைப்பணி செய்கிறேன்) என்ற சொல்லை உள்ளத்திலிருந்து நீக்கி விடுங்கள்.
- நாய்க்குட்டிக்கு சோறு வழங்கும் போது, அந்த நாயையும் கடவுளாகப் பாவித்து வழிபடுங்கள். ஏனெனில், நாயினுள்ளும் கடவுள் இருக்கிறார்.
- ஏழைகள், நோயாளிகள், பலவீனர்களிடம் இறைவனை காண்பவரே உண்மையில் அவரை வழிபடுகிறவர் ஆவார்.
- கடவுள் ஒவ்வொரு ஜீவனிலும் குடி கொண்டு இருக்கிறார் என்பதால், மக்களுக்கு சேவை செய்பவன், கடவுளுக்கே சேவை செய்பவன் ஆகிறான்.
- அமைதியுடனும், ஆண்மையுடனும் ஆக்கப்பூர்வமான பணிகளில் ஈடுபடுங்கள்.
- பெறத் தகுதியுடையவர், எந்த பொருளாக இருந்தாலும் அதைப் பெற்றே தீருவார். அதை தடுக்கும் சக்தி, உலகில் எங்கும் இல்லை.
- உலகில் ஒரே ஒருவனின் இதயத்திற்காவது சிறிதளவு இன்பமும், மகிழ்ச்சியும் அளிக்க முடியுமானால் அது மட்டுமே நிஜமான சேவை.

# இரட்டைச்சத வெற்றிக்கிண்ணத்தை கைப்பற்றியது ஹாட்லியைற்ஸ்









இரட்டைச்சத வெற்றிக் கிண்ணத்திற்காக யாழ்.சென்றல் விளையாட்டுக்கழகம் 2017 ஆம் ஆண்டுக்கான 2 ஆவது வருடமாக நடத்திய 3 ஒரு நாள் தொடரை ஹாட்லியைற்ஸ் அணி கைப்பற்றியது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை ஹாட்லி கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற 3ஆவதும், இறுதியுமான போட்டியில் யாழ். சென்றல் அணி 3 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ். சென்றல் அணி 27.4 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 139 ஓட்டங்களை பெற்றது.

யாலேந்திரா - 12, வதூஸன் - 13, றஜீவ்குமார் - 13, கவி - 22, சலிஸ்ரன் ஆட்டமிழக்காது 24 ஓட்டங்களை பெற்றனர்.

பந்துவீச்சில் பிரதீப் - 3, சாகீத்தியன் - 1, நிஷாந்தன் - 2, கீர்த்திகன் - 3 இலக்குகளை கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஹாட்லியைற்ஸ் அணி 22 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 136 ஓட்டங்களை பெற்றது.

சாகித்தியன் - 16, மணிமாறன்-65, சதீஷ்-16ஈ பிரசாத்-10 ஓட்டங்களை பெற்றனர். பந்து வீச்சில் சலிஸ்ரன் - 6, வதூஸன் - 2, றஜீவ்குமார், மதூஸன் தலா ஒரு இலக்கினை கைப்பற்றினர்.

இப் போட்டியில் யாழ். சென்றல் அணியை சார்ந்த B.கலிஸ்ரன் சிறந்த வீரராக தெரிவு செய்யப்பட்டார்.

தொடரில் முதலாது போட்டியிலும் 2 ஆவது போட்டியிலும் J.சாகித்தியன் சிறந்த வீரராகவும், தொடர் நாயகனாகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளார். மற்றும் தொடரை கைப்பற்றிய ஹாட்லியைற்ஸ் அணி இரட்டைச் சத வெற்றிக் கிண்ணத்தைக் கைப்பற்றினர். 2016 ஆம் ஆண்டும் ஹாட்லியைற்ஸ் அணி தொடரைக் கைப்பற்றியமை குறிப்பிடத்தக்கது. (க)

# கலைவாணி விளையாட்டுக் கழகத்தின் அரையிறுதிப் போட்டிகள் ஆரம்பம்









நாவாந்துறை கலைவாணி விளையாட்டுக்கழகம், யாழ்ப்பாணம் கால்பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் அணிக்கு 7 பேர் கொண்ட கால்பந்தாட்டச்சுற்றுப்போட்டியொன்றை நடத்தியது.

இந்தச் சுற்றுப்போட்டியில் 32 அணிகள் பங்குபற்றின. அணிகள் ஏ,பி என இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு முதற் சுற்று ஆட்டங்கள் விலகல் முறையில் இடம்பெற்றன. ஒவ்வொரு பிரிவிலிருந்து 4 அணிகள் வீதம், 8 அணிகள் சுப்பர்- 8 லீக் சுற்றுக்குத் தகுதி பெற்றன.

ஏ பிரிவில் இருந்து குருநகர் பாடும்மீன், திக்கம் இளைஞர்கள், மயிலங்காடு ஞானமுருகன் மற்றும் இளவாலை யங்ஹென்றிஸ் அணிகளும், பி பிரிவில் இருந்து நாவாந்துறை சென்.நீக்கிலஸ், ஊரெழு றோயல், பலாலி விண்மீன் மற்றும் துறையூர் ஐயனார் ஆகிய அணிகள் தகுதி பெற்றன.

இந்த 8 அணிகளுக்கிடையில் சுப்பர் - 8 ஆட்டங்கள் லீக் முறையில் இடம்பெற்றது. இதிலிருந்து நாவாந்துறை சென்.நீக்கிலஸ், மயிலங்காடு ஞானமுருகன், இளவாலை யங்ஹென்றிஸ் மற்றும் ஊரெழு றோயல் அணிகள் அரையிறுதிக்குத் தகுதி பெற்றன.

எதிர்வரும் 22 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு நடைபெறவுள்ள முதல் அரையிறுதியாட்டத்தில் நாவாந்துறை சென்.நீக்கிலஸ் அணியை எதிர்த்து ஞானமுருகன் அணியும், 23 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு நடைபெறவுள்ள இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் யங்ஹென்றிஸ் அணியை எதிர்த்து ஊரெழு றோயல் அணியும் மோதவுள்ளது. (க-26)


## அன்பு வாசகர்களே!

உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை Valampurisp@gmail.com அல்லது 076 636 3378 என்னும் Viber இலக்கத்துக்கு அனுப்பி வையுங்கள்.

உங்களை உலகறியச் செய்ய நாம் தயார்






கிளிநொச்சி மாவட்ட பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கம் பிரித்தானிய தமிழ் துடுப்பாட்ட லீக்கின் அனுசரணையுடன் நடத்தும் 15வயதுப்பிரிவினருக்கிடையிலான 50பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட துடுப்பாட்டத் தொடரின் இறுதிப்போட்டி நாளை நடைபெறவுள்ளது கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் காலை8.30மணிக்கு நடைபெறும் இவ் இறுதிப்போட்டியில் கிளிநொச்சி மகா வித்தியாலய அணியை எதிர்த்து கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய அணி மோதவுள்ளது.

## போர்க்குற்றவாளிகளுக்கு...

மக்கள் முன்னணி, இலங்கையை சர்வதேச நீதிமன்றுக்கு கொண்டு செல்வதே நீதிக்கான ஒரேவழி எனவும் சுட்டிக்காட்டியுள்ளது. ஐக்கிய நாடுகள் மனிதவுரிமை பேரவையின் 37வது கூட்டத்தொடர் நடைபெற்று வரும் நிலையில், பொது விவாதம் ஒன்றில் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இலங்கையுடன் ஒரு பயனுள்ள உடன்படிக்கையை ஒன்றிணைப்பதற்காக கூட்டு குழுகள், விசேட நடைமுறைகள் மற்றும் சம்பந்தப்பட்ட ஐ.நா உடன்படிக்கை சபைகளுக்கு நாங்கள் அழைப்பு விடுக்க விரும்புகிறோம். மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கை அரசாங்கத்தை மாற்றும் போதிலும் இலங்கை இராணுவத்தால் தமிழர்கள் மீது தொடர்ச்சியாக நடைபெற்ற கடத்தல்கள் மற்றும் சித்திரவதைகளை தடுத்து நிறுத்துவது அவசியமாகும்.

ஆயுதமேந்திய யுத்தத்தின் போது 35 வருடங்களுக்கும் மேலாக ஜனாதிபதி, தமிழீழ மக்களை "எதிரி" எனக் கருதி இலங்கை ஆயுதப்படைகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. எந்தவொரு பாதுகாப்புத் துறையிலும் இல்லாத நிலையில், மிகக்கொடூரமான குற்றத்திற்கு வழிவகுத்த யுத்தத்தின் போது இயங்கும அமைப்பு முறை தந்திரோபாயமாக உள்ளது. யுத்தத்தின் போது,இராணுவ தளபதிகள் மீது உறுதியான சாட்சியங்கள் இருந்த போதிலும், தற்போதைய அரசாங்கம் முன்னைய அரசு போன்று, அத்தகைய தனிநபர்களை ஊக்குவித்து வெகுமதியளித்து வருகிறது.

இந்த அரசாங்கத்தின் குற்றவாளிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க மறுத்து வரும் அதேவேளை, அதற்கு பதிலாக அவர்களுக்கு வெகுமதி அளிக்கிறது. இந்த குற்றங்கள் அரசின் முழுமையான அறிவைக் கொண்டிருக்கின்றன என்பதைக் காட்டுகிறது. மேலும் அரசாங்கத்தின் மிக உயர்ந்த மட்டத்திலான மக்களால் குற்றம் சாட்டப்பட்ட முறைகேடுகளாகும். இலங்கையின் ஜனாதிபதி மற்றும் பிரதம மந்திரியிடம் எந்தவொரு சிறிய நபரும் மீண்டும் மீண்டும் சட்டபூர்வ நீதிமன்றத்தின் முன் நிற்க விரும்பும் எந்தவொரு ஆயுதப்படை உறுப்பினரும் பிரச்சினையை எந்தளவு ஆழமாகக் காட்டியுள்ளார்கள் என்பதைப் பலமுறை குறிப்பிட்டுள்ளனர். எனவே இலங்கையை சர்வதேச நீதிமன்றுக்கு கொண்டு செல்வது தான் இவற்றுக்கெல்லாம் ஒரேவழி என அவர் மேலும் தெரிவித்தார்.

மேலும் கட்சியின் பொது செயலாளர் செல்வராஜா கஜேந்திரன் உரையாற்றுகையில், வடக்கில் உள்ள மக்கள் தற்போதும் தமது காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு என்ன நடந்தது என்பதை கண்டறிவதற்காக ஒரு வருடத்திற்கும் மேலாக தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இதே போன்று காணிகளை விடுவிக்குமாறும் போராடி வருகின்றனர். பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தற்போதும் கைதுகள் நடைபெற்று கொண்டுள்ளன என தெரிவித்த அவர், இலங்கை அரசு 30/1 தீர்மானத்தையும் நடைமுறைபடுத்த தவறியுள்ளது எனவும் தெரிவித்தார். (ம-4)

## சர்வதேச குற்றவியல்...

பாரப்படுத்த வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்டு சுயாதீனமாக இயங்கி வரும் இலங்கையின் நிலைமாறுகால நீதிச்செயற்பாடுகளை கண்காணிக்கும் (Sri Lanka - Monitoring and Accountability Panel (MAP) பன்னாட்டு நிபுணர் குழுவின் ஒருங்கிணைப்பாளராகவும் போர் குற்றங்கள் மானிடத்துக்கு எதிரான குற்றங்களை விசாரணை செய்யும் கம்போடிய கலப்பு நீதிமன்றத்தின் சட்டவாளருமாக றிச்சாட் ஜே றோஜெர்ஸ் இருக்கின்றார்.

இலங்கை விவகாரம் தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது,

இலங்கையில் உள்ள நிலைமை குற்றங்கள் தண்டிக்கப்படாமல் விடப்படுவதன் ஆபத்துகளைத் தெளிவாகக் காட்டுகிறது.

அதாவது பெருமளவிலான குற்றங்கள் தொடர்ந்து நடைபெறுகின்றன. தமிழர்களுக்கு எதிராகத் தொடரும் சித்திரவதையும் பாலியல் வன்செயலும் இப்போதும் திட்டமிட்ட அமைப்புசார் குற்றங்களாகவே இருப்பது, இது இலங்கை அரசாங்கம் செயல்படுத்தும் வன்ம உத்தியின் பகுதி என்றே எண்ணச் செய்கிறது.

மனித உரிமைப் பேரவை இலங்கையின் நிலைமையைப் அனைத்துலக குற்றவியல் நீதிமன்றத்தின் பார்வைக்கு அனுப்பும் படி ஐ.நா பாதுகாப்பு சபை எடுத்துரைக்க வேண்டும்.

இது இலங்கையில் பாதிப்புற்ற மக்களுக்கும் பொறுப்புக்கூறல் கோரும் மனித உரிமைக் காவலர்களுக்கும் ஆதரவு தெரிவிப்பதாக அமையும் எனத் தெரிவித்துள்ளார்.(ம)

## மண்ணெண்ணெய்...

என்ற சிறுமியே மரணமடைந்தவராவார்.

கடந்த புதன்கிழமை மண்ணெண்ணெய் குடித்ததாகத் தெரிவித்து பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மேலதிக சிசிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட நிலையில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மரணமானார்.

இது தொடர்பில் மரண விசாரணை அதிகாரி சி.மோகன் விசாரணையினை மேற்கொண்டார். (ம-60)

## கனடா விபத்தில்...

இதில் பிலாவடி ஒழுங்கை, புலோலி தெற்கைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான இரத்தினசபாபதி கிருஸ்ணகுமார் (வயது 51) என்பவரே பலியானவராவார்.

குடும்பத்தினருடன் கனடா நாட்டில் வசித்து வரும் அவர் காரில் பயணம் செய்து கொண்டிருந்தபோது அவரின் கார் விபத்துக்குள்ளானதாக தெரிவிக்கப்படுகிறது. (ம-60)

## தமிழ் அரசியல் கைதி...

வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார்.

இன்னும் சில மாதங்களில் தனது விடுதலையை எதிர்பார்த்திருந்த நிலையில் மீண்டும் புதிதாக வழக்கு பதிவு செய்யப்பட்டதால் அதிர்ச்சியடைந்து உடல்நிலை பாதிக்கப்பட்ட இவர் சிறைச்சாலையில் உரிய மருத்துவ வசதி வழங்கப்படாத காரணத்தினால் தனது 70 ஆவது வயதில் மேற்குறித்த கைதி பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு மேற்குறித்த நபர், வாகன வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் வவுனியா மாவட்டத்தை சேர்ந்த சண்முகநாதன் தேவகன் (வயது 70) என்ற மேற்குறித்த நபர் பயங்கரவாத தடுப்பு பிரிவினரால் கடந்த 2008 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டார்.

கொழும்பு மகசின் சிறைச்சாலையில் இருந்த இவருக்கு எதிராக தொடர்ச்சியான விசாரணைகளின் பின்னர் கடந்த ஒரு வருடத்துக்கு முன்னதாக சட்டமா அதிபர் திணைக்களத்தால் நீதிமன்றில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. குறித்த நபர் தனது குற்றத்தை ஒப்புக்கொண்டதன் காரணமாக அவருக்கு 2 ஆண்டுகள் சிறைத்தண்டனை வழங்கப்பட்டது.

இந்த நிலையில் இவர் விடுதலையாவதற்கு இன்னும் சில மாதங்கள் இருக்கும் நிலையில் கடந்த ஜனவரி மாதம், சட்டமா அதிபர் திணைக்களத்தால் புதிதாக ஒரு வழக்கு இவருக்கு எதிராக போடப்பட்டது.

10 வருடங்களுக்கு பின்னர் மீண்டும் ஒரு வழக்கு போடப்பட்டதால் அதிர்ச்சியடைந்த குறித்த நபர் திடீரென உடல்நிலை பாதிக்கப்பட்டார். அந்த நிலையிலும் அவர் மேற்குறித்த குற்றச்சாட்டை ஒப்புக்கொள்வதாக தெரிவித்துள்ளார். ஆனால் நீதிமன்று அதற்கு உடன்படாத நிலையில் விசாரணைக்காக அவரது வழக்கை திகதியிட்டு வந்துள்ளது.

இந்த நிலையில் முற்றுமுழுதாக பாதிக்கப்பட்ட குறித்த நபர், நடக்க முடியாத நிலைக்கு தள்ளப்பட்டிருந்தார். உரிய மருத்துவ வசதிகளோ உதவிகளோ இவருக்கு சிறையில் வழங்கப்படாத காரணத்தினால் இவர் வெலிக்கடை சிறைச்சாலை வைத்தியசாலையில் தங்கியிருந்துள்ளார். அங்கிருந்தே நோயாளர் காவு வண்டியில் நீதிமன்றம் சென்று வந்துள்ளார்.

இருப்பினும் மனதாலும் உடலாலும் மிக கடுமையாக பாதிக்கப்பட்ட குறித்த நபரின் உடல்நிலை நேற்று முன்தினம் மோசமடைந்த நிலையில் இவரை கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு கொண்டு சென்று சிகிச்சை வழங்கப்பட்டது. இருப்பினும் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் இவர் உயிரிழந்துள்ளார்.

இவருடன் சேர்த்து கடந்த சில வருடங்களுக்குள் 10 அரசியல் கைதிகள் சிறைகளுக்குள்ளே உயிரிழந்துள்மை குறிப்பிடத்தக்கது. இவருடைய மரணம் சக அரசியல் கைதிகளை மிக பாரிய அளவில் பாதித்துள்ளது.(ம-9,250,281)

## போர்க் குற்றவாளிகளை...

வடக்கு மாகாண முதலமைச்சர் மேலும் தெரிவிக்கையில்,

போர்க்குற்றங்கள் செய்தவர்களை தண்டிப்பதாக இலங்கை அரசாங்கம் பாசாங்கு செய்தாலும் உண்மையில் அவர்களை தண்டிக்காது மாறாக அவர்களை மன்னிக்கும். இதற்கு சிறந்த உதாரணம் காணாமல் போனவர்களுக்கு என்ன நடந்தது? என கேள்வி எழுப்பப்பட்டபோது காணாமல்போனவர்கள இறந்திருக்கலாம் எனவும், இறந்துவிட்டார்கள் எனவும் பதிலளித்த ஜனாதிபதி மற்றும் பிரதமர் இப்போது காணாமல்போனவர்களை கண்டறிவதற்காக அலுவலகம் ஒன்றை உருவாக்குகிறார்கள்.

ஆகவே ஒரு மக்கள் கூட்டத்திற்கு எதிராக குற்றமிழைத்தவர்களை தண்டிக்க வேண்டியது ஒரு அரசாங்கத்தின் கடமையாகும். அதனை இலங்கை அரசாங்கம் ஒருபோதும் செய்யாது. அவர்கள் குற்றவாளிகளுக்காக பரிந்து பேசுவார்கள்.

அதுபோல் உள்நாட்டு விசாரணை என்பதும் குற்றவாளிகளை பாதுகாப்பதற்கான விசாரணையாக இருக்குமே தவிர குற்றவாளிகளை அடையாளம் கண்டு தண்டிப்பதற்கான விசாரணையாக ஒருபோதும் அமையாது.

எனவே நான் 2015-ம் ஆண்டு-ம், 2017-ம் ஆண்டும் ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளருக்குக் கடிதம் எழுதியிருந்தேன். இலங்கையை சர்வதேச விசாரணைக்கு உட்படுத்தும்படி. அதேபோல் ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் நேரில் வந்தபோதும் அதனையே கூறினேன்.

மேலும் இலங்கை தொடர்பான பிரேரணையை அமெரிக்கா, பிரிட்டன் உள்ளிட்ட நாடுகள் ஐ.நா மனித உரிமைகள் ஆணையகத்திற்கு கொண்டுவந்தது. அவர்கள் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்காகவே பிரேரணையை கொண்டுவந்ததாக புாசாங்கு செய்தாலும், உண்மையில் அவர்கள் பூகோள அரசியல் நலன்களின் அடிப்படையிலேயே அந்த பிரேரணையை கொண்டுவந்தார்கள்.

அதாவது இலங்கைக்குள் சீனாவின் தலையீடு அதிகரித்தமை போன்ற பல்வேறு பூகோள நிலைமைகளை கருத்தில் கொண்டே பிரேரணை கொண்டுவந்தார்கள். ஆனால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்காகவே பிரேரணை கொண்டுவந்தோம் என பாசாங்கு செய்தாலும் அவர்களுக்கு பொறுப்புள்ளது.

ஆகவே இலங்கை தொடர்பாக சரியான தீர்மானம் எடுப்பதற்கும், பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நியாயம் கிடைப்பதற்கும் அமெரிக்கா, பிரிட்டன் உள்ளிட்ட பிரேரணையை கொண்டு வந்த நாடுகள் தொடர்ந்தும் ஒத்தாசை புரியவேண்டும். அதேபோல் மக்களும ஒன்றிணைந்து போராட்டங்களை நடத்துவதன் ஊடாக அழுத்தங்களை கொடுக்கவேண்டும் என்றார். (ம)

## விடுதலைப் புலிகளால்...

கொண்டைமடு வீதியின் காட்டுப்பகுதியில் விடுதலைப்புலிகளால் பாவிக்கப்பட்ட **தமிழன்** எனப்படும் கைக்குண்டுகள் பல காணப்படுவதாக முள்ளியவளை பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து முள்ளியவளை பொலிஸார் குறித்த பகுதிக்கு சென்று கைக்குண்டினை அடையாளப்படுத்தியுள்ளதுடன் இது தொடர்பில் விசேட அதிரடிப்படையினருக்கு தெரிவித்துள்ளார்கள்.

இந்நிலையில் விசேட அதிரடிப்படையினர நேற்று நீதிமன்றத்தின் உத்தரவிற்கு அமைய குறித்த கைக்குண்டினை அகற்றியதாக விசேட அதிரடிப்படையினர் தெரிவித்துள்ளனர்.

இது போர் நடைபெற்ற காலத்தில் விடுதலைப்புலிகளால் தயாரிக்கப்பட்டு போரின் போது பாவிக்கப்பட்ட தமிழன் வகை கைக்குண்டு என்றும் இந்த கைக்குண்டுகள் குண்டு கவசத்துடன் காணப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்கள். (ம-281)

## நாட்டில் ஜனநாயகம் இல்லை மகிந்த குற்றச்சாட்டு

(கொழும்பு)

நாட்டிற்குள் தற்போது ஜனநாயகம் இல்லை எனவும் மக்களின் பிரச்சினைகளை மறக்க, அரசாங்கம் பிரச்சினைகளை உருவாக்கி வருவதாகவும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மகரகமையில் நேற்று நடைபெற்ற வைபவம் ஒன்றின் பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

மக்களுக்கு வாழ முடியவில்லை. மக்களுக்கு உண்ண உணவு இல்லை. பொருட்கள் இல்லை. அரச ஊழியர்களின் சம்பளம் அதிகரிக்கப்படுவதில்லை. அனைவரும் பல பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ளனர்.

நாடு ஸ்திரத்தன்மையை இழந்துள்ளது. டொலரின் பெறுமதி அதிகரித்து வருகிறது. இவற்றை மக்கள் மறக்க வேண்டும் என்பதற்காக புதிய பிரச்சினைகளை ஏற்படுத்துகின்றனர் என முன்னாள் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார். (ம)

## மாட்டுடன் மோதுண்டு மோட்டார் சைக்கிள் விபத்து குடும்பஸ்தர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிளில் அதிவேகமாக வந்து மாட்டுடன் மோதுண்டு விபத்துக்குள்ளாகி படுகாயமடைந்த நபர் ஐந்து நாட்களின் பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்

மன்னார் அடம்பனை சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான சந்திரதாஸ் பெர்னாண்டோ (வயது 46) என்பவரே மேற்படி உயிரிழந்தவராவார்

குறித்த நபர் மீன் பிடிப்பதற்காக கடந்த 11 ஆம் திகதி பி.ப 3 மணிக்கு மன்னாரில் இருந்து நாச்சிக்குடாவுக்கு சென்றுள்ளார். அப்போது முழங்காவில் பகுதியில் மாட்டு பட்டி வீதியால் வந்துள்ளது. மோட்டார் சைக்கிளில் வேகமாக சென்ற குறித்த நபர் மாட்டுடன் மோதுண்டு விபத்துக்குள்ளாகியுள்ளார்.

சம்பவ இடத்தில் மாடு உயிரிழந்ததுடன் குறித்த நபர் படுகாயமடைந்து மன்னார் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டார். பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

5 நாட்கள் சிகிச்சை பெற்று வந்த நபர் சிகிச்சை பலனின்றி நேற்று அதிகாலை உயிரிழந்துள்ளார்

இந்த மரண விசாரணையை யாழ். போதனா வைத்தியசாலை மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ம-9)

## ஜெனரல் ஜகத்...

கொண்டு இயங்கும் டிரயல் சர்வதேசம் என்ற அமைப்பு அறிக்கையொன்றை வெளியிட்டது.

ஜெனிவாவில் வைத்து நேற்றுமுன்தினம் வெளியிடப்பட்ட இந்த அறிக்கையில் இலங்கையின் முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் ஜகத் ஜயசூரியவுக்கு எதிராக இலத்தின் அமெரிக்க நாடுகளில் தொடரப்பட்ட யுத்தக் குற்ற வழக்குகள் தொடர்பான விபரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

ஜெனிவாவில் தற்போது நடைபெற்று வரும் ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 37ஆவது கூட்டத் தொடரை முன்னிட்டே சர்வதேச சட்டங்களை அப்பட்டமாக மீறிய யுத்தக் குற்றங்கள் உட்பட பாரதூரமான குற்றங்களுக்கு எதிராகவும் போராடிவரும் டிரயல் சர்வதேச அமைப்பு இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளது.

உலகம் முழுவதும் உள்ள நீதிமன்றங்களில் தொடரப்பட்ட 58 வழக்குகள் தொடர்பான விபரங்களை உள்ளடக்கிய இந்த அறிக்கை நீதிக்கு இடமளியுங்கள் என்ற தலைப்பில் வெளியிடப்பட்டுள்ளது.

126 குற்றவாளிகளுக்கு எதிராக ஐரோப்பா, ஆபிரிக்கா மற்றும் இலத்தின், அமெரிக்க நாடுகள் உட்பட 14 நாடுகளில் தொடரப்பட்ட 58 வழக்குகள் தொடர்பான விபரங்கள் உள்ளடக்கி பிலீப் கிஹான்ட் மற்றும் வெலரி போலே ஆகியோரால் தயாரிக்கப்பட்ட 107 பக்கங்களைக் கொண்டதாக இந்த அறிக்கை அமைந்துள்ளது. (ம)

## இலங்கை தொட...

ஜெனிவா ஐ.நா. அலுவலகத்திலுள்ள ஊழியர்கள் பணிபுறக்கணிப்பில் ஈடுபட்டு வருகின்றமையே நேற்றைய விவாதம் ரத்துச் செய்யப்பட்டமைக்கு காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை தொடர்பாக கடந்த நவம்பர் மாதம் வெளியிடப்பட்ட பூகோள காலக்கிரம மீளாய்வு அறிக்கை மீதான விவாதமே ரத்து செய்யப்பட்டுள்ளது.

பிரதான நிகழ்வுகள் இடம்பெறாத போதிலும், நேற்றைய தினத்திற்கு ஒழுங்கு செய்யப்பட்டிருந்த ஏனைய பக்க நிகழ்வுகள் அனைத்தும் திட்டமிட்டபடி நடைபெற்றுள்ளது என மனித உரிமைகள் பேரவையின் பொது தகவல் அதிகாரி ரோலண்டோ கோமஸ் தெரிவித்துள்ளார். (ம)

## டிப்பருடன் மோட...

திலேயே உயிரிழந்துள்ளதுடன் மேலும் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி நேற்றிரவு உயிரிழந்துள்ளார்.

இவ்விபத்தில் அச்சுவேலி பத்தைமேனி பகுதியைச் சேர்ந்த சுவேந்திரன் மற்றும் ஜெயந்தன் ஆகிய இரு இளைஞர்களே உயிரிழந்துள்ளனர்.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது,

யாழில் இருந்து பருத்தித்துறை நோக்கி டிப்பர் வாகனம் ஒன்று சென்றுள்ளது. குறித்த வாகனம் சிறுப்பிட்டியில் உள்ள வளைவில் திரும்பிய போது, அச்சுவேலி பகுதியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி இரு இளைஞர்கள் மோட்டார் சைக்கிளில் வேகமாக வந்துள்ளனர்.

வளைவில் திரும்பும் போது குறித்த இளைஞர்கள் வேகக் கட்டுப்பாட்டை இழந்து டிப்பர வாகனத்துடன் எதிரே மோதியுள்ளனர்.

இதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவரில் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்த நிலையில் அவரது சடலம் அச்சுவேலி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

டிப்பர் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதுடன் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை அச்சுவேலிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-ஒ)


### சிறுநீரகம் தேவை

52 வயதுடைய ஒருவருக்கு O+ வகையைச் சேர்ந்த சிறுநீரகம் அவசரமாக தேவைப்படுவதால் தகுதியுடையவர்களிடமிருந்து எதிர்பார்க்கின்றோம்.
தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
தொடர்புகளுக்கு:
076 463 1296
(C-1860)

அறிமுகம் - Rs. 250/=
சிக்கன் பிரியாணி
ப்றைட் சிக்கன் - றைஸ் & பைட்ஸ்
Fried Chicken - Rice & Bites
யாழ் பாடியில்
49-51, அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
021 222 6868, 077 736 0353, 075 987 5800
(C-1859)

### விற்பனைக்கு

வடமராட்சி மந்திகை குரும்பசிட்டி வயிரவர் கோயிலுக்கு அண்மையில் 5 அறைகள் கொண்ட 3 1/2 பரப்புக் காணியில் அமைந்த வீடு விற்பனைக்குண்டு.
077 843 5453
(3237)

### விரைவு பொதிகள் சேவை

விசேட விலை குறைப்பு
UK - 550*/= Kg
கனடா - 1050*/= Kg
DELIVERY IN 3-5 DAYS
தொடர்புகளுக்கு: 0768226240
● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை
V2 TRAVELS
(C-1828)

வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை
EXPRESS Courier Services
அண்ணா பொதிகள் சேவை
976, கே.கே.எஸ் வீதி, நாச்சிமார் கோவிலடி
021 221 5656 யாழ்ப்பாணம் 070 330 5500
பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும், குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிட எம்மை நாடுங்கள்.
யாழ்ப்பாணம் | வேலணை | சாவகச்சேரி | மிராலை | முல்லைத்தீவு | கிளிநொச்சி | வவுனியா | திருகோணமலை
(C-1862)

### வேலைவாய்ப்புக்கள்

| | | |
|---|---|---|
| டுபாய் | சுப்பர் மார்க்கட் பணியாளர் விற்பனை பிரதிநிதிகள் | 65,000/- 90,000/- +OT |
| | துப்பரவு பணியாளர் (ஆண்/பெண்) தொழிலாளர்கள் அச்சக பணியாளர் - பெண்கள் | 45,200/- |
| கட்டார் | தண்ணீர் போத்தல் தொழிற்சாலை தொழிலாளர் பணியாளர்கள் | 56,000/- 120,000/- |
| சவுதி | பிளாஸ்டிக் தொழிற்சாலை இயந்திர இயக்குனர்கள் | 56,000/- |
| குவைத் | ஹொட்டேல் பணியாளர்கள் Dish Washer/Steward | 46,350/- |

குறிப்பு: பணி ஒப்பந்தம் பெற்ற பின்னரே பயணக் கட்டணம்
விபரங்களுக்கு 0777 324 004
TGL Trans Gulf (Pvt) Ltd.,
SIKARAM ACADEMY
90, First Floor, Chatham Street, Colombo 1 T.P: 0114 426 222
021 - 222 00 11
(சி-1908)

### பதவிக்கான தேடல்

சர்வதேச ரீதியில் இயங்கிவரும் எமது நிறுவனத்தின் புதிய கிளைகள் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு ஆகிய இடங்களில் ஆரம்பமாக உள்ளதால் 6 வகையான பதவி வெற்றிடங்கள் நிரப்பப்படவுள்ளன.
● O/L, A/L உள்ளவர்கள் உடனே அழையுங்கள்.
● O/L இல்லாதவர்களுக்குமான விசேட வாய்ப்புக்கள்.
● அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. தொடர்பு:
● வயதெல்லை 18 - 30. 0778485328, 0215679002
(3251)

ALLIANCE FRANÇAISE DE JAFFNA
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af பிரெஞ்சு மொழி
➤ பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSYயின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANÇAISE மட்டுமே
➤ அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
➤ யாரும் படிக்கலாம். www.ambafrance-lk.org
021 222 8093 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்
(1902)

Study in Australia
WESTERN SYDNEY UNIVERSITY, Charles Sturt University, MACQUARIE UNIVERSITY, EDITH COWAN, ECU, JAMES COOK UNIVERSITY, DEAKIN COLLEGE, DEAKIN, UNIVERSITY OF CANBERRA, LA TROBE UNIVERSITY, Griffith UNIVERSITY, Southern Cross University, THE UNIVERSITY OF NEWCASTLE AUSTRALIA, Curtin University
Why Study in Australia?
- After G.C.E. O/L or G.C.E A/L or Degree
- Foundation / Diploma / Bachelors / Masters
- IELTS Not Compulsory*
- Student Loan Accepted, Relatives Can Sponsor
- இலகு Visa நடைமுறைகள்
- குறைந்த பாடநெறிக் கட்டணங்கள்
- பகுதி நேர வேலை வாய்ப்புகள் (20Hours per week)

Admission open for 2018 Intakes
* Conditions Applied
Admission Help line
077 3013060
ICS DREAM BEYOND BOARDERS Foreign Education Services
77, மணிக்கூட்டு கோபுரவீதி, யாழ்ப்பாணம்
107, B 1/1 Galle Road, Colombo - 06
(சி-1909)

உங்கள் தொழில்வாய்ப்பை பன்மடங்கு அதிகரிக்க
அரசினால் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்
குறுகிய காலத்தில் முழுமையான
### ஆங்கிலம்

கொழும்பு நகரில் 25 வருடங்களுக்கு மேலாக பல லட்சக்கணக்கான மாணவர்களுடைய வாழ்க்கைக்கு ஆங்கிலக்கல்வி மூலம் ஒளியூட்டி வெற்றிகரமாக இயங்கிவரும் "நல்ரவி ஆங்கில கல்வி நிலையம்" இப்பொழுது
சாவகச்சேரியில்

ஒரு ஆங்கில கற்கைநெறியை பூர்த்திசெய்து இரு சான்றிதழ்களை பெற்றுக்கொள்ளுங்கள்:
இலங்கை அரசினால் அங்கீகரிக்கப்பட்ட ஆங்கிலமொழி சான்றிதழ் + உலகின் தலைசிறந்த கேம்பிரிட்ஜ் ஆங்கிலமொழி சான்றிதழ்

மேலதிக சிறப்பம்சங்கள்:
- உலகின் தலைசிறந்த கேம்பிரிட்ஜ் ஆங்கில ஆசிரியர் தகைமை பெற்ற ஆசிரியர் குழுமம்
- இலக்கணம், சொல்விருத்தி, கேட்டல், பேசுதல், வாசித்தல், எழுதுதல் உட்பட்ட முழுமையான ஆங்கிலம்
- வசதிகளுடன் கூடிய குளிரூட்டப்பட்ட நவீன வகுப்பறைகள்
- நூலக வசதிகள்
- பேச்சு ஆங்கிலத்திற்கு மிக, மிக, அதிக முக்கியத்துவம்
- பிரித்தானிய உச்சரிப்பு மற்றும் பேச்சுநடை போன்றவற்றை கற்று பேச்சு ஆங்கிலத்தை மேலும் மெருகூட்ட நல்ரவி குழுமத்தின் ஸதாபகர் உயர்திரு. நல்ரவி அவர்களால் இலவச சிறப்பு பயிற்சிப்பட்டறை

➡ மிகவும் குறைந்த கட்டணத்தில் அதிக தரம்வாய்ந்த ஆங்கிலகல்வி
➡ ஆங்கிலம் சற்றேனும் தெரியாதவர்கள் கூட மிகவும் இலகுவான முறையில் ஆங்கிலம் கற்றுக்கொள்ள பயிற்சிகள்

மேலதிக விபரங்களுக்கு : 0777 3636 56
NALRAVI ENGLISH LANGUAGE LEARNING
கொழும்பு நிலையம் : 85/1A 1/2 St.Anthony's Mawatha Colombo 3
சாவகச்சேரி நிலையம் : 267 கண்டி வீதி (A9 வீதி) சாவகச்சேரி (சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு அருகில்)
(3213)

Techno World
வெலிங்டன் சந்தி (லிங்கன் கூல்பார் அருகாமை) – யாழ்
A/L தொழில்நுட்ப பிரிவு
2018, 2019, 2020, Day Class
அனுமதிகளை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.
தொடர்புக்கு : 077 017 5346
● பொறியியல் தொழில்நுட்பம்
● உயிர் முறைமைகள் தொழில் நுட்பம்
● தொழில் நுட்பத்திற்கான விஞ்ஞானம்
● மூன்றாவது தெரிவுப் பாடங்கள் அனைத்தும்

### கண்ணீர் அஞ்சலி

உதயன் சவுண்ட் - உரிமையாளரின் மகன்
சச்சிதானந்தம் சாரங்கன்
பிறப்பு: 27.11.1995 – இறப்பு: 14.03.2018



உதயன் சவுண்ட் உரிமையாளரின் மகன் சச்சிதானந்தம் - சாரங்கன் அவர்கள் கடந்த (14.03.2018) புதன்கிழமை அன்று காலமான செய்தி அறிந்து மிகுந்த துயர் அடைகின்றோம். அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
உதயன் சவுண்ட் பணியாளர்
த.நிருஜன்
(சி-1910)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.03.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.